(5) I have been way-ward. Now I have learnt to be mindful of my own good to sing and praise Thy sacred feet at this dancing hall of Chidambaram abounding in bee-haunted groves, Oh Lord! all the world praises Thy dancing!

(6) Having seen thee I who have come all the way to see Thy dance at this hall of Chidambaram, shall seeing praise thee sing and dance ; call thee the Lord of Lords, Chief of the three, He who rids His devotees of all sins!

(7) Be so gracious unto me that I may give up falsehood and follow Thee for ever as a slave ; Oh first of things, the first Lord ; I came all the way to see this lovely dance ; Thy dance at Chidambaram far-famed throughout the world.

(8) What could I do with a mind confused, and pursuing only ways most ignoble? Oh Lord with the stained throat, I came all the way to see Thy dance, here at Chidambaram, where the Vedas do not suffer any detraction even to the minutest extent.

9. நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப் பிரியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே நீ
மஞ்சடை சோலைத் தில்லை மல்கு சிற்றம் பலத்தே
அஞ்சொலாள் காண நின்று வழகநீ யாடுமாறே.

[அஞ் = அழகு]

10. மண்ணுண்ட மாலவனு மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்கதில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே.

(9) Thou hast not purified my mind nor made me think what I should think ; deceive me not Oh ! Lord of the Celestials ! How wonderful is Thy dance with the sweet spoken maiden at Chidambaram abounding in cloud-capped groves.

(10) Vishnu who swallowed up the earth ; and Brahma who is seated on the lotus wished to see but could not behold Thy heaven-transcending frame. How wonderful is Thy dance, accompanied by music and measure at Chidambaram abounding in boundless prosperity.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (3)

5. கோயில்

திருவிருத்தம் பண்—கொல்லி

1. பாளையுடைக் கமுகோங்கிப் பன்மாட நெருங்கி
யெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறிவாழ் வயற் றில்லை
தன்னுள்
ஆளவுடைக் கழற் சிற்றம்பலத் தரனாடல் கண்டாற்
பீளையுடைக் கண்களாற் பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்னே.

[வாளை = ஓர் மீன்]

2. பொருவிடை யொன் றுடைப் புண்ணிய மூர்த்தி
புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாளனுலகுக் கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
றிருவடியைக் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே.

[யதளன் = தோல்]

3. தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங் கொண்டெப்
பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்து பொன்னாகிய தில்லைச்
சிற்றம்பலவன்
உடுத்த துகில் கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே.

[துகில் = வஸ்திரம்]

CHIDAMBARAM V.—THIRUNAVUKKARASU (iii).

(1) What else should one see with these mortal eyes having seen the Lord of Lords dance at Chidambaram, where the areca palms shoot high and the crowded mansions reach the sky, where the perch jumps in the water and prosperity is everywhere ?

(2) What else is worth seeing with these eyes, that have seen the Lord mounted on the war-like bull, the Lord wearing the tiger-skin, with the lovely Lady by his side, daughter of the Mountain King, and seen the sacred feet of Him who dances at Chidambaram, where prosperous Brahmins live ?

(3) What shall these eyes see that have seen the lovely garments worn by the Lord of Golden Chidambaram, ash-be-smeared transcending the ken of Brahma and Vishnu who worship ever with flowers incense and sandal-paste ?

4. வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தே னனிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண்டாற் பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே.

[பிச்சன்=பித்தன்]

5. செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து
நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணி
மிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண்டாற் பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே.

6. ஊனத்தை நீக்கி யுலகறிய வென்னையாட் கொண்டவன்
தேனைத் தெனக்கினியான் றில்லைச் சிற்றம் பலவ
னெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்ட கண்டத்
திலங்கும்
ஏனத் தெயிறு கண்டாற் பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே.

[ஏனத்து=திருமாலாகிய பன்றி. எயிறு=பல்]

7. தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ் செந்தீயின் மூழ்க
எரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே.

(4) Oh Lord Namasivaya! I have given up all fear being assured that all sanctity secured is safe. Oh insane of mind! unborn Lord, round whose waist is tied the beautiful serpent, having seen your beautiful dance, what else shall these eyes crave for ?

(5) What else is there for devotees to see, who have seen the Lord of lotus-abounding Chidambaram look with delight on the daughter of the Mountain-King with collyrium-fed eyes ; the Lord whose blue-throat is as beautiful as a lovely lamp ghee-fed ?

(6) The Lord of Chidambaram destroyed all defects in me and took possession of me. He is sweet to me as honey ; He swallowed ocean-poison, that the celestials may live. Having seen that poison-marked throat and the boar's tusk that he wears as an ornament, what else should these eyes desire to see ?

(7) Of what use is it to see anything after having seen the smile on the face of the Lord of Chidambaram abounding in devotees who bear in their hearts his sacred feet, the Lord who burnt with an arrow the floating cities ?

8. சுற்று மமரர் சுரர்பதி நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோ மென்றழைப்ப பரவையு ணஞ்சை
யுண்டான்
செற்றங் கனங்கனைத் தீவிழித்தான் றில்லை யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக்
காண்பதென்னே.

[பரவை = கடல். அநங்கன் = காமன்]

9. சித்தத் தெழுந்த செழுங்கமலத் தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே.

10. தருக்கி மிகுத்துத் தன்றோள் வலியுன்னித்
தடவரையை
வரைக் கைகளா லெடுத்தார்ப்ப மலைமகள் கோன்
சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை யம்பலவன்
நெருக்கி மிதித்தவிரல் கண்ட கண்கொண்டு காண்ப
தென்னே.

[தருக்கு = செருக்கு]

(8) Of what use is it to see anything else having seen the third eye of the Lord on his fore-head ; the eye with which He turned to ashes Cupid ; the Lord who ever-surrounded by the Gods and the celestials saved them by swallowing ocean-poison ?

(9) What else shall we see with our eyes, we who have seen those beautiful eyes radiant as pearls and gems of the Lord of Chidambaram where abide devotees who keep for ever in their pure hearts the sacred feet lovely as the red-lotus ?

(10) What else need we see with our mortal eyes who have seen, the Lord that crushed the ten-heads of Ravana when irreverently and with much conceit, he strove to raise Mount Kailas whereon sat the Lord with the daughter of the Mountain-King ?

---

6. கோயில்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (4)

திருவிருத்தம் பண்—கொல்லி

1. கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதிலெய்ய வல்லானைச் செந்தீ முழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச் சிற்றம் பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர்கோ னென்று வாழ்த்துவனே.

[செரு=போர்]

2. ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூன மில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவர்க்காச்
சென்று தொழுமின்க டில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாயென்னு மெம்பெருமான்றன் றிருக் குறிப்பே.

[ஊனம்=குறைவு]

3. கன்மன வீர்கழி யுங்கருத்தே சொல்லிக் காண்ப தென்னே
நன்மன வர்நவி றில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
பொன்மலையில் வெள்ளிக் குன்றதுபோலப் பொலிந் திலங்கி
என் மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவ டில்லையே.

CHIDAMBARAM VI.—THIRUNAVUKKARASU (4).

(1) I praise Him as the Lord of the celestials, who has the black-throat, is the Lord of all the universe, large and generous hearted Lord! He was able to destroy the warring three cities; He dances with the red fire blazing, the Lord of Chidambaram in the Hall of Dance!

(2) Sit down in solitary meditation on Him, O ye people you will suffer no harm. Worship Him, for, for His devotees He spurned the Lord of Death! He dances at the Hall of Dance, at Chidambaram. Understand its significance!

(3) O ye of stony heart, of what profit is it to speak and see only what is past? In Chidambaram filled with good people, He who dances in the Hall of Dance, like a silver hill on a golden mount, He has entered my heart and invisible are his in-going footsteps.

4. குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன்மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்
பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

5. வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீ வளைத்தான் றில்லை
யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன்றோ நந்தங்
கூழைமையே.

[பார்த்தன் = அருச்சுனன். கூழைமை = கடையின்மை]

6. பூத்தன பொற்சடை பொன்போன் மிளிரப் புரி
கணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசைவண்டுகள் பாடுசிற்றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல்லா ருளரோ வென்றன்
கோல்வளைக்கே.

7. முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னோக்கு முறு
வலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்த வெண்ணீறுஞ் சுரி
குழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலு மென்பாவி
நெஞ்சிற்
குடிகொண்ட வா தில்லை யம்பலக் கூத்தன் குரைகழலே

(4) A human birth is worth while if it enables one to see the arched brows, the smile on the lips, Vedas *Kovvai* fruit, the matted locks, the coral frame covered with milk-white ashes, and the golden feet of the Lord.

(5) Rejoice that we have been gifted with this birth of bondak to Him who gave Arjuna, the Pasupatha arrow, who burnt the three inimical cities and dances at Chidambaram! Be devoted to Him.

(6) The lovely locks flashed like gold ; the hosts danced ; the Elements clapped hands and shouted and danced ; is there aught equal to the dance of the Lord at Chidambaram resonant with the sound of the bees ?

(7) The datura on the crown, the look of the Triple Eyes, the lovely smile, the hand bearing the drum, the sacred ashes, the maid at the side, the skin of the springing Tiger, the sounding anklets all these have found lodgment in my heart.

8. படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்செ னாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப்பும் முனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் றொழுது வணங்கித் தூநீ றணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம்பலத் தரனே.

[இடைக்கலம் = அஞ்சோம்]

9. பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து புரிசடைக்கண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்கர் வேடச்
சின்னத்தி னான்மலி தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்னத்த னாடல்கண் டின்புற்றதா லிவ் விருநிலமே.

[விடங்கர் = அழகர்]

10. சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னான்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன்றோ நம்மையாட் கொண்டதே.

[வீட = அழிக்க]

(8) As a weapon I have adopted on my tongue the five letters of Thy name ; I fear nothing for I shall serve Thee through seven generations ; even if thou repel me, I shall not go away ; I shall bow down and worship with ashes smeared on me and take refuge in Thee. Oh Lord of Chidambaram.

(9) Wearing the white ashes on the golden body, with waving locks shining radiantly, is the beautiful Lord who begs his food. He is disguised as a hunter ; His dance is so magnificent, that all the world rejoices to see it.

(10) Thou didst ruin Thakka's wicked sacrifice ; destroyed death ; and transcended the knowledge of Brahma and Vishnu. It is Thy sacred feet with which Thou dancest here at Chidambaram, that have accepted my services.

---

7. கோயில்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (5)

திருக்குறுந்தொகை

1. அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

2. அரும்பற் றப்பட வாய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும் பற்றபுலி யூரெம் பிரானையே.

[சிலை = வில்]

3. அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றப்பல பேசப்படா முனந்
திருச்சிற்றம் பலஞ் சென்றடைந் துய்ம்மினே.

4. அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயுந்
தில்லைமா நகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

[தொந்தம் = இருவினை]

CHIDAMBARAM VII.—THIRUNAVUKKARASU (5).

(1) Chidambaram affords us sustaining food and radiant water. Will it further give me the blessing of birth by which my heart could rejoice beholding for ever the dance of the Lord ?

(2) May you worship with fully blossomed flowers free from humming bees, the Lord of Peruṁ-parra puliyur who in His anger slew Cupid of the sugar-cane bow !

(3) Ere yet your misdeeds overwhelm you, the fires surround your corpse and the neighbours laugh and speak diversely as it pleaseth them, seek the Lord of Chidambaram and be saved.

(4) How can misery or evil deeds or old-timed sins afflict one who is the devoted slave through endless times unto the Lord of Chidambaram ?

5. ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நானிலாவி யிருப்ப னென் னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே.

[ஊனில் = சரீரத்தில்]

6. சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே

[சிட்டர் = மேலோர். செறு = பகை]

7. ஒருத்த னாருல கங்கட் கொருசுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்தனா ரிளையார் விடமுண்ட வெம்
அருத்த னாரடி யாரை யறிவரே.

8. விண்ணி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த விருவர்க் கறிவொணாக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத்
துண்ணி றைந்து நின்றாடு மொருவனே.

9. வில்லைவட் டப்பட வாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதின் மூன்றுடன் மாய்த்தவன்
றில்லைவட் டத்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே.

[ஒல்லை = விரைவில்]

(5) As long as life functions in the body, I shall be associated with the Lord and He the Lord of honey-sweet Chidambaram will make me be with Him in heaven after death.

(6) Whoever worships the lovely feet of Him who abides at Chidambaram abounding in noble souls and resorted to by all those who seek His grace, him death will not approach.

(7) The Lord recognizes his devotees, He that is unique, a flame of light to light all the world, Lord of Chidambaram, He that is old, He that is young, He who swallowed poisons to save the Gods.

(8) He filled up all the universe as one huge flame, the top and bottom of which were beyond the cognizance of Brahma and Vishnu. He is a Lord one and unique who dances at Chidambaram surrounded by honey-abounding groves.

(9) Even those who worship turning in the direction of Chidambaram will quickly be rid of their sins, for it is the abode of Him who bending His bow shot down the three valiant cities of his enemies.

10. நாடி நாரண னான்முக னென்றிவர்
தேடி யுந் திரிந்துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே.

11. மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
அதிரவார்த் தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே.
[திற = நொறுங்க]

(10) How could Vishnu and Brahma wandering everywhere seeking the feet of Him who abides in many-mansioned Chidambaram succeed, when they are firmly planted inside my heart?

(11) Seek salvation of the sacred feet of Him who has the sweet-spoken maid at His side, Lord of wisdom, the Lord who trampled on Ravana with such force that he was crushed when he tried to lift up Mount Kailas the Lord who abides at Chidambaram !

8. கோயில்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (6)

திருக்குறுந்தொகை

1. பணைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந் துய்வனே.

[வேழம் = யானை]

2. தீர்த்தனைச் சிவனைச் சிவ லோகனை
மூர்த்தியை முதலாய வொருவனைப்
பார்த்த னுக்கருள் செய்த சிற்றம்பலக்
கூத்தனைக் கொடியேன் மறந் துய்வனே

3. கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்டனைப் பொழுதும் மறந் துய்வனே.

[எட்டனை = எள் அளவு]

4. மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலா மாளக் கொடுத்தவென்
ஆணியைச் செம்பொ னம்பலத் துண் ணின்ற
தாணுவைத் தமியேன் மறந்துய் வனே.

[மாணி = பிரமசாரி. தாணு = சிவன்]

CHIDAMBARAM VIII.—THIRUNAVUKKARASU 6.

1. How shall I ever attain to salvation if I forget even for a moment, the Lord who stripped off the skin from the formidable elephant, whose trunk was as a palmyra and which was rutting with the flow of the three-fold juice; the Lord who makes a temple of the heart of those who meditate on Him and in many disguises dances at Chidambaram?

2. How shall I attain to salvation if I forget the Lord of the sacred waters, Lord Siva, Lord of Sivaloga, the foremost of the Gods, he who gave Pasupatha arrow to Arjuna, the Lord who dances at Chidambaram?

3. How shall I attain to salvation, if even to the least extent I forget the Lord who has the snake as His waistband, bears on his hand the skull and the deer, and dances amid wild fires, and dances in the hall of dance at Chidambaram where abide the devotees?

4. How shall I attain to salvation if I forget the Lord who gave all the world to rule, to him who worshipped Him, pouring milk on Him, the Lord who firm as a nail, dances in the golden hall of dance at Chidambaram?

5. பித்தனைப் பெருங்கா டரங்கா வுடை
முத்தனை முளைவெண் மதி சூடியைச்
சித்தனைச் செம்பொ னம்பலத் துண்ணின்ற
அத்தனை யடியேன் மறந் துய்வனோ.

[அரங்கா = சபை]

6. நீதியை நிறைவை மறை நான்குடன்
ஓதியை யொருவர்க்கு மறி வொணாச்
சோதியைச் சுடர்ச் செம்பொனி னம்பலத்து
ஆதியை யடியேன் மறந் துய்வனோ.

7. மைகொள் கண்டனெண் டோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்பலத் தெங்கள்
ஐயனை யடியேன் மறந் துய்வனோ.

[பை = படம்]

8. முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்த சிற்றம்பலக் கூத்தனை
இழுதையேன் மறந் தெங்ஙன முய்வனோ.

[இழுதையேன் = அறிவிலேன்]

5. How shall I attain to salvation, if I forget the insane Lord, who having the vast forest for his hall of dance, has a crescent on his forehead? Ancient of Days fulfiller of our vows and dancer at the Golden Hall of dance at Chidambaram!

6. How shall I attain to salvation, if I forget the Lord who is Justice, Completeness, Chanter of the four Vedas, Incomprehensible, blaze of light, dancer at the Golden hall at Chidambaram?

7. How shall I attain to salvation, if I forget the Lord whose eyes have drunk collyrium, the eight-shouldered triple-eyed Lord, with a hooded snake as his waistband, the Lord of Chidambaram where abides the Goddess of Prosperity?

8. How shall I the foolish attain to salvation, if I forget the Lord who dances at Chidambaram with all the Gods in the worlds celestial, praising Him, worshipping Him in the hall, roofed over with gold plates?

9. காருலா மலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கிலா வமுதை மறந் துய்வனே.

[வாரு = கச்சு]

10. ஓங்கு மால்வரை யேந்தலுற் றான் சிரம்
வீங்கி விம்முறத் தான்றிய தாளினன்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கிலாத் தொண்டனேன் மறந் துய்வனே.

9. How shall I attain to salvation, if I forget the Lord who wears the bee-haunted Cassia flowers, consort of the maid whose breasts are bound by a band, inexhaustible Nectar, the Lord dancing at Chidambaram, in whose streets cars roam about ?

10. How shall I the servant attain to salvation, if I forget Him who, when Ravana lifted up the high-soaring Mount Kailas, pressed with His toe, so that the ten heads were crushed, He the dancer at Chidambaram, surrounded by water-fed fields ?

9. கோயில்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (7)

பெரிய திருத்தாண்டகம்

1. அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை
 யருமறையி னகத்தானை யணுவையார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
 திகழொளியைத் தேவர்க டங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
 கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

2. கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
 காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதினானை
அற்றார்க்கு மலர்ந்தார்க்கு மருள் செய்வானை
 யாரூரும் புகுவானை யறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை
 வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

[மலந்தார் = துன்புடையார்]

3. கருமானி னுரியதளே யுடையா வீக்கிக்
 கனைகழல்கள் கலந்தொலிப்ப வனல்கை யேந்தி
வருமானத் திரடோள்கள் பட்டித் தாட
 வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி

CHIDAMBARAM IX.—THIRUNAVUKKARASU 7.

1. Those are days unborn and unprofitable, wherein one does not speak the praise of Him who is unique, the object of the meditation of the wise, the core of all the Vedas, small as the atom, philosopher, honey, milk, radiant light, Lord of the Celestials, one with Vishnu and Brahma, with fire, and wind and raging water and soaring mountain, the Lord of Perum-patra-puliyur.

2. Those are days unborn and unprofitable, when one does not sing of the Lord learned, wearer of the Ganges on his locks, Lord abiding at Thiruvalanjuzhi washed by the waters of the Cauvery, gracious unto the unattached and the unhappy, Lord of Tiruvarur, worshipped always by the Celestials, the Lord of Perum-patra-puliyur.

3. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord, who wears a buck's skin, and dances, bearing fire in his hand, until the anklets ring with

அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
வமரர்கண முடிவணங்க வாடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

[அதள் = தோல். வாண் = ஒளி.]

4. அருந்தவர்க டொழுதேத்து மப்பன் றன்னை
யமரர்க டம்பெருமானை யரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் றன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணுந்
திருந்தொளிய தாரகையுந் திசைக ளெட்டுந்
திரிசுடர்க ளோரிரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

[தாரகை = நக்ஷத்திரம்]

5. அருந்துணையை யடியார்தம் மல்ல றீர்க்கு
மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப்
பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்ற புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

music, the eight shoulders move, the crescent moon shines on the locks, the deer-eyed lady looks radiantly and all the celestials worship.

4. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord whom all performers of austerities worship, the Lord of the Celestials, Siva, He who bestowed nectar upon the Gods, Himself the sounding ocean, soaring rock, earth, heaven, radiant stars, the eight directions and the two lights, the sun and the moon, and all else besides, the radiant Lord of Perum-patra-puliyur.

5. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord who is the rarest of helpers, one who rids devotees of all difficulties, serving as the medicine of medicines, helpful unto those being born in the wide earth, have given up allies, kindred and all attachments, disciplining the senses and discarding even the enjoyment of women, the Lord of Perum-patra-puliyur.

6. கரும்பமரு மொழிமடவாள் பங்கன் றன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சியானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் றன்னை
யருமறையோ டாறங்க மாயினானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென்னூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கிலா விளக்கைமிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

[துளக்கில்—நடுக்கம்]

7. வரும்பயனை யெழுநரம்பி னோசையானை
வரைசிலையா வானவர்கண் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
வம்மானை யலைகடனஞ்ச யின்றான் தன்னைச்
சுரும்பவிழுங் குழன்மடவார் கடைக்க ணோக்கிற்
றுளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

[யவுணர்—அசுரர்]

8. காரானை யீருரிவைப் போர்வையானைக்
காமருபூங் கச்சியே கம்பன் றன்னை
ஆரேனு மடியவர்கட் கணியான் றன்னை
யமரர்களுக் கறிவரிய வளவிலானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை யெண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

6. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord of the Maid whose words are sweet as sugar-cane, hillock of radiant diamond, wearer of cassia bud and blossom, He that is the Vedas and the six Sastras, the radiant Lord of South Aroor surrounded by fragrant groves, the unshaken flame, the noblest substance, the Lord of Perum-patra-puliyur.

7. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord who is future gain, the sound of strings, He who burnt the cities of the Rakshasas by taking the Himalaya as his bow in defence of the celestials, the great help and advantage of those whose thoughts are not entangled in the looks of beautiful women with scented flowers in their hair, the Lord of Perum-patra-puliyur.

8. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord who wears the stripped skin of the white elephant, Lord of Conjeevaram full of fragrant flowers, ornament of his devotees, transcending the reach even of the Gods, radiant flame, that dances to the admiration of those in earth and in heaven, the Lord with countless names, the Lord of Perum-patra-puliyur.

9. முற்றாத பான்மதியஞ் சூடினானை
மூவுலகுந் தானாய முதல்வன் றன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் றன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் றன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

[குழகன்=இன்மையானவன்]

10. காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தயனுங் காணா வண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு
மேழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

9. Those are days unborn and unprofitable, when one does not praise the Lord who wears the crescent moon, who is Himself the three worlds and the Lord thereof, did destroy the three cities of His enemies, radiant gem, emerald, honey, milk, the youthful Lord who abides at Kuttalam, the dancing Lord, Lord of Wisdom, Lord of Perum-patra-puliyur.

10. Those are days unborn and unprofitable when one does not praise the Lord, who transcended the black-bodied red-eyed Vishnu and the fragrant flower-seated Bramha, standing out as a radiant flame of fire, ridding all people of delusion, reaching beyond the Heavens and the Universe overpassing the seven worlds, the great light, the Lord of Perum-patra-puliyur.

10. கோயில்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (8)

புக்க திருத்தாண்டகம்

1. மங்குன் மதிதவழு மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றாலத்தார்
குடமூக்கி லுள்ளார் போய்க்கொள்ளம் பூதூர்த்
தங்குமிட மறியார் சால நாளார்
தருமபுரத் துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ்சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே.

[மங்குன் = மேகம்]

2. நாகமரைக் கசைத்த நம்ப ரிந்நா
நனிபள்ளி யுள்ளார்போய் நல்லூர் தங்கிப்
பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப்
பரிதி நியமத்தார் பன்னிருநாள்
வேதமும் வேள்விப் புகையு மோவா
விரிநீர் மிழலை யெழுநாட் டங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு மானார்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே.

[நாகம் = சர்ப்பம்]

CHIDAMBARAM X.—THIRUNAVUKKARASU 8.

1. The Lord of Mylapore were the clouds roll over the tops of tall mansions, the Lord of Thirumarugal the Lord of Kodumudi, the Lord of Kuttalam, the Lord of Kumbakonam, the Lord of Thirukolamputhoor, He knows not where to stay, the Lord Eternal,. Lord of Dharmapuram, Lord of Thakkaloor, He has entered the lovely hall of Chidambaram covered with radiant white ashes and surrounded by His host of elements.

2. The Lord of Nannipalli, with the serpent for His waistband, halted awhile at Nalloor and a part of his time at Pasoor, for twelve days according to the course of the Sun, stayed for seven days at water-fed Mizhalai enjoying the chanting of the Vedas and the incense of sacrifice; He has given himself up to enjoyment of what is unstable, He who had entered Chidambaram for dancing in the hall of dance.

3. துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலுந்
தூமதியும் பாம்புமுடை யார்போலும்
மறங்காட்டி மும்மதிலு மெய்தார் போலு
மந்திரமும் தந்திரமுந் தாமேபோலும்
அறங்காட்டி யந்தணர்க்கன் றால நீழ
லறமருளிச் செய்தவர னிங்காட்
புறங்காட் டெரியாடிப் பூதஞ் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே.
[புறங்காட்டு = மயானம்]

4. வாரேறு வனமுலையாள் பாகமாக
மழுவாள் கையேந்தி மயானத்தாடிச்
சீரேறு தண்வயல்சூ ழோதவேலித்
திருவாஞ்சி யத்தார் திருநள்ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடனஞ்சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.
[சூழோதம் = கடல்]

5. காரார் கமழ்கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலங்கை யேந்திக் கணங்கள் பாட
ஊரா ரிடும்பிச்சை கொண் டுழலும்
உத்தமராய் நின்றவொரு வனார்தாஞ்
சீரார் கழல்வணங்குந் தேவ தேவர்
திருவாரூர்த் திருமூலட்டான மேயார்
போரார் விடையேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

3. He set the example of asceticism, wearer of the Crescent and the Snake, shot down the valiant forts of enemies, was himself all Mantra and Tantra, taught the Rishis under the Banyan tree and of His grace gave to the world all Law and Justice, the Lord of the Hall of Dance at Chidambaram, He danced with the elements at the cemetery.

4. He has by His side the lovely-breasted maid, the maid whose lovely breast is tied with a band, He bears the fire and sword in His hand, He dances in the cemetery, abides at Tiruvangiam, surrounded by the cool fields and washed by the sounding ocean ; the Lord of Tirunallar, He with the black stain on his throat, radiant with the eye in the forehead with which He burnt down Cupid, He who swallowed Ocean-poison, He riding on a warlike bull and surrounded by his host of elements, entered Chidambaram to dance in the Hall of Dance.

5. The Lord of Tiruvarur and of Tirumoolasthanam with a coronal of sweet scented cassia, bearing a skull in His hand, with the elements singing around Him, accepting the alms of the villagers the noble Lord, unique, and worshipped by all the Gods ; He has mounted the warlike bull and with His hosts around Him has entered Chidambaram to dance in the hall of Dance.

6. காதார் குழையினர் கட்டங் கத்தார்
கயிலாய மாமலையார் காரோணத்தார்
மூதாயர் மூதாதை யில்லார் போலும்
முதலு மிறுதியுந் தாமேபோலும்
மாதாய மாதர் பகிழ வென்று
மன்மதவேள் தன்னுடலங் காய்ந்தாரிந்நாட்
போதார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

[கட்டங்கத்தர்=ஓர் ஆயுதத்தர், அழகிய சரீரர். மதவேள்= மன்மதன்]

7. இறந்தார்க்கு மென்று மிறவா தார்க்கு
மிமையவர்க்கு மேகமாய் நின்றுசென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவா தார்க்கும்
பெரியான்றன் பெருமையே பேசநின்று
மறந்தார் மனத் தென்று மருவார் போலு
மறைக்காட் டுறையு மழுவாட் செல்வர்
புறந்தார்சடை தாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

[மழு=ஓராயுதம்]

8. குலாவெண் டலைமாலை யென்புபூண்டு
குளிர்கொன்றைத் தாரணிந்து கொல்லேறேறிக்
கலாவெண் களிற்றுரிவைப் போர்வைமூடிக்
கையோ டனலேந்திக் காடுறைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்டமாட
நிறைவயல்சூழ் நெய்த்தான மேயசெல்வர்
புலால்வெண் டலையேந்திப் பூதஞ்சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

6. With ornaments in His ear and fire weapon in His hand, the Lord of Kailas and of Karonam one without ancestors, Himself the beginning and the end, He that burnt Cupid that all women may rejoice, He with His long locks and surrounded by His hosts, entered Chidambaram to dance in the Hall of Dance.

7. To the dead and the undying, to the celestials, to those born and unborn, to those that praise Him and those that forget Him is a fire-bearing Lord of Maraikattoor, Who with His long locks and surrounded by His hosts has entered Chidambaram to dance in the hall of dance.

8. Wearing a garland of skulls, wearing a cool garland of cassia, wrapping Himself in the skin of a white elephant, bearing fire in His hand and living in a forest, is the Lord of field-surrounded Tirunaithanam, whose mansions rising high suck down the white Moon. He, the Lord bearing a skull in His hand, has gone forth with His hosts and entered Chidambaram to dance in the Hall of Dance.

9. சந்தித்தகோ வணத்தர்வெண் ணூன்மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோமின்னாட்
பந்தித்த வெள்விடையைப் பாயவேறிப்
படுதலையி லென்கொலோ வேந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமுமெல்லா
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம்பற்றப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

10. பாதங்க ணல்லார் பரவியேத்திப்
பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர்தங்கள்
ஏதங்க டீரவிருந் தார்போலு
மெழுபிறப்பு மாளுடைய வீசனார்தாம்
வேதங்க ளோதியோர் வீணையேந்தி
விடையொன்று தாமேறி வேதகீதர்
பூதங்கள் சூழப்புலித் தோல்வீக்கிப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

[ஏதம்=துன்பம்] [வீக்கி=விசித்து]

11. பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன்றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழநட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார்தம்மைத்
தில்லைச் சிற்றம்பலத்தே கண்டோமின்னாள்
விட்டிலங்கு சூலமேவெண் ணூலுண்டே
யோதுவதும் வேதமே வீணையுண்டே
கட்டங்கங் கையதே சென்றுகாணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலியார்க்கே.

[பாரிடம்=பூதம்] [கறை=விஷக்கறை]

9. Did you meet Sankara with a well-tied waist cloth, radiant white thread on His chest? Yes we saw Him mounted on a bull, bearing a skull in His hand, with His radiant maid bearing white bangles, with the elements carrying the golden lamp entering Chidambaram to dance in the Hall of Dance.

10. With his devotees propitiating His sacred feet and others serving Him with great piety that they may be rid of their pains, the Lord who is my master through seven births, chanting the Vedas, bearing the woman, mounting the bull, wearing the tiger's skin, surrounded by His hosts has entered Chidambaram to dance in the Hall of Dance.

11. Go forth and behold Him, clad in silk and skin, wearing a serpent, surrounded by hosts. I have seen Him this day at Chidambaram. I have seen His spear and white thread, heard Him chant Vedas and sing on the veena, seen also the fire in His hand.

கோயில் 11.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடு கரதலத்திற் றமருகமு
மெரியகலுங் கரியபாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

[தமர் = தூதர்] [கடுத்தம் = சர்ப்பம்]

2. போகாது காமத்திற் சென்றாற்போ
லன்றியே பிரியாதுள்கிச்
சீரார்ந்த வன்பாய்ச் சென்றாமுன்
னடிவீழுந் திருவினாரை
ஓராது தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

3. நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளும்புள்கிப்
பிரியாத வன்பாய்ச் சென்றாமுன்
னடிவீழுஞ் சிந்தையாரைத்

CHIDAMBARAM XI.—SUNDARAMOORTHY—1.

1. Rejoice O heart we are privileged not only to sing and dance before Him who once interfered and saved me, but when the servants of Hell tortures in the mill, He the Lord who wears the snake and dances about, is our own to save us.

2. Even with the devotion with which I pursued pleasure, I am devoted to Him who will save me from all the torture of Hell, for I have Him, the Lord of Chidambaram.

3. I parted myself from the deceitful and associating myself with Thy devotees, have sought Thy sacred feet, Thou surely wilt save me from the tortures to

தரியாது தருமனார் தமர்செக்கி
விடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

[உள்கி = உள்குழைந்து]

4. கருமையாற் றருமனார் தமர்நம்மைக்
கட்டியகட் டறுப்பிப்பானை
அருமையாந் தன்னுலகந் தருவானை
மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ்செய்யும்
பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

[கருமை = வஞ்சம், கரியோன்]

5. கருமானி னுரியாடைச் செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணியானை
உருமன்ன கூற்றத்தை யுருண்டோட
வுதைத்துகந்து வுலவாவின்பம்
தருவானைத் தருமனார் தமர்செக்கி
விடும்போது தடுத்தாட்கொள்வான்
பெருமானார் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

[கருமான் = யானை] [உரு = இடி] [உலவா = குறையா]

which the servants of Yama subject all people at the mill, for I have Thee O Lord of Chidambaram !

4. Rejoice that we have for ourselves the Lord of Chidambaram who will sever the bonds with which the servants of angry Yama will bind us, Him who gives us of His own accord a place in the celestial world and enables us also now to defy without paying taxes to the kings of the earth, the Lord ever great and glorious.

5. Rejoice we have Him for our own the Lord of Chidambaram wearer of the buck's skin on His body, and the white crescent on His lovely locks, wearer of the coronal, He that spurned the thunderlike Lord of Death, the bestower of undiminishing pleasure, the Lord who will save us from the tortures of the mill to which the servants of Yama subject men.

6. உய்த்தாட்டித் திரியாதே யுள்ளமே
யொழிகண்டா யூன்கணோட்டம்
எத்தாலுங் குறைவில்லை யென்பர்கா
ணெஞ்சமே நம்மைநாளும்
பைத்தாடு மரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவந்தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

7. முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி யென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும்போக
விட்டானை மலையெடுத்த விராவணனைத்
தலைபத்து நெரியக்காலாற்
றொட்டானைப் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

8. கற்றானுங் குழையுமா றன்றியே
கருதுமா கருதுகிற்றார்க்
கெற்றாலுங் குறைவில்லை யென்பர்கா
ணுள்ளமே நம்மைநாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

[கற்றானும் = கல்தானும். செற்றா = மோதி. பெற்றேறு = ரிஷபம்]

6. O Heart! wander not at will nor fasten thy desires on mere flesh, we shall suffer nothing, we have for ourselves the Lord of Chidambaram who wears the snake, bears the spreading locks, radiant of flames, ridder of sins, that insane dancer!

7. Have we not got for ourselves the Lord of the three thousand, who never fail at the three seasons of twilight and of noon to worship Him who rids His devotees of sin and who trampled on Ravana till his ten heads were crushed, the Lord that abides at Chidambaram?

8. O Heart those that are devoted to God melting even stone with their piety, shall want nothing. We have as our own the Lord of Chidambaram who mounted on His bull will come and save us when the servants of Yama seek to torture us in the mill.

9. நாடுடைய நாதன்பா னன்றென்றுஞ்
செய்மனமே நம்மைநாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய
சாக்கியர்க்கு மூடம்வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத் தெம
பெருமானைப் பெற்றாமன்றே.

[தாடு = வலிய]

10. பாரூரு மரவல்கு லுமைநங்கை
யவள்பங்கன் பைங்கணேற்றன்
ஊரூரன் றருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
ஆரூரன் றம்பிரா னாரூரன்
மீகொங்கி லணிகாஞ்சி வாய்ப்
பேரூரன் பெருமானைப் புலியூர்ச் சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே

---

9. O Heart be always good and obedient unto the Lord, for have we not as our own the Lord of Chidambaram who, making foolish the conceited Jains and mat—bearing Buddhists, shall save us from the tortures of the mill to which the servants of Yama subject men.

10. The Lord with the maid with beautiful eyes, at His side mounted on a bull, Lord of all cities, Lord of Tiruvarur, have we not Him this great Lord of Chidambaram for our own ? He will surely save us from the tortures of the mill to which the servants of Yama the Just might otherwise subject us.

---

11. திருவேட்களம்

திருஞான சம்பந்த சுவாமிகள்

1. அந்தமு மாதியு மாகிய
வண்ணலா ரழலங்கை யமர்ந்திலங்க
மந்த முழவ மியம்ப
மலைமகள் காண நின்றாடிச்
சந்த மிலங்கு நகுதலை
கங்கை தண்மதியம் மயலேததும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும்
வேட்கள நன்னக ராரே.

2. சடைதனை தாழ்தலு மேறமுடித்துச்
சங்கவெண்டோடு சரிந்து இலங்கப்
புடைதனிற் பாரிடஞ் சூழப்
போதரு மாரிவர் போல்வார்
உடைதனி னால்விரற் கோவணவாடை
யுண்பது மூரிடு பிச்சைவெள்ளை
விடைதனி யூர்தி நயந்தார்
வேட்கள நன்னக ராரே.

3. பூதமும் பல்கணமும் புடைசூழப்
பூமியும் விண்ணுமுடன் பொருந்தச்
சீதமும் வெம்மையு மாகிச்
சீரொடு நின்றவெஞ் செல்வ
ரோதமுங் கானலுஞ் சூழ்தருவேலை
யுள்ளங் கலந்திசை யாலெழுந்த
வேதமும் வேள்வியு மோவா
வேட்கள நன்னக ராரே.

4. அரைபுல்கு மைந்தலை யாடலரவ
மமையவெண் கோவணத்தோ டசைத்து
வரைபுல்கு மார்பி லோராமை
வாங்கி யணிந்த வர்தாம்
திரைபுல்கு தெண்கட றண் கழியோதந்
தேனலங்கா னலில்வண்டு பண்செய்ய
விரைபுல்கு பைம்பொழில் சூழ்ந்த
வேட்களை நன்னக ராரே.

5. பண்ணுறு வண்டறை கொன்றை
யலங்கல்பால் புரைநீறு வெண்ணூல்கிடந்த
பெண்ணுறு மார்பினர் பேணார்
மும்மதி ளெய்த பெருமான்
கண்ணுறு நெற்றிகலந்த வெண்டிங்கட்
கண்ணியர் விண்ணவர்கை தொழுதேத்தும்
வெண்ணிற மால்விடை யண்ணல்
வேட்களை நன்னக ராரே.

6. கறிவளர் குன்ற மெடுத்தவன்
காதற்கண் கவரைங்கணை யோனுடலம்
பொறிவளரா ரழலுண்ணப்
பொங்கிய பூத புராணர்
மறிவள ரங்கையர் மங்கையோர்பங்கர்
மென்ஞிற மானுரித் தோலுடையாடை
வெறிவளர் கொன்றையந் தாரார்
வேட்களை நன்னக ராரே.

7. மண்பொடிக் கொண்டெரித் தோர்சுடலை
மாமலைவேந்தன் மகள் மகிழ
நுண்பொடிச் சேர நின்றாடி
நொய்யன செய்ய லுகந்தார்
கண்பொடி வெண்டலை யோடுகை யேந்திக்
காலனைக் காலாற் கடிந்துகந்தார்
வெண்பொடிச் சேர்திரு மார்பர்
வேட்கள நன்னக ராரே.

8. ஆழ்தருமால் கடனஞ்சினை யுண்டா
ரமுத மமரர்க் கருளிச்
சூழ்தரு பாம்பரை யார்த்துச்
சூலமோ டொண்மழு வேந்தித்
தாழ்தருபுன் சடையொன் றினை வாங்கித்
தண்மதியம் மயலே ததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார்
வேட்கள நன்னக ராரே.

9. திருவொண் காணிய பேதுறுகின்ற
திசைமுகனுந் திசைமே லளந்த
கருவரை யேந்திய மாலுங்
கைதொழ நின்றது மல்லால்
அருவரை யொல்க வெடுத்தவரக்க
னொடெழிற் றோள்க ளாழத்தழுந்த
வெருவுற வூன்றிய பெம்மான்
வேட்கள நன்னக ராரே.

10. அத்தமண்டோய் துவராரமண் குண்டயர்
யாதுமல்லா வுரையே யுரைத்துப்
பொய்த்தவம் பேசுவ தல்லாற்
புறனுரை யாதொன்றும் கொள்ளேல்
முத்தன வெண்முறுவல் உமையஞ்ச
மூரிவல்லானை யினீருரி போர்த்த
வித்தகர் வேத முதல்வர்
வேட்கள நன்னக ராரே.

11. விண்ணியல் மாடம் விளங்கொளி
வீதிவெண் கொடியெங்கும் விரிந்திலங்க
நண்ணிய சீரவர் காழிநற்றமிழ்
ஞான சம்பந்தன்
பெண்ணிநல்லா ளொருபாக மமர்ந்து
பேணிய வேட்கள மேன்மொழிந்த
பண்ணியல் பாடல் வல்லார்கள்
பழியொடு பாவ மிலரே.

II. திருவேட்களம் (2)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்கலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

[துன்று = நெருங்கிய.]

2. கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புரஞ் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழுது
இருப்ப னாகி லெனக்கிட ரில்லையே.

[கருப்பு = கரும்பு வில். பொருப்பு = மலை]

3. வேட்க ளத்துறை வேதிய னெம்மிறை
ஆக்க ளேறுவ ரானஞ்சு மாடுவர்
பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினாற்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே.

4. அல்ல லில்லை யருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடு மணாளனார்
செல்வ னார்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே.

[மல்கு = வளரும்.]

5. துன்ப மில்லைத் துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொ னாருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே.

6. கட்டப் பட்டுக் கவலையில் வீழாதே
பொட்ட வல்லுயிர் போவதன் முன்னநீர்
சிட்டனார் திரு வேட்களங் கைதொழப்
பட்ட வல்வினை யாயின பாறுமே.

[பொட்ட=விரைவில். பாறும்=நீங்கும்.]

7. வட்ட மென்முலை யாளுமை பங்கனார்
எட்டு மொன்று மிரண்டு மூன்றாயினார்
சிட்டர் சேர்திரு வேட்களங் கைதொழு
திட்ட மாகி யிருமட நெஞ்சமே.

[திட்ட=இஷ்டம்.]

8. நட்ட மாடிய நம்பனை நாடொறும்
இட்டத் தாலினி தாக நினைமினோ
வட்ட வார்முலை யாளுமை பங்கனார்
சிட்டனார் திருவேட் களந் தன்னையே.

9. வட்ட மாமதின் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கைய ராயினுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் போற்றிரு வேட்களச் செல்வரே.

[குட்ட=குஷ்டம்.]

10. சேட னாருறை யுஞ்செழு மாமலை
ஓடி யாங்கெடுத் தான்முடி பத்திற
வாட லூன்றி மலரடி வாங்கிய
வேட னாருறை வேட்களஞ் சேர்மினே.

III. திருக்கழிப்பாலை (1)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. புனலா டியபுன் சடையா யரணம்
அனலா கவிழித் தவனே யழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே.

2. துணையா கவோர்தூ வளமா தினையும்
இணையா கவுகந் தவனே யிறைவா
கணையா லெயிலெய் கழிப்பா லையுளாய்
இணையார் கழலேத் தவிடர் கெடுமே.

3. நெடியாய் குறியாய் நிமிர்புன் சடையின்
முடியாய் சுடுவெண் பொடிமுற் றணிவாய்
கடியார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
அடியார்க் கடையா வவலம் மவையே.

4. எளியா யரியாய் நிலநீ ரொடுதீ
வளிகா யமென வெளிமன் னியதூ
ஒளியா யுனையே தொழுதுன் னுமவர்க்
களியாய் கழிப்பா லையமர்ந் தவனே.

5. நடநண் ணியோர்நா கமசைத் தவனே
விடநண் ணியதூ மிடறா விகிர்தா
கடனண் ணுகழிப் பதிகா வலனே
உடனண் ணிவணங் குவனுன் னடியே.

6. பிறையார் சடையாய் பெரியாய் பெரிய
மறையார் தருவாய் மையினா யுலகிற்
கறையார் பொழில்சூழ் கழிப்பா லையுளாய்
இறையார் கழலேத் தவிடர் கெடுமே.

7. முதிருஞ் சடையின் முடிமேல் விளங்குங்
கதிர்வெண் பிறையாய் கழிப்பா லையுளாய்
எதிர்கொண் மொழியா லிரந்தேத் துமவர்க்
கதிரும் வினையா யினவா சறுமே.

8. எரியார் கணையா லெயிலெய் தவனே
விரியார் தருவீழ் சடையா யிரவிற்
கரிகா டலினாய் கழிப்பா லையுளாய்
உரிதா கிவணங் குவனுன் னடியே.

9. நலநா ரணனான் முகனண் ணலுறக்
கனலா னவனே கழிப்பா லையுளாய்
உனவார் கழலே தொழுதுன் னுமவர்க்
கிலதாம் வினைதா னெயிலெய் தவனே.

10. தவர்கொண் டதொழிற் சமண்வே டரொடுந்
துவர்கொண் டனர்நுண் டுகிலா டையரும்
அவர்கொண் டனவிட் டடிகள் ளுறையும்
உவர்கொண் டகழிப் பதியுள் குறுமே.

11. கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தனசொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவல்லார்
கெழியா ரிமையோ ரொடுகே டிலரே.

III. திருக்கழிப்பாலை (2)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. வெந்த குங்கிலியப் புகை விம்மவே
கந்த நின்றுலவுங் கழிப் பாலையார்
அந்தமு மளவு மறியாத தோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே.

2. வானிலங் கவிளங்கு மிளம் பிறை
தானலங் கலுகந் ததலை வனுர்
கானிலங் கவருங் கழிப்பா லையார்
மானலம் மடநோக் குடை யாளொடே.

3. கொடி கொளேற்றினர் கூற்றை யுதைத்தனர்
பொடிகொண் மார்பினிற் பூண்டதோ ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன வார்க்கறி வொண்ணுமே.

4. பண்ண லம்பட வண்டறை கொன்றையின்
றண்ண லங்கலு கந்த தலைவனுர்
கண்ணலங் கவருங் கழிப் பாலையுள்
ளண்ண லெங்கட வுள்ளவ னல்லனே.

5. எரிஞு ருலகத் திமையோ ரோடும்
பாரிஞு ருடனே பரவப் படுங்
காரிஞர் பொழில்சூழ் கழிப்பாலை யெஞ்
சீரிஞர் கழலே சிந்தை செய்மினே.

6. துள்ளுமான் மறியங் கையிலேந்தி யூர்
கொள்வனு ரிடுவெண் டலையிற் பலி
கள்வனு ருறை யுங்கழிப் பாலையை
யுள்ளு வார்வினை யாயின வோயுமே.

7. மண்ணி ஞர்மலி செல்வமும் வானமு
மெண்ணி நீரினி தேத்துமின் பாகமும்
பெண்ணி ஞர்பிறை நெற்றியோ டுற்றமுக்
கண்ணினு ருறையுங் கழிப் பாலையே.

8. இலங்கை மன்னனை யீரைந் திரட்டிதோ
டலங்க வூன்றிய தூமழு வாளினர்
கலங்கள் வந்துலவுங் கழிப் பாலையை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே.

9. ஆட்சி யால லரானொடு மாலுமாய்த்
தாட்சி யாலறி யாது தளர்ந்தனர்
காட்சி யாலறி யான்கழிப் பாலையை
மாட்சி யாற்றொழு வார்வினை மாயுமே.

10. செய்ய நுண்டுவ ராடையி னரொடு
மெய்யின் மாசு பிறங்கிய வீறிலாக்
கையர் கேண்மைய ஞ்கழிப் பாலையெம்
மையன் சேவடியே யடைந் துய்மினே.

11. அந்தண் காழி யருமறை ஞானசம்
பந்தன்பாய் புனல் சூழ்கழிப் பாலையைச்
சிந்தையாற் சொன்ன செந்தமிழ் வல்லவர்
முந்தி வானுல காடன் முறைமையே.

III. திருக்கழிப்பாலை (3)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. வண்ணமும் வடிவுஞ் சென்று கண்டிலள்
எண்ணி நாமங்க ளேத்த நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
மண்ண லேயறி வானிவ டன்மையே.

2. மருந்து வானவ ருய்யநஞ் சுண்டுகந்
திருந்தவன் கழிப் பாலையு ளெம்பிரான்
திரிந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்துரைக் கிலுமென் சொற் பழிக்குமே.

3. மழலை தான்வரச் சொற்றெரி கின்றிலள்
குழலி னேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
யிகழ்வ தோவெனை யேன்றுகொ ளென்னுமே.

4. செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மையலாகி மதிக்கி லளாரையுங்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலையெம்
ஐய னேயறி வானிவ டன்மையே.

5. கருத்த னைக்கழிப் பாலையுண் மேவிய
வொருத்த னையுமையா ளொருபங்கனை
யருத்தியாற் சென்று கண்டிட வேண்டுமென்
றெருத் தியாருள மூசல தாடுமே.

6. கங்கையைச் சடைவைத்து மலை மகள்
நங்கையை யுடனே வைத்த நாதனார்
திங்கள் சூடி திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே.

7. ஐயனே யழ கேயன லேந்திய
கையனே கறைசேர் தரு கண்டனே
மையுலாம் பொழில் சூழ்கழிப் பாலையெம்
ஐயனே விதியே யரு ளென்னுமே.

8. பத்தர் கட்கமு தாய பரத்தினை
முத்தனை முடி வொன்றிலா மூர்த்தியை
யத்தனை யணியார் கழிப்பாலை யெஞ்
சித்தனைச் சென்று சேருமா செப்புமே.

9. பொன்செய் மாமுடி வாளரக் கன்றலை
யைஞ்சு நான்கு மொன்றும் மிறுத்தானவன்
என் செய்யான் கழிப்பாலையு ளெம்பிரான்
துஞ்சும் போதுந் துணையென லாதுமே.

III. திருக்கழிப்பாலை (4)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. வனபவளவாய் திறந்து வானவர்க்குந்
தானவனே யென்கின் றாளாற்
சினபவளத் திண்டோண் மேற்சேர்ந்
திலங்கு வெண்ணீற்ற னென்கின்றாளா
லன்பவள மேகலையோடப் பாலைக்
கப்பாலா னென்கின் றாளாற்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

2. வண்டுலவு கொன்றைவளர் புன்சடை
யானே யென்கின் றாளால்
விண்டலர்ந்து நாறுவதோர் வெள்ளெருக்க
நாண்மல ருண்டென் கின்றாளா
லுண்டயலே தோன்றுவதோ ருத்தரியப்
பட்டுடைய னென்கின் றாளாற்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

3. பிறந்திளைய திங்களெம் பெம்மான்
முடிமேலே தென்கின் றாளால்
நிறங்கிளருங் குங்குமத்தின் மேனி
யவனிறமே யென்கின் றாளான்

மறங்கிளர் வேற்கண்ணாள் மணிசேர்
மிடற்றவனே யென்கின் றாளாற்
கறங்கோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ

4, இரும்பார்ந்த சூலத்த னேந்தியோர்
வெண் மழுவனென் கின்றாளாற்
சுரும்பார் மலர்கொன்றைச் சுண்ண
வெண்ணீற் றவனேயென் கின்றாளாற்
பெரும் பாலனாகியோர் பிஞ்ஞக
வேடத்த னென்கின் றாளாற்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

5. பழியிலா புகழுடைய பானீற்ற
ஞானேற்ற னென்கின் றாளாற்
விழியுலாம் பெருந்தடங்கண் ணிரண்டல்ல
மூன்றுளவே யென்கின் றாளாற்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே யென்கின் றாளாற்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

6. பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே யென்கின் றாளா
லெண்ணார் புரமெரித்த வெந்தை
பெருமானே யென்கின் றாளாற்

பண்ணார் முழவதிரப் பாடலோ
டாடலனே யென்கின் றாளாற்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

7. முதிருஞ்சடை முடிமேன் மூழ்கு
மிளநாக மென்கின் றாளா
லதுகண் டதனருகே தோன்றுமிள
மதிய மென்கின் றாளாற்
சதுர்வெண் பளிக்குழை காதின்
மின்னிடுமே யென்கின் றாளாற்
கதிர் முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

8. ஒரோத மோதி யுலகம் பலி
திரிவா னென்கின் றாளால்
நீரோத மேற நிமிர்புன்
சடையானே யென்கின் றாளாற்
பாரோத மேனிப் பவளமவ
னிறமே யென்கின் றாளாற்
காரோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

9. வானுலாந் திங்கள் வளர்புன்
சடையானே யென்கின் றாளால்
ஊனுலாம் வெண்டலை கொண்டு
ரூர்பலி திரிவானென் கின்றாளாற்

றேனுலாங் கோதை திளைக்குந்
திருமார்ப னென்கின் றாளாற்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

10. அடர்ப்பரிய விராவணனை யருவரைக்
கீழடர்த் தவனேயென் கின்றாளால்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின் றாளாள்
மடற்பெரிய வாலின்கீழற நால்வர்க்கன்
றுரைத்தா னென்கின் றாளாற்
கடற்கருவி சூழ்ந்தகழிப் பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

III. திருக்கழிப்பாலை (5)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. நங்கையைப் பாகம் வைத்தார்
ஞானத்தை நவில வைத்தார்
அங்கையி லனலும் வைத்தா
ரானையி னுரிவை வைத்தார்
தங்கையில் வாளும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையுள் வைத்தார்
கழிப்பா லைச்சேர்ப் பனாரே.

2. விண்ணினை விரும்ப வைத்தார்
வேள்வியை வேட்க வைத்தார்
பண்ணினைப் பாட வைத்தார்
பத்தர்கள் பயில வைத்தார்
மண்ணினை தாவ நீண்ட
மாலினுக் கருளும் வைத்தார்
கண்ணினை நெற்றி வைத்தார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

3. வாமனை வணங்க வைத்தார்
வாயினை வாழ்த்த வைத்தார்
சோமனைச் சடைமேல் வைத்தார்
சோதியுட் சோதி வைத்தார்

ஆமனை யாட வைத்தாரன்
பெனும் பாசம் வைத்தார்
காமனைக் காய்ந்த கண்ணார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

4. அரியன வங்கம் வேதமந்
தணர்க் கருளும் வைத்தார்
பெரியன புரங்கள் மூன்றும்
பேரழ லுண்ண வைத்தார்
பரியதீ வண்ண ராகிப்
பவளம்போல் நிறத்தை வைத்தார்
கரியதோர் கண்டம் வைத்தார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

5. கூரிருள் கிழிய நின்ற
கொடுமழுக் கையில் வைத்தார்
பேரிருள் கழிய மல்குபிறை
புனற் சடையுள் வைத்தார்
ஆரிரு ளண்டம் வைத்தா
ரறுவகைச் சமயம் வைத்தார்
காரிருள் கண்டம் வைத்தார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

6. உட்டங்கு சிந்தை வைத்தா
ருள்குவார்க் குள்ளம் வைத்தார்
விட்டங்கு வேள்வி வைத்தார்
வெந்துயர் தீர வைத்தார்

நட்டங்கு நடமும் வைத்தார்
ஞாலமு நவில வைத்தார்
கட்டங்கந் தோண்மேல் வைத்தார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

7. ஊனப் பேரொழிய வைத்தார்
ஓதி யேயுணர வைத்தார்
ஞானப்பேர் நவில வைத்தார்
ஞானமு நடுவும் வைத்தார்
வானப் பேராறும் வைத்தார்
வைகுந்தற் காழி வைத்தார்
கானப்பேர் காதல் வைத்தார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

8. கொங்கினு மரும்பு வைத்தார்
குற்றங்கள் கெடுக்க வைத்தார்
சங்கினுள் முத்தம் வைத்தார்
சாம்பலும் பூச வைத்தார்
அங்கமும் வேதம் வைத்தா
ராலமு முண்டு வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார்
கழிப் பாலைச் சேர்ப்பனாரே.

9. சதுர்முகன் றானு மாலுந்
தம்மிலே யிகலக் கண்டு
எதிர்முக மின்றி நின்ற
வெரியுரு வதனை வைத்தார்

பிதிர்முகன் காலன் றன்னைக்
கால்தனிற் பிதிர வைத்தார்
கதிர்முகஞ் சடையில் வைத்தார்
கழிப்பாலைச்சேர்ப் பனாரே.

10. மாவினாணங் கையஞ் சுமதி
விலங் கைக்கு மன்னன்
வேலினான் வெருண் டெடுக்கக்
காண்டலும் வேத னாவ
னூலினா னோக்கி நக்கு
நொடிப்பதோ ரளவில் வீழக்
காலினா லூன்றி யிட்டார்
கழிப்பாலைச்சேர்ப் பனாரே.

III. திருக்கழிப்பாலை (6)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. ஊனுடுத்தி யொன்பது வாசல்வைத்து வெள்ளெலும்பு
புதூணுவு ரோம மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார் தயக்கம்
பல படைத்தார் தாமரையினூர்
காமனெடுத்து மாமயில்கள் ஆடுஞ்சோலைக்
கழிப்பாலை மேயக பாலப்பனூர்
வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

2. முறையார்ந்த மும்மதிலும் பொடியாய்ச் செற்று
முன்னுமாய்ப் பின்னுமாய் முக்கணெந்தை
பிறையார்ந்த சடைமுடிமேற் பாம்பு கங்கை
பிணக்கந் தீர்த்துடன் வைத்தார் பெரியநஞ்சு
கறையார்ந்த மிடற்றடங்கக் கண்ட வெந்தை
கழிப்பாலை மேயக பாலப்பனூர்
மறையார்ந்த வாய்மொழியான் மாய யாக்கை
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

3. தெளிவுண் டாக்கருதே நிமலன்றன்னை நிலைமின்
கழித்தலு நேரிழை யாளாய
வொளிவண்டார்க் கருங்குழலி யுமையாடன்னை
யொருபாகத் தமர்ந்தடியா ருள்கியேத்தக்

களிவண்டார்கரும் பொழில்சூழ் கண்டல் வேலிக்
கழிப்பாலை மேயகபாலப்பனார்
வளிவண்டார் மாயக் குரம்பை நீங்கவழி
வைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

4. பொடிநாறு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூணநூலர்
அடிநாறுங் கமலத்த ராரூ ராதி
யானஞ்சு மாடுமாதிரை யினார்தாங்
கடிநாறும் பூஞ்சோலை கமழ்ந்து நீறுங்
கழிப்பாலை மேயகபாலப்பனார்
மடிநாறு மேனியிம் மாயநீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

5. விண்ணானாய் விண்ணவர்கள் விரும்பிவந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவியெங்கு
மெண்ணானாய் எழுத்தானாய் கடலேழானா
யிறையானா யெம்மிறையே யென்றுநிற்குங்
கண்ணானாய் காரானாய் பாருமானாய்
கழிப்பாலை யுள்ளுறையுங் கபாலப்பனார்
மண்ணானாய் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

6. விண்ணப்ப விச்சாதரர்க ளேத்த விரிகதி
ரோனெரி சுடரான் விண்ணுமாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்துள்ளேயும்
பசுபதிப் பாசுபதன் றேசமூர்த்தி

கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்
கழிப்பாலை மேயகபாலப்பனார்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

7. பிணம்புல்கு பீறற்குரம்பை மெய்யாப்
பேதப் படுகின்ற பேதைமீர்காள்
நிணம்புல்கு சூலத்தார் நீலகண்டரெண்டோள
ரெண்ணிறந்த குணத்தினாலே
கணம்புல்லன் கருத்துகந்தார் காஞ்சியுள்ளார்
கழிப்பாலை மேயகபாலப்பனார்
மணம்புல்கு மாயக் குரம்பை நீங்கவழி
வைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

8. இயல்பாய வீசனை யெந்தை தந்தை
யென்சிந்தை மேவியுறை கின்றானை
முயல்வானை மூர்த்தியைத் தீர்த்தமான
திரியம்பகன் திரிசூலத் தன்னகையன்
கயல்பாயுங் கண்டல் சூழ்வுண்ட வேலிக்
கழிப்பாலை மேயகபாலப்பனார்
மயலாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

9. செற்றதோர் மனமொழிந்து சிந்தைசெய்து
சிவமூர்த்தி யென்றழுவார் சிந்தையுள்ளா
னுற்றதோர் நோய்களைந்திவ் வுலகமெல்லாங் காட்டுவா
னுத்தமன் றானோதா தெல்லாங்

கற்றதோர் நூலினன் களிறு செற்றான்
கழிப்பாலை மேயக பாலப்பனார்
மற்றிதோர் மாயக்குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

10. பொருதலங்க னீண்முடியான் போரரக்கர் கோன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடாதாக
விருநிலங் கணடுக்கெய்த வெடுத்திடு தலுமேந்
திழையாடான் வெருவ விறைவனோக்கிக்
கரதலங்கள் கதிர்முடியா றஞ்சினோடு
கால்விரலா லூன்றுகழிப் பாலையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்கவழி
வைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

8 - JUL 1937

III. திருக்கழிப்பாலை (7)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. நெய்தற் குருகுதன் பிள்ளை யென்றெண்ணி
நெருங்கிச் சென்று
கைதகை மடற்புல்கு தென்கழிப்
பாலை யதனுறை வாய்
பைதற் பிறையொடு பாம்புடன்
வைத்த பரிசறி யோம்
எய்தப் பெறிலி ரங்காது கண்டாய்
நம்மிறை யவனே.

2. பருமாமணியும் பவள முத்தும்
பரந்துந் திவரை
பொருமால் கரைமேற்றிரை கொணர்ந்தெற்றப்
பொலிந் திலங்கும்
கருமா மிடறுடைக் கண்டனெம்மான்
கழிப்பாலை யெந்தை
பெருமானவ னென்னை யாளுடையா
னிப்பெரு நிலத்தே.

3. நாட்பட் டிருந்தின்ப மெய்த லுற்றிங்கு
நமன் றமரால்
கோட்பட் டொழிவதன் முந்துறவே
குளிரார் தடத்துத்
தாட்பட்ட தாமரைப் பொய்கை யந்தண்
கழிப்பாலை யண்ணற்
காட்பட் டொழிந்த வன்றே
வல்லமாயிவ் வகலிடத்தே.

III. திருக்கழிப்பாலை (8)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. செடியேன் தீவினையிற் றடுமாற்றங் கண்டாலும்
அடியானாவ வெனா தொழிதல் தகவாமே
முடிமேல் மாமதியும் மரவுமு டன்றுயிலும்
வடிவே தாமுடையார் மகிழுங்கழிப் பாலையதே.

2. எங்கேனு மிருந்துன் னடியேனுனை நினைந்தால்
அங்கேவந் தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கே யென்வினையை யறுத்திட் டெனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

3. ஒறுத்தாய் நின்னருளி லடியேன் பிழைத்தனகள்
பொறுத்தா யெத்தனையுந் நாயேனைப் பொருட்படுத்திச்
செறுத்தாய் வேலைவிட மறியாமலுண்டு கண்டங்
கறுத்தாய் தண்கழனிக் கழிப்பாலை மேயானே.

4. சுரும்பார் விண்டமல ரவைதூவித் தூங்குகண்ணீர்
அரும்பாநிற்கு மனத்தடியா ரொடுமன்பு செய்வன்
விரும்பே னுன்னை யல்லா லொருதெய்வ மென்
மனத்தால்
கரும்பாருங் கழனிக் கழிப்பாலை மேயானே.

5. ஒழிப்பா யென்வினையை யுகப்பாய் முனிந்தருளித்
தெழிப்பாய் மோதுவிப்பாய் விலையா வணமுடையாய்
கழிப்பால் கண்டடங்கச் சுழியேந்து மாமறுகிற்
கழிப்பாலை மருவுங் கனலேந்து கையானே.

6. ஆர்த்தா யாடரவை யரைவார் புலியதண்மேற்
போர்த்தா யானையின் தோலுரிவை புலால்நாறக்
காத்தாய் தொண்டுசெய் வார்வினைக ளவைபோகப்
பார்த்தா னுக்கிடமாம் பழியில்கழிப் பாலையதே.

7. பருத்தாள் வன்பகட்டைப் படமாகமுன் பற்றியதன்
உரித்தா யானையின்தோ லுலகந்தொழு முத்தமனே
எரித்தாய் முப்புரமு மிமையோர்க ளிடர்கடியுங்
கருத்தார் தண்கழனிக் கழிப்பாலை மேயானே.

8. படைத்தாய் ஞாலமெலாம் படர்புன்சடை யெம்பரமா
உடைத்தாய் வேள்விதனை யுமையாளையோர் கூறுடையாய்
அடர்த்தாய் வல்லரக்கன் தலைபத்தொடு தோணெரியக்
கடற்சாருங் கழனிக் கழிப்பாலை மேயானே.

9. பொய்யா நாவதனாற் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கேயொத்த தேவர்பிரான்
செய்யானுங் கரியநிறத் தானுந்தெரி வரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான்கழிப் பாலையதே.

10. பழிசேரில் புகழான் பரமன் பரமேட்டி
கழியார் செல்வமல்குங் கழிப்பாலை மேயானைத்
தொழுவா னாவலர்கோ னாரூரனுரைத்த தமிழ்
வழுவா மாலைவல்லார் வானோருல காள்பவரே.

IV. திருநெல்வாயில் (1)

என்ற சிவபுரி
திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய
மடையி னார்மணி நீர்நெல் வாயிலார்
நடையி னல்விரற் கோவ ணந்நயந்
துடையி னாரெம துச்சி யாரே.

2. வாங்கி னார்மதின் மேற்க ணைவெள்ளந்
தாங்கி னார்தலை யாய தன்மையர்
நீங்கு நீர்நெல் வாயி லார்தொழ
ஓங்கி னாரெம துச்சி யாரே.

3. நிச்ச லேத்துநெல் வாயி லார்தொழ
இச்சை யாலுறை வாரெம் மீசனார்
கச்சை யாவதோர் பாம்பி னார்கவின்
இச்சை யாரெம துச்சி யாரே.

4. மறையி னார்மழு வாளி னார்மல்கு
பிறையி னார்பிறை யோடி லங்கிய
நிறையி னார்நெல் வாயி லார்தொழும்
இறைவ னாரெம துச்சி யாரே.

5. விருத்த னாகிவெண் ணீறு பூசிய
கருத்த னார்கன லாட்டு கந்தவர்
நிருத்த னார்நெல் வாயின் மேவிய
ஒருத்த னாரெம துச்சி யாரே.

6. காரினார் கொன்றைக் கண்ணி யார்மல்கு
பேரினார் பிறை யோடி லங்கிய
சீரி னார்நெல் வாயி லார்தொழும்
ஏரி னாரெம துச்சி யாரே.

7. ஆதியா ரந்த மாயினார் வினை
கோதி யார்மதில் கூட்ட ழித்தவர்
நீதி யார்நெல் வாயி லார்மறை
ஓதி யாரெம துச்சி யாரே.

8. பற்றி னாரக் கன்க யிலையை
ஒற்றி னாரொரு கால்வி ரலுற
நெற்றி யார்நெல் வாயி லார்தொழும்
பெற்றி யாரெம துச்சி யாரே.

9. நாடி னார்மணி வண்ண னான்முகன்
கூடி னார்குறு காத கொள்கையா
நீடி னார்நெல் வாயி லார்தலை
ஓடி னாரெம துச்சி யாரே.

10. குண்ட மண்டுவர்க் கூறை மூடர்சொற்
பண்ட மாகவை யாத பண்பினர்
விண்ட யங்குநெல் வாயி லார்நஞ்சை
உண்ட கண்டரெம் முச்சி யாரே.

11. நெண்ப யங்குநெல் வாயி லீசனைச்
சண்பை ஞானசம் பந்தன் சொல்லிவை
பண்ப யன்கொளப் பாட வல்லவர்
விண்ப யன்கொளும் வேட்கை யாளரே.

V. திருநாரையூர் (1)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. உரையினில் வந்தபாவ முணர்நோய் களும்ம
செயறீங்கு குற்ற முலகில்
வரையினி லாமைசெய்த வவைதீரும் வண்ண
மிகவேத்தி நித்த நினைமின்
வரைசிலை யாகவன்று மதின்மூன் றெரித்து
வளர்கங் குனங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

2. ஊனடை கின்றகுற்ற முதலாகி யுற்ற
பிணிநோ யொருங்கு முயரும்
வானடை கின்றவெள்ளை மதிசூடி சென்னி
விதியான வேத விகிர்தன்
கானிடை யாடிபூதப் படையா னியங்கு
விடையா னிலங்கு முடிமேல்
தேனடை வண்டுபாடு சடையண்ண னண்ணு
திருநாரை யூர்கை தொழவே.

3. ஊரிடை நின்றுவாழு முயிர்செற்ற காலன்
றுயருற்ற தீங்கு விரவிப்
பாரிடை மெள்ளவந்து பழியுற்ற வார்த்தை
யொழிவுற்ற வண்ண மகலும்

போரிடை யன்றுமூன்று மதிலெய்த ஞான்று
புகழ்வானு ளோர்கள் புணரும்
தேரிடை நின்றவெந்தை பெருமா னிருந்த
திருநாரை யூர் கைதொழவே.

4. தீயுறவாய வாக்கை யதுபற்றி வாழும்
வினைசெற்ற வுற்ற வுலகின்
தாயுறு தன்மையாய தலைவன் றனாமை
நிலையாக நின்று மருவும்
பேயுற வாயகானி னடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

5. வசையப ராதமாய வுவரோத நீங்குந்
தவமாய தன்மை வரும்வான்
மிசையவ ராதியாய திருமார் பிலங்கு
விரிநூலர் விண்ணு நிலனும்
இசையவ ராசிசொல்ல விமையோர்க ளேத்த
வமையாத காதலொடு சேர்
திசையவர் போற்றநின்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

6. உறைவள ருனிலா வுயிர்நிற்கும் வண்ண
முணர் வார்க்குமுண் மையுலகில்
குறைவுளவாகி நின்ற குறைதீர்க்கு நெஞ்சி
னிறைவாற்று நேசம் வளரும்

மறைவளர் நாவன்மாவி னுரிபோர்த்த மெய்ய
னரவார்த்த வண்ணல் கழலே
திறைவளர் தேவர்தொண்டி னருள்பே ணநின்ற
திருநாரை யூர்கை தொழவே.

7. தனம்வரு நன்மையாகுந் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற வுடலின்
இனம்வளை ரைவர்செய்யும் வினையங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொரு காலமூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன் றெரித்த வவுணர்
சினமொரு காலழித்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

8. உருவரை கின்றநாளி லுயிர்கொல்லுங் கூற்ற
நனியஞ்சு மாதலுற நீர்
மருமலர் தூவியென்றும் வழிபாடு செய்ம்மி
னழிபா டிலாத கடலின்
அருவரை சூழிலங்கை யரையன்றன் வீர
மழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

9. வேறுயர் வாழ்வுதன்மை வினை துக்கமிக்க
பகைதீர்க்கு மேய வுடலில்
தேறிய சிந்தை வாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்

சேறுயர் பூவின்மேய பெருமானு மற்றைத்
திருமாலு நேட வெரியாய்ச்
சீறிய செம்மையாகுஞ் சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

10. மிடைபடு துன்பமின்ப முளதாக்கு முள்ளம்
வெளியாக்கு முன்னி யுணரும்
படையொரு கையிலேந்திப் பலிகொள்ளும் வண்ண
மொலிபாடி யாடி பெருமை
உடையினை விட்டுளோரு முடல்போர்த் துளோரு
முரைமாயும் வண்ண மழியச்
செடிபட வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

11. எரியொரு வண்ணமாய வுருவானை யெந்தை
பெருமானை யுள்கி நினையார்
திரிபுர மன்றுசெற்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்தகாழி மறைஞான சம்பந்த
னுரைமாலை பத்து மொழிவார்
திருவளர் செம்மையாகி யருள்பேறு மிக்க
துளதென்பர் செம்மை யினரே.

V. திருநாரையூர் (2)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. காம்பினை வென்றமென் றோளி பாகங்
கலந்தா னலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடு விற்றிரு
நாரையூர் மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான்
புலியின் னுரிதோன் மேல்
பாம்பினை வீக்கிய பண்ட ரங்கன்
பாதம் பணிவோமே.

2. தீவினை யாயின தீர்க்க நின்றான்
றிருநாரை யூர்மேயான்
பூவினை மேவு சடைமுடி யான்புடை
சூழப் பலபூதம்
ஆவினி லைந்துங்கொண் டாட்டு கந்தா
னடங்கார் மதின்மூன்றும்
ஏவினை யெய்த ழித்தான்
கழலே பரவா வெழுவோமே.

3. மாயவன் சேயவன் வெள்ளி யவன்வி
டஞ்சேரு மைமிடற்றன்
ஆயவ னாகியொ ரந்தர மும்மவ
னென்று வரையாகம்

தீயவ னீரவன் பூமி யவன்றிரு
காரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வாரவர்
மேல்வினை யாயின வீடுமே.

4. துஞ்சிரு ளாடுவர் தூமு றுவலு
ளங்குழு டம்பினராய்
அஞ்சுட ராரெரி யாடு வாரழ
லார்வி ழிக்கண்ணின்
நஞ்சுமிழ் நாக மரைக்கசைப் பர்நல
னோங்கு நாரையூர்
எஞ்சிவ னார்க்கடி மைப்படு வார்க்கினி
யில்லை யேதமே.

2. பொங்கி ளங்கொன் றையினர் கடலில்
விடமுண் டிமையோர்கள்
தங்களை யாரிடர் தீர நின்ற
தலைவர் சடைமேலோர்
திங்களை வைத்தன லாடலி னார்திரு
நாரை யூர்மேய
வெங்கனல் வெண்ணீ றணிய வல்லா
ரவரே விழுமியரே.

6. பாரு றுவாய் மையினர் பரவும்
பரமேட்டி பைங்கொன்றைத்
தாரு றுமார் புடையான் மலையின்
றலைவன் மலைமகளைச்

சீரு றுமா மறுகிற் சிறைவண்
டறையுந் திருநாரை
ஊரு றையெம் மிறைவர்க் கிணையான்
னொடொன் றொவ்வாவே.

7. கள்ளி யிடுதலை யேந்துகை யர்கரி
காடர் கண்ணுதலர்
வெள்ளிய கோவண வாடை தன்மேன்
மிளிரா டரவார்த்து
நள்ளிரு ணட்டம தாடுவர் நன்னலி
னோங்கு நாரையூர்
உள்ளிய போழ்தி லெம்மேல் வருவல்
வினையாயின வோடுமே.

8. நாமமெ னப்பல வும்முடை யானல
னோங்கு நாரையூர்
தாமொ மெனப்ப றையாழ் குழறு
ளார்க முல்பயில
ஈம விளக்கெரி சூழ்சு டலையி
யம்பும் மிடுகாட்டில்
சாம முரைக்கநின் றுடு வானுந்
தழலாய சங்கரனே.

9. ஊனு டைவெண் டலைகொண் டுழல்வா
னொளிர்புன் சடைமேலோர்
வானி டைவெண் மதிவைத் துகந்தான்
வரிவண் டியாழ்முரலத்

தேனு டைமா மலரன்னம் வைகுந்
திருநாரை யூர்மேய
ஆனி டையைந் துகந்தா னடியே
பரவா வடைவோமே.

10\. தூசுபுனை துவராடை மேவுந் தொழிலா
ருடம் பினிலுள்
மாசு புனைந்துடை நீத்தவர் கண்மய
ணீர்மை கேளாதே
தேசுடை யீர்க டெளிந்தடைமின்
திருநாரை யூர் தன்னில்
பூசு பொடித்த ஈச ரடியா
ரடியே பொருத்தமே.

11\. தண்ம திதாழ் பொழில்சூழ் புகலித்
தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்ம திசேர் சடையா னுறையுந்
திருநாரை யூர்தன்மேல்
பண்ம தியாற் சொன்ன பாடல்பத்தும்
பயின்றார் வினைபோகி
மண்ம தியாது போய்வான் புகுவர்
வானோ ரெதிர்கொளவே.

V. திருநாரையூர் (3)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட
கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லா
னுமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த
வம்மா னடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தா
னிடநாரை யூர்தானே.

2. விண்ணின்மின் னேர்மதி துத்திநாகம்
விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின்முன் னேமிக வைத்துகந்த
பெருமா னெரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந்
திருநாரை யூரானென்
றெண்ணுமி னும்வினை போகும்வண்ண
மிறைஞ்சுந் நிறைவாமே.

3. தோடொரு காதொரு காதுசேர்ந்த
குழையா னிழைதோன்றும்
பீடொரு கால்பிரி யாதுநின்ற
பிறையான் மறையோதி

நாடொரு காலமுஞ் சேரநின்ற
திருநாரை யூரானைப்
பாடுமி னீர்பழி போகும்வண்ணம்
பயிலு முயர்வாமே.

4. வெண்ணில வஞ்சடை சேரவைத்து
விளங்குந் தலையேந்திப்
பெண்ணி லமர்ந்தொரு கூறதாய
பெருமா னருளார்ந்த
அண்ணன் மன்னரியுறை கோயிலாகு
மணிநாரை யூர்தன்னை
நண்ணல மர்ந்துறை வாக்குமின்க
ணடலை கரிசறுமே.

5. வானமர் தீவளி நீர்நிலனாய்
வழங்கும் பழியாகும்
ஊனம ரின்னுயிர் தீங்குகுற்ற
முறைவாற் பிரிதின்றி
நானம ரும்பொரு ளாகிநின்றான்
திருநாரை யூரெந்தை
கோனவ னைக்குறு கக்குறுகா
கொடுவல் வினைதானே.

6. கொக்கிற குங்குளிர் சென்னிமத்தங்
குலாய மலர்சூடி
அக்கர வோடரை யார்த்துகந்த
வழகன் குழகாக

நக்கம ருந்திரு மேனியாளன்
திருநாரை யூர்மேவிப்
புக்கம ரும்மனத் தோர்கடம்பைப்
புணரும் புகழுனே.

7. ஊழியு மின்பமுங் காலமாகி
யுயருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும் வாழ்க்கை
வினையின் புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயிறுகி நளிர்
நரை யூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர் செய்யும்
வகையின் விளைவாமே.

8. கூசமிலா தரக்கன் வரையைக்
குலுங்க வெடுத்தான்றேள்
நாசம தாகி யிறவடர்த்த
விரலான் கரவாதார்
பேசவி யப்பொடு பேணநின்ற
பெரியோ னிடம்போலும்
தேசமு றப்புகழ் செம்மை பெற்ற
திருநாரை யூர்தானே.

9. பூமக னும்மவ னைப்ப யந்த
புயலார் நிறத்தானும்
ஆமள வுந்திரிந் தேத்திக் காண்ட
லறிதற் கரியானூர்

பாமரு வுங்குணத் தோர்க ளீண்டிப்
பலவும் பணிசெய்யும்
தேமரு வுந்திகழ் சோலை சூழ்ந்த
திருநாரை யூர்தானே.

10. வெற்றரை யாகிய வேடங் காட்டித்
திரிவார் துவராடை
உற்றரை யோர்க ளுரைக்குஞ் சொல்லை
யுணரா தெழுமின்கள்
குற்றமி லாததோர் கொள்கை யெம்
மான்குழகன் றொழிலாரப்
பெற்றர வாட்டி வரும் பெருமான்
றிருநாரை யூர்சேர்வே.

11. பாடிய லுந்திரை சூழ் புகலித்
திருஞான சம்பந்தன்
சேடிய லும்புக ழோங்கு செம்மைத்
திருநாரை யூரான்மேல்
பாடிய தண்டமிழ் மாலை பத்தும்
பரவித் திரிந்தாக
வாடிய சிந்தையி னார்க்கு நீங்கு
மவலக் கடறானே.

V. திருநாரையூர் (4)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழி னாரையூர் நம்பனுக்
காறு சூடலு மம்ம வழகிதே.

[வெற்பன் = பர்வதராஜன்]

2. புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூரா னஞ்சை
அள்ளி யுண்டலு மம்ம வழகிதே.

[நள்ளி—குளிர், நண்டு.]

3. வேடு தங்கிய வேடமும் வெண்டலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரானடம்
ஆடு பைங்கழ லம்ம வழகிதே.

4. கொக்கின் றூவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலு நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே.

[கூவிளம் = வில்வம், தலைமாலை. அக்கினாரம் = உருத்திராட்சம்]

5. வடிகொள் வெண்மழு மானமர் கைகளும்
பொடிகொள் செம்பவளம் புரை மேனியும்
நடிகொ ணன்மயில் சேர்திரு நாரையூர்
அடிக டம்வடி வம்ம வழகிதே.

[புரை=போன்ற.]

6. சூல மல்கிய கையுஞ் சுடரொடு
பாலுநெய் தயி ராடிய பான்மையும்
ஞால மல்கிய நாரையூர் நம்பனுக்
கால நீழலு மம்ம வழகிதே.

7. பண்ணி னன்மறை பாடலோ டாடலும்
எண்ணிலார் புர மூன்றெரி செய்ததும்
நண்ணினார் துயர் தீர்த்தலு நாரையூர்
அண்ணலார் செய்கை யம்ம வழகிதே.

[எண்ணிலார்=பகைவர்.]

8. என்புபூண் டேருதேறி யிளம் பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினு நாரையூர்
அன்ப னுக்கது வம்ம வழகிதே.

9. முர லுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு நீடலாம்
நர லும் வாரிநன் னாரையூர் நம்பனுக்
கரவம் பூணுத லம்ம வழகிதே.

[முரலும்=சப்திக்கும். மொந்தை=வாச்சியம். நரலும்=ஒலிக்கும்.]

10. கடுக்கை யஞ்சடை யன்கபி லைம்மலை
எடுத்த வாளரக் கன்றலை யீரஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்த தன்மையு மம்ம வழகிதே.

[கடுக்கை = கொன்றை]

V. திருநாரையூர் (5)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. சொல்லானைப் பொருளானைச் சுருதியானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய்தானை
அல்லானைப் பகலானை யரியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய்தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பியேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[ஆழி = சக்கரம். அல் = இரவு. சரம் = பாசுபதம்.]

2. பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னைப்
பாரொடு நீர்சுடர்படர் காற்றாயினானை
மஞ்சுண்ட வானாகிவானந் தன்னின்
மதியாகி மதிசடை மேல்வைத்தான் றன்னை
நெஞ்சுண்டென் னினைவாகி நின்றான் றன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர்போய் நீங்கவோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந்தானை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[மஞ்சு = மேகம்.]

3. மூவாதி யாவர்க்கு மூத்தான் றன்னை
முடியாதே முதனடுவு முடிவானானைத்
தேவாதி தேவர்கட்குத் தேவன் றன்னை
திசைமுகன்றன் சிரமொன்றுசிதைத்தான் றன்னை

ஆவாத வடலேறொன் றுடையான் றன்னை
யடியேற்கு நினைதோறு மண்ணிக்கின்ற
நாவானை நாவினினல் லுரையானானை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[திசைமுகன்=பிரமன். ஆவாத=வியப்புடைய.]

4. செம்பொன்னை நன்பவளந் திகழுமுத்தைச்
செழுமணியைத் தொழுமவர் தஞ்சித்தத்தானை
வம்பவிழு மலர்க்கணைவே ளுலக்கநோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னுகின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் றன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதியேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[வம்ப=வாசனை]

5. புரையுடைய கரியுரிவைப் போர்வையானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் றன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணியானை
வெண்ணீறு செம்மேனி விரவினானை
வரையுடைய மகடவஞ்செய் மணாளன் றன்னை
வருபிணிநோய் பிரிவிக்கு மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[விரை=வாசனை.]

6. பிறவாது மிறவாதும் பெருகினானைப்
பேய்பாட நடமாடும் பித்தன்றன்னை
மறவாத மனத்தகத்து மன்னினானை
மலையானைக் கடலானை வனத்துளானை
உறவானைப் பகையானை யுயிரானானை
யுள்ளானைப் புறத்தானை யோசையானை
நறவாரும் பூங்கொன்றை சூடினானை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[நறா=தேன்.]

7. தக்கனது வேள்விகெடச் சாடினானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன்றன்னைக்
கொக்கரை சச் சரிவீணைப் பாணியானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் றன்னை
அக்கினொடு மென்பணிந்த வழகன்றன்னை
யறுமுகனோ டானைமுகற் கப்பன்றன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற்றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[கலன்=பாத்திரம். கொக்கரை=பாம்பு. சச்சரி=ஒருவாத்தியம். பாணி=கை, மிடுக்கு. அக்கு=உருத்திராக்கம்.]

8. அரிபிரமர் தொழுதேத்து மத்தன்றன்னை
யந்தகனுக் கந்தகனை யளக்கலாகா
எரிபுரியு மிலிங்கபுரா ணத்துளானை
யெண்ணாகிப் பண்ணாகி யெழுத் தானானைத்

திரிபுரஞ்செற் றொருமூவர்க் கருள் செய்தானைச்
சிலந்திக்கு மரசளித்த செல்வன்றன்னை
நரிவிரவு காட்டகத்தி லாடலானை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

9. ஆலால மிடற்றணியா வடக்கினானை
யாலதன்கீ ழறநால்வர்க் கருள்செய்தானைப்
பாலாகித் தேனாகிப் பழமுமாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையானானை
மேலாய வேதியர்க்கு வேள்வியாகி.
வேள்வியின் பயனாய விமலன்றன்னை
நாலாய மறைக்கிறைவ னாயினானை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[விமலன் = மலமற்றவன்]

10. மீளாதவா ளென்னையுடை யான்றன்னை
வெள்செய்த வழிபாடு மேவினானை
மாளாமை மறையவனுக் குயிரும்வைத்து
வன்கூற்றி னுயிர் மாளவுதைத் தான்றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்ததூர்த்தன்
றோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித்தாங்கே
நாளோடுவாள் கொடுத்த நம்பன்றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

[மறையவன் = மார்க்கண்டன். தூர்த்தன் = இராவணன்.]

VI. திருக்கடம்பூர் (1)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. வானமர் திங்களு நீரு மருவிய
வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத்
தேவர் தொழப் படுவானைக்
கானம ரும்பிணை புல்கிக்
கலைபயி லுங் கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத்
தாடொழ வீடெளி தாமே.

2. அரவினோ டாமையும் பூண்டு
வந்துகில் வேங்கை யதளும்
விரவுந் திருமுடி தன்மேல்
வெண்டிங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக்கடம் பூரிற்
பைங்கண்வெள் ளேற்றண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய
வின்ப நமக்கது வாமே.

3. இளிபடு மின் சொலினார்க ளிருங்
குழன் மேலிசைந் தேறத்
தெளிபடு கொள்கை கலந்த
தீத் தொழிலார் கடம்பூரில்

ஒளிதரு வெண்பிறை சூடி
யொண்ணுத லோடுட ளுகிப்
புலியத ளாடை புனைந்தான்
பொற்கழல் போற்றுது நாமே.

4. பறையொடு சங்க மியம்பப்
பல்கொடி சேர்நெடு மாடம்
கறைபுடை வேல்வரிக் கண்ணார்
கலையொலிசேர் கடம்பூரில்
மறையொலி கூடிய பாடன்
மருவிநின் ருடன் மகிழும்
பிறைபுடை வார்சடை யானைப்
பேணவல் லார்பெரி யோரே.

5. தீவிரி யக்கழ லார்ப்பச் சேயெரி
கொண்டிடு காட்டில்
நாவிரி கூந்தனற் பேய்கணகை
செய்ய நட்ட நவின்றோன்
காவிரி கொன்றை கலந்த
கண்ணுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார்
பழியொடு பாவ மிலாரே.

6. தண்புன னீள்வய றோறுந்
தாமரை மேலனம் வைகக்
கண்புணர் காவில்வண் டேறக்
கள்ளவி ழுங்கடம் பூரில்

பெண்புனை கூறுடை யானைப்
பின்னு சடைப் பெருமானைப்
பண்புனை பாடல் பயில்வார்
பாவமி லாதவர் தாமே.

7: பவிகெழு செம்மலர் சாரப்
பாடலொ டாட லருத
கலிகெழு வீதி கலந்த கார்வயல்
சூழ் கடம் பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தா
ளொண்ணுத லாளுமை கேள்வன்
பலியத ளாடையி னான்றன்
புனைகழல் போற்றல் பொருளே.

8. பூம்படு கிற்கயல் பாயப்
புள்ளிரியப் புறங் காட்டில்
காம்படு தோளியர் நாளுங்
கண் கவருங் கடம்பூரில்
மேம்படு தேவியோர் பாக
மேவியெம் மானென வாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித்
திசைதொழத் தீய கெடுமே.

9. திருமரு மார்பி லவனும்
திகழ்தரு மாமல ரோனும்
இருவரு மாயறி வொண்ணா
வெரியுரு வாகிய வீசன்

கருவரை காலி லடர்த்த
கண்ணுத லான்கடம் பூரில்
மருவிய பாடல் பயில்வார்
வானுலகம் பெறுவாரே.

10. ஆடை தவிர்த் தறங் காட்டு
மவர்களு மந்துவ ராடைச்
சோடைக ணன்னெறி சொல்வார்
சொல்லினுஞ் சொல்லல கண்டீர்
வேடம் பலபல காட்டும்
விகிர்தனம் வேத முதல்வன்
காடதனி னட மாடுங் கண்ணுத
லான் கடம் பூரே.

11. விடைநவி லுங் கொடியானை
வெண்கொடிசேர் நெடுமாடம்
கடைநவிலுங் கடம்பூரில்
காதலனைக் கடற்காழி
நடைநவின் ஞானசம்பந்த
னன்மையா லேத்திய பத்தும்
படைநவில் பாடல் பயில்வார்
பழியொடு பாவமிலாரே.

VI. திருக்கடம்பூர் (1)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. தளருங் கோளரவத் தொழு தண்மதி
வளருங் கோலவளர் சடையார்க் கிடங்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களருங் கார்க் கடம்பூர்க் கரக் கோயிலே.

2. வெலவலான் புலனைந் தொடு வேதமுஞ்
சொலவலான் சுழலுந் தடு மாற்றமு
மலவலான் மனையார்ந்த மென் றோளியைக்
கலவலான் கடம் பூர்க்கரக் கோயிலே.

3. பொய்தொழாது புலியுரி யோன் பதி
செய்தெழா தெழுவார் பணி செய்தெழா
வைதெழா தெழுவார வரேழ் கதிர்
கை தொழா வெழுமின்கரக் கோயிலே.

4. துண்ணெனா மனத்தாற் றொழு நஞ்சுமே
பண்ணினான் முனம் பாடலது செய்தே
எண்ணிலா ரெயில் மூன்று மெரித்தமுக்
கண்ணினான் கடம்பூர்க் கரக் கோயிலே.

5. சுனையுள் நீல மலரன கண்டத்தன்
புனையும் பொன்னிறக் கொன்றை புரிசடைக்
கனையும் பைங்கழலான் கரக் கோயிலை
நினையு முள்ளத்தவர் வினையு நீக்குமே.

6. குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியு
மணங்கி வாழ்த்துவ ரன்புடை யாரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலுங்
கணங்கள் போற்றிசைக்குங் கரக் கோயிலே.

7. பண்ணினுர் மறைப் பலபல பூசனை
மண்ணினுர் செய்வ தன்றியும் வைகலும்
விண்ணி னுர்கள் வியக்கப் படுவன
கண்ணினுர் கடம் பூர்க்கரக் கோயிலே.

8. அங்கையா ரழலேந்தி நின்ருடலன்
மங்கை பாடமகிழ்ந் துடன்வார் சடைக்
கங்கை யானுறையுங் கரக் கோயிலைத்
தங்கை யாற்றெழுவார் வினைசாயுமே.

9. நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன்அடி யேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே.

10. பணங்கொள் பாற்கடற் பாம்பணை யானொடு
மணங்கமழ் மலர்த் தாமரை யானவன்
பிணங்கும் பேரழலெம் பெருமாற் கிடங்
கணங்கள் போற்றி சைக்குங் கரக்கோயிலே.

11. வரைக் கணாலைஞ்சு தோளுடை யான்றலை
யரைக்க வூன்றியருள் செய்த வீசனார்
திரைக்குந் தண்புனல் சூழ்கரக் கோயிலை
யுரைக்கு முள்ளத் தவர்வினை யோயுமே.

VI. திருக்கடம்பூர் (2)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. ஒருவரா யிரு மூவரு மாயவன்
குருவ தாய குழக னுறைவிடம்
பருவரால் குதி கொள்ளும் பழனஞ்சூழ்
கருவ தாங் கடம்பூர்க் கரக் கோயிலே.

2. வன்னி மத்தம் வளரிளந் திங்களோர்
கன்னியாளைக் கதிர் முடி வைத்தவன்
பொன்னின் மல்கு புனர்முலை யாளொடு
மன்னினுன் கடம் பூர்க்கரக் கோயிலே.

3. இல்லக் கோலமு மிந்த விளமையு
மல்லற் கோல மறுத்துய்ய வல்லிரே
யொல்லைச் சென்றடையுங் கடம்பூர் நகர்ச்
செல்வக் கோயில் திருக்கரக் கோயிலே.

4. வேறு சிந்தை யிலாதவர் தீவினை
கூறு செய்த குழகனுறை விட
மேறு செல்வத் திமையவர் தாந்தொழு
மாறு சேர்க்கடம்பூர் கரக் கோயிலே.

5. திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கு மணாளனிருப் பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையு ஞாழலுந்
தெங்கு சேர்கடம் பூர்கரக் கோயிலே.

6. மல்லை ஞாலத்து வாழுமுயிர்க் கெலா
மெல்லை யானபிரா னூரிருப் பிடங்
கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை
நல்ல சேர்கடம் பூர்க்கரக் கோயிலே

7. தளரும் வாளரவத் தொடு தண்மதி
வளரும் பொற்சடை யாற்கிட மாவது
கிளரும் பேரொலிக் கின்னரம் பாட்டருக்
களரியார் கடம்பூர்க் கரக் கோயிலே.

8. உற்றரா யுறவாகி யுயிர்க் கெல்லாம்
பெற்றாய பிரானு ருறை விடம்
முற்றூர் மும்மதி லெய்த முதல்வனூர்
கற்றூர் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே.

9. வெள்ளை நீறணி மேனிய வர்க்கெலா
முள்ள மாய பிரானு ருறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடியோர் சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே.

10. பரப்பு நீரிலங் கைக்கிறை வன்னவன்
னுரத்தி னுலடுக் கல்லெடுக் கல்லுற
விரக்க மின்றி யிறைவிர லாற்றலை
யரக்கினன் கடம் பூர்க்கரக் கோயிலே.

VII. திருஓமமாம்புலியூர் (1)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. பூங்கொடிமடவா ளுமையொரு பாகம்
புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிரு ளட்ட மாடுமெம் விகிர்தர்
விருப்பொடு முறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

2. சம்பரற் கருளிச் சலந்தரன் வீயத்
தழலுமிழ் சக்கரம் படைத்த
எம்பெரு மானரி மையவ ரேத்த
வினிதினங் குறைவிடம் வினவில்
அம்பர மாகி யழலுமிழ் புகையி
னாகுதி யான்மழை பொழியும்
உம்பர்க ளேத்து மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

3. பாங்குடைத் தவத்துப் பகீரதற் கருளிப்
படர்சடைக் கரந்த நீர்க்கங்கை
தாங்குத றவிர்த்துத் தராதலத் திழித்த
தத்துவ னுறைவிடம் வினவில்

ஆங்கெரி மூன்று மமர்ந் துடனிருந்த
வங்கையா லாகுதி வேட்கும்
ஓங்கிய மறையோ ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

4. புற்றர வணிந்து நீறுமெய் பூசிப்
பூதங்கள் சூழ்தர வூரூர்
பெற்ற மொன்றேறிப் பெய்பலி கொள்ளும்
பிரானவ னுறைவிடம் வினவில்
கற்றநால் வேத மங்கமோ ராறுங்
கருத்தினா ருத்தியாற் றெரியும்
உற்றபல் புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

5. நிலத்தவர் வான மாள்பவர் கீழோர்
துயர்கெட நெடியமாற் கருளால்
அலைத்த வல்லசுர ராசற வாழி
யளித்தவ னுறைவிடம் வினவில்
சலத்தினாற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத்
தன்மையார் நன்மையான் மிக்க
உலப்பில் பல்புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

6.-7. மணந்திகழ் திசைக ளெட்டு மேழிசையு
மலியுமா றங்கமை வேள்வி
இணைந்த நால்வேத மூன்றெரி யிரண்டு
பிறப்பென வொருமையா லுணரும்

குணங்களு மவற்றின் கொள்பொருள் குற்ற
மற்றவை யுற்றது மெல்லாம்
உணர்ந்தவர் வாழு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

8. தலையொரு பத்துந் தடக்கை யதிரட்டி
தானுடை யரக்க னொண்கயிலை
அலைவது செய்தவ வன்றிறல் கெடுத்த
வாதியா ருறைவிடம் வினவில்
மலையென வோங்கு மாளிகை நிலவு
மாமதின் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

9. கள்ளவிழ் மலர்மே லிருந்தவன் கரியோ
னென்றிவர் காண்பரி தாய
ஒள்ளெரி யுருவ ருமையவ ளோடு
முகந்தினி துறைவிடம் வினவில்
பள்ள நீர் வாளைபாய் தருகழனிப்
பனிமலர்ச் சோலை சூழாலி
ஒள்ளிய புகழா ரோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

10. தெள்ளிய ரல்லாத் தேரரோ டமணர்
தடுக்கொடு சீவர முடுக்கும்
கள்ளமார் மனத்துக் கலதிகட் கருளாக்
கடவுளா ருறைவிடம் வினவில்

நள்ளிருள் யாம நான்மறை தெரிந்து
நலந்திகழ் மூன்றெரி யோம்பும்
ஒள்ளி யார்வாழு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

11. விளைதரு வயலுள் வெயில் செறிபவள
மேதிகண் மேய்புலத் திடறி
ஒளிதர மல்கு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யரனைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக்
காழியுண் ஞானசம் பந்தன்
அளிதரு பாடல் பத்தும் வல்லார்க
ளமர லோகத் திருப்பாரே.

VII. திருவோமாம்புலியூர் (2)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. ஆராரு மூவிலை வேலங் கையானை
யலைகடனஞ் சயின்றானை யமர ரேத்தும்
ஏராரு மதிபொதியுஞ் சடையினானை
யெழுபிறப்பு மெனையாளா வுடையான் றன்னை
ஊராரும் படநாக மாட்டு வானை
யுயர்புகழ் சேர்தரு வோமாம் புலியூர் மன்னும்
சீராரும் வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்து நாள்செலுத் தினேனே.

2. ஆதியா னரியயனென் றறிய வொண்ணா
வமரர் தொழுங் கழலானை யமலன் றன்னைச்
சோதிமதி கலைதொலையத் தக்க னெச்சன்
சுடரிரவி யயிலெயிறு தொலைவித்தானை
ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பு
முயர் புகழார் தருமோமாம் புலியூர் மன்னும்
தீதிறிரு வடதளியெஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

3. வருமிக்க மதயானை யுரித்தான் றன்னை
வானவர்கோன் றோளனைத்து மடிவித்தானைத்
தருமிக்க குழலுமையாள் பாகன் றன்னைச்
சங்கரனெம் பெருமானைத் தரணிதன்மேல்

உருமிக்க மணிமாட நிலாவு வீதி
உத்தமர் வாழ்தரு வோமாம் புலியூர் மன்னுந்
திருமிக்க வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

4. அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ
வழல் விழித்த கண்ணனை யமரர்கோனை
வென்றிமிகு காலனுயிர் பொன்றி வீழ
விளங்கு திருவடி யெடுத்த விகிர்தன்றன்னை
ஒன்றிய சீரிரு பிறப்பர் முத்தீயோம்பு
முயர்புகழ்நான் மறையோமாம் புலியூர் நாளுந்
தென்றன்மலி வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

5. பாங்குடைய வெழிலங்கி யருச்சனைமுன் விரும்பப்
பரிந்தவனுக் கருள்செய்த பரமன் றன்னைப்
பாங்கிலா நரகதனிற் றொண்டரானார்
பாராத வகைபண்ண வல்லான் றன்னை
ஓங்குமதில் புடைதழுவு மெழிலோ மாம்புலியூ
ருயர்புகழந் தணரேத்த வுலகர்க் கென்றுந்
தீங்குறிரு வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்து நாள்செலுத் தினேனே.

6. அருந்தவத்தோர் தொழுதேத்து மம்மான் றன்னை
யாராதா வின்னமுதை யடியார் தம்மேல்
வருந்துயரந் தவிர்ப்பானை யுமையா ணங்கை
மணவாள நம்பியை யென்மருந்து தன்னைப்

பொருந்துபுன றழுவுவய லிலவு துங்கப்
பொழில் கெழுவு தருவோமாம் புலியூர்நாளுந்
திருந்துதிரு வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

7. மலையானை வருமலையன் றுரிசெய்தானை
மறையானை மறையாலும் அறியவொண்ணுக்
கலையானைக் கலையாருங் கையினானைக்
கடிவானை யடியார்க டுயரமெல்லாம்
உலையாத வந்தணர்கள் வாழு மோமாம்
புலியூரெம் முத்தமனைப் புரமூன்றெய்த
சிலையானை வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

8. சேர்ந்தோடு மணிக் கங்கை சூடினானைச்
செழுமதியும் படவரவு முடன்வைத்தானைச்
சார்ந்தவோர் கட்கினியானைத் தன் னொப்பில்லாத்
தழலுருவைத் தலைமகனைத் தகைநால் வேதம்
ஓர்ந்தோதிப் பயில்வார் வாழ்தரு மோமாம்புலியூ
ருள்ளானைக் கள்ளாத வடியார் நெஞ்சில்
சேர்ந்தானை வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

9. வார்கெழுவு முலையுமையாள் வெருவவன்று
மலையெடுத்த வாளரக்கன் றோளுந்தாளும்
ஏர்கெழுவு சிரம்பத்து மிறுத்துமீண்டே
யின்னிசை கேட்டிருந்தானை யிமையோர்கோனைப்
பார்கெழுவு புகழ்மறையோர் பயிலுமாடப்
பைம்பொழில் சேர்தரு மோமாம் புலியூர்மன்னு
சீர்கெழுவு வடதளியெஞ் செல்வன் றன்னை
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே.

VIII. திருக்கானாட்டுமுள்ளூர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னானை மறைய
 வனை வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கியுமிழ்ந் தானைப்
 பொன்னிறத்தின் முப்புரிநூ லான்முகத்தி னானை
முள்வாய மடறழுவி முடத்தாழை யீன்று
 மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக் [சூழ்
 கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

2. ஒருமேக முகிலாகி யொத்துலகந் தானா
 யூர்வனவு நிற்பனவு மூழிகளுந் தானாய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்க ளைந்தாய்ப்
 புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
 திருத்தக்க வந்தணர்க ளோதுநக ரெங்கும்
கருமேதி செந்தா மரைமேயுங் கழனிக்
 கானாட்டு மூள்ளூரிற் கண்டுதொழு தேனே.

3. இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
 யிறையவனை மறையவனை யெண்குணத்தி னானைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடுஞ்
 சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை

அரும்புயர்ந்த வரவிந்தத் தனிமலர்க ளேறி
யன்னங்கள் விளையாடு மகன்றுறையி னருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

4. பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னானைப்
புனலாகி யனலாகிப் பூதங்க ளாந்தாய்
நாளையின்று நெருநலா யாகாய மாகி
ஞாயிறாய் மதியமாய் நின்றவெம் பானைப்
பாளைபடு பைங்கமுகின் சூழலிளந் தெங்கின்
படுமதஞ்செம் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயி லாலும்வளர் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

5. செருக்குவாய்ப் பைங்கண்வெள் ளரவரை யினானைத்
தேவர்கள்சூ ளாமணியைச் செங்கண்விடை யானை
முருக்குவாய் மலரொக்குந் திருமேனி யானை
முன்னிலையாய் முழுதுலக மாயபெரு மானை
இருக்குவா யந்தணர்க ளெழுபிறப்பு ளெங்கும்
வேள்வியிருந் திருநிதியம் வழங்குநக ரெங்கும்
கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்குமலி சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

6. விடையரவக் கொடியேந்தும் விண்ணவர்தங் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங் காணவரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்கள்

உடையவிழக் குழலவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்க ளுந்திவரு கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளைக் களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

7. அருமணியை முத்தினை யானஞ்சு மாடு
மமரர்கடம் பெருமானை யருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பி னூறலிருந் தேனைத் [னைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந்
திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின்
கருமணிகள் போல்நீல மலர்கின்ற கழனிக் [கரைமேல்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

8. இழைதழுவு வெண்ணூலு மேவுதிரு மார்பி
னீசன்ற னெண்டோள்கள் வீசியெரி யாடக்
குழைதழுவு திருக்காதிற் கோளரவ மசைத்துக்
கோவணங்கொள் குழகனைக் குளிர்சடையி னானைத்
தழைதழுவு தண்ணிறத்த செந்நெலத னயலே
தடந்தாள மென்கரும்பின் றாழ்கிடங்கி னருகே
கழைதழுவித் தேன்றொடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

9. குனிவினிய கதிர்மதியஞ் சூடுசடை யானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்டினங்கள் பாடப்
பனியுதிருஞ் சடையானைப் பால்வெண்ணீற் றானைப்
பலவுருவுந் தன்னுருவே யாயபெரு மானைத்

துனிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநீலங் கண்வளருஞ் சூழ்கிடங்கி னருகே
கனிவினிய கதலிவனந் தழுவுபொழிற் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

10. தேவியம்பொன் மலைக்கோமான் றன்பாவை யாகத்
தனதுருவ மொருபாகஞ் சேர்த்துவித்த பெருமான்
மேவியவெந் நரகத்தி லழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுதலானைத்
தூவியவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கொண்டை மிளிர்ந்துகய றுள்ளிவிளையாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

11. திரையினார் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியினானைக்
கரையினார் புனறழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
கானாட்டு முள்ளூரிற் கண்டுகழற் றொழுது
உரையினார் மதயானை நாவலா ரூர
னுரிமையா லுரைசெய்த வொண்டமிழ்கள் வல்லார்
வரையினார் வகைஞால மாண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பவர் தாமே.

திருக்கூடலையாற்றூர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. வடிவுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

2. வையக முழுதுண்ட மாலொடு நான்முகனும்
பையர விளவல்குற் பாவையொ டும்முடனே
கொய்யணி மலர்ச்சோலைக் கூடலை யாற்றூரில்
ஐயனிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

3. ஊர்தொறும் வெண்டலைகொண் டுண்பலி யிடுமென்று
வார்தரு மென்முலையாள் மங்கையொடும் முடனே
கூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரில்
ஆர்வனிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

4. சந்தண வும்புனலுந் தாங்கிய தாழ்சடையன்
பந்தண வும்விரலாள் பாவையொடும் முடனே
கொந்தண வும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அந்தணன் வழிபோந்த வதிசய மறியேனே.

5. வேதியர் விண்ணவரும் மண்ணவ ரும்தொழநற்
சோதிய துருவாகிச் சுரிகுழ லுமையோடும்
கோதிய வண்டறையுங் கூடலை யாற்றூரில்
ஆதியிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

6. வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவன் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தனிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

7. மழைநுழை மதியமொடு வாளர வஞ்சடைமேல்
இழைநுழை துகிலல்கு லேந்திழை யாளோடும்
குழையணி திகழ்சோலைக் கூடலை யாற்றூரில்
அழகனிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

8. மறைமுதல் வானவரும் மாலய னிந்திரனும்
பிறைநுதன் மங்கையொடும் பேய்க்கண முஞ்சூழக்
குறள்படை யதனோடுங் கூடலை யாற்றூரில்
அறவனிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

9. வேலையி னஞ்சுண்டு விடையது தானேறிப்
பாலன மென்மொழியாள் பாவையொ டும்முடனே
கோலம துருவாகிக் கூடலை யாற்றூரில்
ஆலனிவ் வழிபோந்த வதிசய மறியேனே

10. கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை யதிசய மிதுவென்று
நாடிய வின்றமிழா னாவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே.

VRIDDACHALAM.

விருத்தாசலம்

திருமுதுகுன்றம்—விருத்தாசலம் (1)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ் விடமுண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச் சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகி லொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முதுகுன்றடைவோமே.
[தொத்த=திரட்சி].

2. தழையார்வட வியவீதனிற் றவமேபுரி சைவன்
இழையாரிடை மடவாளொடு மினிதாவுறை விடமாம்
மழைவானிடை முழவவ்வெழில் வளைவாளுகிரெரிகண்
முழைவாளரி குமிறும்முயர் முதுகுன் றடைவோமே.
[வடவி=ஆலமரம். முழை=குகை. வாளரி=சிங்கம்.]

3. விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனையொண்
டளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிர முடையவ் வவனோடும்
முளைமாமதி தவழும்முயர் முதுகுன் றடைவோமே.

4. சுரர்மாதவர் தொகுகின்னர ரவரோ தொலைவில்லா
நரரானபன் முனிவர்தொழ விருந்தானிட நலமார்
அரசார்வர வணிபொற்கல னவைகொண்டு பன்னாளும்
முரசார்வருமணமொய்ம்புடைமுதுகுன்றடை
வோமே.

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN No. 1

1. Let us go forth to Vriddachalam, Most Ancient of Hills, whose feet Manimuttar washes with bunches of honey-dropping flowers, cool sandal, *akil*, and radiant *kunkumam*. It is the seat of Him whose frame is radiant as the flame and whose tall crown is studded with countless gems. He swallowed the poison, churned out of the ocean, with the Himalayas fixed as a churning rod.

2. Let us go forth to Vriddachalam, Most Ancient of Hills where, when rain-clouds roar and flash their lightning, the lions with sharp crooked claws and sparkling eyes roar back from their caves! It is the pleasant seat of Him who with the slender maid by His side, sits down to perform austerities under the shade of the densefoliaged banyan tree.

3. Let us go forth to Vriddachalam, Most Ancient of Hills, on whose top sprawls the crescent moon, and so doth the many-rayed sun! It is the seat of the Lord of Grace who saves mankind from the bondage of life inborn with and inherent in man.

4. Let us go forth to Vriddachalam, Most Ancient of Hills, where abound marriage festivities with beat of drum and display of costly gold ornaments. It is the seat of Him who is worshipped by Gods, ascetics, the *Kinnaras* and the immortal saints among men.

5. அறையார்கழ லந்தன் றணை யயின்மூவிலை யழகார்
கறையார்நெடு வேலின்மிசை யேற்றானிடங் கருதில்
மறையாயின பலசொல்லியொண் மலர்சாந் தவை
கொண்டு
முறையான்மிகு முனிவர்தொழு முதுகுன் றடை
வோமே.

[கறை = இரத்தம்.]

6. ஏவார்சிலை யெயினன் னுரு வாகியெழில் விசயற் [கில்
கோவாதவின் னருள்செய்தவெம் மொருவர்க்கிட முலக
சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழு முதுகுன் றடைவோமே.

[சிலை = அம்பு.] கோவாத = கெடாத. மூவாத = மூப்பில்லாத.]

7. தாழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோ னுறைகோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமா டகசாலை
முழவோடிசை நடமுன்செயு முதுகுன் றடைவோமே.

8. செதுவாய்மைகள் கருதிவ்வரை யெடுத்ததிற லரக்கன்
கதுவாய்கள்பத் தலறியிடக் கண்டானுறை கோயில்
மதுவாயசெங் காந்தண்மலர் நிறையக் குறைவில்லா
முதுவேய்கண்முத் துதிரும்பொழின் முதுகுன்
றடைவோமே.

[செதுவாய்மைகள் = பொய்மைகள். முதுவேய் = மூங்கில்கள்.]

9. இயலாடிய பிரமன்னரி யிருவர்க் கறிவரிய
செயலாடிய தீயாருரு வாகியெழு செல்வன் [தருகே
புயலாடுவண் பொழில்சூழ்புனற் படப்பைத் தடத்
முயலோடவெண் கயல்பாய்தரு முதுகுன் றடை
வோமே.

[இயலா = மாறுகொண்ட.]

5. If we seek Him who bore on his radiant long trident the blood of Anthakasura of the sounding anklet bells, let us go forth into Vriddachalam, Most Ancient of Hills, where, chanting the Vedas, with radiant flowers and sandal paste, many saints worship according to established rites.

6. If we seek on this Earth, the place of Him who took the shape of a bow-and-arrow-bearing hunter and bestowed on Arjun an undecaying boon, let us go forth to Vriddachalam, Most Ancient of Hills, where those that never die, those that are not born again, those that are famous for their austerities and the unageing ascetics, worship.

7. If we seek the temple of Him whose frame is radiant as fire, who bears on His locks the crescent, and who rides much on a young and valiant bull, let us go forth to Vriddachalam, Most Ancient of Hills, where with other festal sounds mix sounds of women dancing and singing.

8. If we seek the temple of Him who mads the ten blood-stained mouths of Ravana bellow with pain, when he lifted up Mount Kailas under influence of false doctrines, let us go forth to Vriddachalam, Most Ancient of Hills, where the honey-bearing blossoms of *the Gloriosa Superba* meet the eye everywhere and from old bamboos drop out pearls !

9. The Lord who rose as a flame and transcended the cognizance of Brahma and Vishnu, disputants of their own superiority, abides at Vriddachalam, Most Ancient of Hills. Let us go forth thither where rain-clouds roll over lovely groves water-surrounded! There the hare runs and the carp leaps out of the water in play.

10. அருகரொடு புத்தரவ ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி யுடையானிட மலரார்
கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சி யதுபாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன் றடைவோமே.

11. முகில்சேர்தரு முதுகுன் றடை யானைம்மிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம் பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக ளிசையோ டிவைபத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர் பாவம் மடையாவே.

10. Jains and Buddhists know Him not. He has wedded the daughter of the Mountain-King; His standard bears the Bull as an emblem. Maidens with raven locks sing *kurinchi* songs in praise of Muruga. That place is Vriddachalam. Let us go forth thither.

11. Sin can never attach to any, who sing with proper tune, these peerless verses of Tirugnana Sambhanda who has sung the praise of the Lord, of Vriddachalam most ancient of cloud-capped Hills!

திருமுதுகுன்றம் 2

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. தேவராயு மசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரிகா னீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மாலீ சனென்னும்
மூவராய முதலொருவன் மேயதுமு துகுன்றே.

[விரை = வாசனை]

2. பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை விண்ணியமா னனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயதுமு துகுன்றே.

[காலு = காற்று. யமான் = யாகத்தலைவன்]

3. வாரிமாகம் வைகுதிங்கள் வாளரவஞ் சூடி
நாரிபாக நயந்துபூமே லான்முகன்றன் றலையில் [தோர்
சீரிதாகப் பலிகொள்செல்வன் செற்றலுந்தோன் றிய
மூரிநாகத் துரிவைபோர்த்தான் மேயதுமு துகுன்றே.

[மாதம் = ஆகாயம். நாரி = பெண். மூரி = வலிமை. நாகம் = யானை.]

4. பாடுவாருக் கருளுமெந்தை பனிமுதுபௌ வமுந்நீர்
நீடுபாரு முழுதுமோடி யண்டர்நிலை கெடலும்
நாடுதானு மூடுமோடி ஞாலமுநான் முகனும்
ஊடுகாண மூடும்வெள்ளத் துயர்ந்ததுமு துகுன்றே.

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN No. 2.

1. It is at Vriddachalam—Most Ancient of Hills—that the Lord abides who manifests himself as a celestial, as *asura*, as an-adept, as a chanter of the Vedas, as Earth, Sky, Fire, Wind and Water, as Brahma of the fragrant lotus, as Vishnu lotus-eyed, as the Lord, and as one higher than all the three!

2. It is at Vriddachalam—Most Ancient of Hills—that the Lord abides who manifests Himself as Attachment, as the Sun many-rayed, as the Moon, as the Earth as the dashing Water, as Fire, as Wind, as the Sky above, as the Human Soul, as Woman, as Manifold Existence, as Brahma, as Vishnu, as the Vedas, all these and as something apart from these!

3. It is at Vriddachalam—Most Ancient of Hills—that the Lord abides, who wears the flood,—the Ganges—that celestial wanderer the Moon, and the fierce Serpent as ornaments; who hath the maid as part of Himself; who begs with Brahma's Skull as a bowl; and who tore up the Elephant that was created by His own anger and which he wore, as having conquered anger and conceit!

4. The Lord that is gracious to singers, abides at Vriddachalam—Most ancient of Hills—which rose up when the flood of cold and Ancient waters covered up all the Earth, destroying mankind, swallowing up cities and submerging even Brahma, the Creator!

5. வழங்குதிங்கள் வன்னிமத்த மாசுணமீ சணவிச்
செழுங்கல்வேந்தன் செல்விகாணத் தேவர்திசை
வணங்கத்
தழங்குமொந்தை தக்கைமிக்க பேய்க்கணம்பூ தஞ்சூழ
முழங்குசெந்தீ யேந்தியாடி மேயதுமு துகுன்றே.

[மத்த=ஊமத்தை. மாசுணம்=பாம்பு. மொந்தை=ஒருவகை பாத்திரம். தக்கை=ஒருவகை வாத்தியம்

6-7. சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட் டொல்லரார்நல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந் தானினைத்தைம்
புனலும்
ஆழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி மேயதுமு துகுன்றே.

[இதழி=கொன்றை. சழிந்த=நெருங்கிச் சிந்த.]

8. மயங்குமாயம் வல்லராகி வானினொடு நீரும்
இயங்குவோருக் கிறைவனைய விராவணன்றோ ணெரித்த
புயங்கராக மாநடத்தன் புணர்முலைமா துமையாள்
முயங்குமார்பன் முனிவரேத்த மேயதுமு துகுன்றே.

[புயங்கர்=பாம்பை யணிந்தவர்.]

9. ஞாலமுண்ட மாலுமற்றை நான்முகனும் மறியாக் [ல்
கோலமுண்டர் சிந்தைகொள்ளா ராயினுங்கொய் மலரா
ஏலவிண்டை கட்டிநாம மிசையவெப்போ துமேத்தும்
மூலமுண்ட நீற்றர்வாயான் மேயதுமு துகுன்றே.

[மூலமுண்ட=திரிபுண்டரம்.]

5. It is, Vriddachalam—Most Ancient of Hills—where abides the Lord who, adorned with the Moon, the leaves of the *Vanni* and the well-fed serpent, went forth to see the daughter of the Mountain King, surrounded by all the sounding elements, with music of drums, the celestials all around worshipping Him, Himself dancing with the roaring fire on His hand!

6—7. It is at Vriddachalam—Most ancient of Hills—that the triple-eyed Lord abides, whose head is adorned with the sweeping swirling Ganges, the well-set Crescent, the ancient Serpent and the leaves of the Vanni and who bestows Benevolence, Wealth, Bliss and Happiness of Heaven on those wise men, who adopting sivite symbols, have conquered the five senses!

8. He, who crushed the strength of Ravana lord of those, who are adepts in deception and can move about in the air and on the water, He who bears on His breast the Lady Uma, the Lord of stately gait, praised by all sages, He abides at Vriddachalam, Most Ancient of Hills.

9. The spot where abides the Lord who transcended the comprehension of Vishnu who swallowed up all the universe and of the four-faced Brahma, and who is comprehended by those who seek Him with flowers and sing his praises, the Lord with the throat black with ocean poison, it is Vriddachalam, Most Ancient of Hills.

10. உறிகொள்கையர் சீவரத்த ருண்டுழன்மிண்டர்சொல்லை
நெறிகளென்ன நினைவுறாதே நித்தலுங்கை தொழுமின்
மறிகொள்கையன் வங்கமுந்நீர்ப் பொங்குவிடத்
தையுண்ட
முறிகொண்மேனி மங்கைபங்கன் மேயதுமு
துகுன்றே.

[வங்கம்=கப்பல். முறி=தளிர்]

11. மொய்த்துவானோர் பல்கணங்கள் வணங்குமு
துகுன்றைப்
பித்தர்வேடம் பெருமையென்னும் பிரமபுரத் தலைவன்.

10. Worship Him daily: be not misled by the false doctrines of Jains and Buddhists, men who carry slings, wear dirty clothes, eat and roll about! The place where abides the Lord, who bears the deer on his finger, drank off the poison surging from the seething waves of ocean, and has by His side the maid soft as tender leaves, it is Vriddachalam, Most ancient of Hills!

11. Vriddachalam at which the hosts of celestails worship in great crowds, the Lord who delights in playing the madman at Brahmapur.

திருமுதுகுன்றம்—விருத்தாசலம் (III)

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. நின்று மலர் தூவி, இன்று முதுகுன்றை
நன்று மேத்துவீர்க், கென்று மின்பமே.

2. அத்தன் முதுகுன்றைப், பத்தி யாகிநீர்
நித்த மேத்துவீர்க், குய்த்தல் செல்வமே.

3. ஐயன் முதுகுன்றைப், பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வைய முமதாமே.

5. ஈசன் முதுகுன்றை, நேச மாகிநீர்
வாச மலர்தூவப், பாச வினைபோமே.

5. மணியார் முதுகுன்றைப், பணிவா ரவர்கண்டீர்
பிணியா யினகெட்டுத், தணிவா ருலகிலே.

6. மொய்யார் முதுகுன்றில், ஐயா வெனவல்லார்
பொய்யா ரிரவோர்க்குச், செய்யா லணியாளே.

7. விடையான் முதுகுன்றை, இடையா தேத்துவார்
படையா யினசூழ உடையா ருலகமே.

8. பத்துத் தலையோனைக், கத்த விரலூன்று
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே.

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN No. 3.

1. Stand up and shower flowers: sing the praise of the Lord of Vriddachalam: Bliss shall be yours for ever!

2. Piously praise and worship the Lord of Vriddachalam; fortune will come seeking you.

3. That falsehood may perish, fold hands in worship before the lord of Vriddachalam! all the world will be yours!

4. Worship with flowers, lovingly at Vriddachalam, you will be rid of the soul's bondage,

5. Who worships at ruby-rich Vriddachalam, shall be free from disease and possess the Earth.

6. Those who call on the Lord at Vriddachalam,—full of glory—shall not want.

7. Those who praise constantly the Lord of Vriddachalam, rider on a bull, shall be surrounded by kinsmen and own all the Earth.

8. Worship at Vriddachalam in great crowds, the Lord who planting his toe firmly, made the ten-headed Ravana bellow with pain.

9. இருவ ரறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே.

10. தேர ரமணரும், சேரும் வகையில்லான்
நேரின் முதுகுன்றை, நீர்நின் றுள்குமே.
[நேர் = ஒப்பில்லாத. உள்குமே = நினையுங்கள்.]

11. நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்று முரைவல்லார், என்று முயர்வோரே.

9. Whoever thinks of Him, whom the Two could not know, shall multiply on Earth and long abide thereon.

10. Grace wells forth like a fountain, when dissociating yourself from Jains and Buddhists, you worship at Vriddachalam.

11. Whoever can sing these good verses of Sambanda about Vriddachalam will ever be great.

திருமுதுகுன்றம் IV.

1. மெய்த்தாறு சுவையு மேழிசையு
மெண்குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோ லரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூ ருலவு தெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கு முதுகுன்றமே.

[வெதிரு=மூங்கில். நித்திலம்=முத்து.]

2. வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன் மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர் கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்ற றிருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே.

[கயம்=குளம். மூரி=மிகுதி.]

3. தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர் கோயில்

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN NO. 4.

1. The place sought out by Him whom the six savours, the seven notes and the eight Virtues seek, by Him who transcends the Four Vedas, has by His side the crystal-clear Maid, and is the Head and Chief of the six forms of Religion, it is Vriddachalam, Most Ancient of Hills where the wandering waters of the Marimuttar receive the pearls from bamboos and scatter them on either shore.

2. The temple of Him who with his consort took the shape of a Hunter and gave unto Arjuna the *Pasu-pathasthra* or arrow, is at Vriddhachalam, where the groves are cloud-capped, fruits and flowers fall in abundance, everything grows fertile and the south breeze softly wafts its fragrance about.

3. The temple of Him who suitably punished Thakka the performer of the great Yaga, Indra, Chandra, (the moon) Ecchan, Arukkar, the Fire, Vidadha according to their sins, is at Vriddachalam, where mango and jack

கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குவைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.
[கொக்கில்=மாமரம். வருக்கை=பலாமரம்]

4. வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோ னிந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநா
ணரியெரிகால் வாளியாக
மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிட முதுகுன்றமே.
[அரி=திருமால்.]

5. இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபா லெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்ப ரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண் கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன் முது குன்றமே.
[எள்காது=இகழாது. கழை=மூங்கில்.]

6. நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிட நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறிய மோதித்

and plantain with areca and cocoanut palm in bunches abound in groves! The juice of the fruits overflows in the long fields round about and the slush never dries up!

4, When the wicked in their excess attacked the Gods and the Gods including Brahma and Vishnu sought His help, He making a chariot of them, with the Himalayas as a bow, Adishesha as the bow string and Vishnu himself as the fire-spitting arrow, destroyed the three cities in a moment: such a Lord abides at Vriddachalam.

5. The abode of Him who with the soft gentle maid as part of Him, is dressed in elephant skin is Vriddachalam where the monkey fearing rain, seeks shelter with its young in the stone-caves where elephants seek their food.

6. The abode of the Lord who wears the grinning skull as an ornament is Vriddachalam, where the Manimuttar scatters on either shore a variety of substances

தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப் பாய்ந்து
முகையார்செந் தாமரைகண் முகமலர
வயறழுவு முதுகுன்றமே.

7. அறங்கிளரு நால்வேத மாலின்கீ
ழிருந்தருளி யமரர் வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தி
னொன்றறுத்த நிமலர் கோயில்
திறங்கொண்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமி மார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே.

8. கதிரொளிய நெடுமுடிபத் துடையகட
லிலங்கையர்கோன் கண்ணும் வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
மலையைநிலை பெயர்த்த ஞான்று
மதிலளகைக் கிறைமுரல மலரடியொன்
றூன்றிமறை பாட வாங்கே
முதிரொளிய சுடர்நெடுவாண் முன்னீந்தான்
வாய்ந்த பதி முதுகுன்றமே.
[முரல = கதற.]

9. பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்த மாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
துறநாடி யுண்மை காணாத்

and over-flowing either bank, flings down the blue lilies that grow in the fields and makes the lotuses laugh and open.

7. The temple of the Lord who expounded the four Vedas under the shade of the banyan and who cut off the fifth head of Brahma, is at Vriddachalam, where young girls catching the gift of the rivers, keep the pearls to cook and fling away the precious stones.

8. On the day when Ravana King of Lanka wearing the radiant tall crowns on his ten heads uprooted Mt. Kailas, the Lord pressing but a toe made his eyes bulge out, and the tongues loll out, but when he chanted the Vedas gave him the radiant sword. His abode is Vriddachalam.

9. The abode of the Lord, whose height and depth, the flower-seated Brahma and the *thulsi*-wearing Vishnu could not as bird and pig discover, the abode of Him the radiant-bodied, sought of celestials, is the Hill which

தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்த முதுகுன்றமே.

10. மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளாற்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்றொண்டீர்
ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியு முதுகுன்றமே.

11. முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு
முதுகுன்றத் திறையைமூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழிற் றமிழ்ஞான
சம்பந்தன் சமைத்த பாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே.

[கழுமலம் = சீர்காழி.]

when the never-ageing flood covered up all the world rose higher than the flood, Vriddachalam the Most Ancient of Hills.

10. Listen not to the words ef the wearers of dirty clothes, the bearers of wide-mat seats; they are defectives intellectually! Rather with full knowledge, O Ye devotees 'listen to those who, well-versed in the four Vedas, having conquered their senses and taken on the vow of silence perform austerities at Vriddachalam.

11. The Lord of Vriddachalam washed by the sounding waters of the Manimuttar, has been sung by Tiru-gnana Sambanda of Kazhumalam ancient place with unageing renown and twelve separate names. He has been guarding and worshipping the sacred fire. Whoever sings his verses according to their best capacity will long reign over this Earth.

V. திருமுதுகுன்றம்—விருத்தாசலம்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா வென்றங் கடியார் தங்கட் கருள்செய்வாய்
ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்குங் கோயின் முதுகுன்றே.

2. எந்தை யிவனென் றிரவி முதலா விறைஞ்சுவார்
சிந்தை யுள்ளே கோயி லாகத் திகழ்வானை
மந்தி யேறி யினமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்குங் கோயின் முதுகுன்றே.

3. நீடு மலரும் புனலுங் கொண்டு நிரந்தரம்
தேடு மடியார் சிந்தை யுள்ளே திகழ்வானைப்
பாடுங் குயிலி னயலே கிள்ளை பயின்றேத்த
மூடுஞ் சோலை முகிறோய் கோயின் முதுகுன்றே.
[கிள்ளை=கிளி.]

4. தெரிந்த வடியார் சிவனேயென்று திசைதோறும்
குருந்த மலருங் குரவி னலருங் கொண்டேந்தி
இருந்து நின்று மிரவும் பகலு மேத்துஞ்சீர்
முரிந்து மேகந் தவழுஞ் சோலை முதுகுன்றே.
[குரவி=ஒருவகை மரம். முரிந்து=தடைபட்டு.]

5. வைத்த நிதியே மணியே யென்று வருந்தித்தம்
சித்த நைந்து சிவனே யென்பார் சிந்தையார்
கொத்தார் சந்துங் குரவும் வாரிக் கொணர்ந்துந்தும்
முத்தா றுடைய முதல்வர் கோயின் முதுகுன்றே.

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN No. 5

1. "O Lord that art great forgive the faults of us who are small!" So ask the devotees and the Lord bestows His Grace on them. That spot is Vriddachalam, which rose high when the floods submerged all this Earth The unageing saints worship there.

2. From the Sun downwards all creation calls on Him as Father and Lord! He shines in the hearts of devotees as in a temple! Even monkeys pluck a variety of flowers and flinging them worship at the shrine of Vriddachalam.

3. He that glows as in a temple in the heart of those who with water and flowers daily worship Him is at Vriddachalam, where in the dense covered cloud-abiding groves, the Koel sings and the parrot practises speech!

4. The place where the knowing devotees carry flowers of the *Kuruntha* and *the Kura* and sitting or standing worship night and day the Lord Siva is Vriddachalam where in the groves the torn clouds sprawl and float.

5. The temple, at which devotees melting with piety callon Siva as the stored-up treasure, precious gem and meditate on Him, is at Vriddachalam where the Manimuttar flings on either shore sandal and bunches of *Kura* flowers.

6-7. வம்பார் கொன்றை வன்னி மத்த மலர்தூவி
நம்பா வென்ன நல்கும் பெருமா னுறைகோயில்
கொம்பார் குரவு கொகுடி முல்லை குவிந்தெங்கும்
மொய்ம்பார் சோலை வண்டு பாடு முதுகுன்றே.

[கொகுடி முல்லை=ஒருவகை முல்லை.]

8. வாசங் கமழும் பொழில்சூ ழிலங்கை வாழ்வேந்தை.
நாசஞ் செய்த நங்கள் பெருமா னமர்கோயில்
பூசை செய்த வடியார் நின்று புகழ்ந்தேத்த
மூசி வண்டு பாடுஞ் சோலை முதுகுன்றே.

9. அல்லி மலர்மே லயனு மரவி னணையானும்
சொல்லிப் பரவித் தொடர வொண்ணாச் சோதியூர்
கொல்லை வேடர் கூடி நின்று கும்பிட
முல்லை யயலே முறுவல் செய்யு முதுகுன்றே.

[முறுவல்=புன்சிரிப்பு.]

10. கருகு முடலார் கஞ்சி யுண்டு கடுவேதின்
உருகு சிந்தை யில்லார்க் கயலா னுறைகோயில்
திருகல் வேய்கள் சிறிதே வளையச் சிறுமந்தி
முருகின் பணைமே லிருந்து நடஞ்செய் முதுகுன்றே.

[முருகின்=ஒருவகை முல்லை.]

11. அறையார் கடல்சூ ழந்தண் காழிச் சம்பந்தன்
முறையான் முனிவர் வணங்குங் கோயின் முதுகுன்
குறையாப் பனுவல் கூடிப் பாட வல்லார்கள் [றைக்
பிறையார் சடையெம் பெருமான் கழல்கள் பிரியாரே.

[அறை=ஒலி.]

6-7. The temple where abides the Lord who is worshipped with fragrant *Konrai* and the rich flowers of the *Vanni* and called the Lord of Trust, is at Vriddachalam where bees and beetles sing in thick groves of *Kura* and *Mullai*.

8. The temple of our Lord who destroyed Ravana, King of fragrant-grove-surrounded Lanka, is at Vriddachalam where devotees worshipping stand and praise the Lord and the bees are resonant in the groves

9. The flower-god and He that sleeps on the snake cannot speak His praise or follow Him up into that radiant city, where the hunters worship in crowds and the jasmines open in their neighbourhood.

10. He that is alien to them who are dirty of body, drink conjee out of their hands, as from a bow, and are wholly unregenerate, abides at Vriddachalam, where young monkeys making the twisted bamboos bend, jump on to *Palasa* trees on whose branches they dance merrily.

11. Sambanda of sounding-sea-surrounded Shiyali has sung of Vriddachalam where saints worship. Those who can sing these songs without loss of faith or enthusiasm will never be far from the sacred feet of Him who wears the crescent.

திருமுதுகுன்றம் VI.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலா ராயிழை யாளொடு மமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே.

[புற=முல்லை]

2. வெறியுலாங் கொன்றையந் தாரினன் மேதகு
பொறியுலா மரவசைத் தாடியோர் புண்ணியன்
மறியுலாங் கையினன் மங்கையோ டமர்விடம்
செறியுளார் புறவணி திருமுது குன்றமே.

[மரவசை=கட்டி. மறி=மான்]

3. ஏறினர் விடைமிசை யிமையவர் தொழுவுமை
கூறனர் கொல்புலித் தோலினர் மேனிமேல்
நீறனர் நிறைபுனர் சடையனர் நிகழ்விடம்
தேறலார் பொழிலணி திருமுது குன்றமே.

[தேறல்=தேன்]

4. உரையினு ருறுபொரு ளாயினு னுமையொடும்
விரையினர் கொன்றைசேர் சடையினர் மேவிடம்
உரையினு ரொலியென வோங்குமுத் தாறுமெய்த்
திரையினு ரெறிபுனர் றிருமுது குன்றமே.

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN No. 6.

1. The place where the lovely Lord, worshipped by the celestials with beautiful flowers, abides with the tender maid, is Vriddachalam where rain-fed water-falls falling white wash the flower-gardens of radiant white *Mullai*.

2. The Lord of the fragrant *Konrai* garland, the virtuous Lord who set the great serpent dancing, He who bears the deer on his finger and the maid by his side, abides at Vriddachalam, abounding in flower-gardens.

3. Mounted on a bull, worshipped by the celestials, having the maid as part of Himself, wearer of the fierce tiger-skin, ash-besmeared, bearer of the full-flooded Ganges on His locks, He abides at Vriddachalam full of honey-dripping flower-gardens!

4. The firm hope and treasure of those who utter His praise, companion of Uma, wearer of locks fragrant with fine-scented *Konrai*, His abode is Vriddachalam, washed by the Manimuttar, raging with resounding floods and flinging the high waves on either shore.

5. கடியவா யினகுரார் களிற்றினைப் பிளிறவோர்
இடியவெங் குரலினோ டாளிசென் றிடுநெறி
வடியவாய் மழுவினன் மங்கையோ டமர்விடம்
செடியதார் புறவணி திருமுது குன்றமே.

[வடியவாய்=வடிவத்தாய்.]

6. கானமார் கரியினீ ருரிவையார் பெரியதோர்
வானமார் மதியினோ டரவர்தா மருவிடம்
ஊனமா யினபிணி யவைகெடுத் துமையொடும்
தேனமார் பொழிலணி திருமுது குன்றமே.

7. மஞ்சர்தா மலர்கொடு வானவர் வணங்கிட
வெஞ்சொலார் வேடரோ டாடவர் விரும்பவே
அஞ்சொலா ளுமையொடும் மமர்விட மணிகலைச்
செஞ்சொலார் பயிறருந் திருமுது குன்றமே.

8. காரினா ரமர்தருங் கயிலைநன் மலையினை
ஏரினார் முடியிரா வணனெடுத் தானிற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தருந் திருமுது குன்றமே.

[வாரி=ரவிக்கை.]

9. ஆடினார் கானகத் தருமறை யின்பொருள்
பாடினார் பலபுகழ்ப் பரமனா ரிணையடி
ஏடினார் மலர்மிசை யயனுமா லிருவரும்
தேடினா ரறிவொணார் திருமுது குன்றமே.

[ஏடி=இதழ்.]

5. The abode of the bearer of the shapely spear which pursues like the thunderous lion the harsh-mouthed elephant making it bellow, is grove-abounding Vriddachalam.

6. Vriddachalam with its honey dripping groves is the abode of Him who stripped the wild Elephant of its skin, wore the crescent on His locks; and the serpent on His person, He abides with the maid Uma. All defects and diseases are rectified here.

7. At Vriddachalam the Lord abides with the sweet-spoken Uma; the celestials worship with bunches of flowers, Vedas are tunefully chanted and even harsh-spoken hunters and others are delighted with a sight of the Lord.

8. It is Vriddachalam where abides with the bodice-wearing Uma, our Lord, wearer of Ocean-poison who when from conceit Ravana King of Lanka lifted up mount Kailas, angrily trampled him under foot!

9. The feet of Him—who danced in the forest, and disclosed in song the substance of the Vedas, the Lord praised by all,—which neither Brahma the lotus Lord nor Vishnu could discover, His abode is at Vriddachalam.

10. மாசுமெய் தூசுகொண் டுழல்சமண் சாக்கியர்
பேசுமெய் யுளவல்ல பேணுவீர் காணுமின்
வாசமார் தருபொழில் வண்டினம் மிசைசெயத்
தேசமார் புகழ்மிகுந் திருமுது குன்றமே.

11. திண்ணினார் புறவணி திருமுது குன்றரை
நண்ணினான் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
எண்ணினா னீரைந்து மாலையு மியலுமாப்
பண்ணினாற் பாடுவார்க் கில்லையாம் பாவமே.

10. O Ye who hold by the lies spoken by the dirt befouled Jains, and Buddhists, behold, Vriddachalam with its scented groves and singing bees is the famous abode of the Lord.

11. Sin will not attach to those who naturally and with proper tune, sing these ten verses composod by Gnanasambanda of Shiyali in praise of the Lord of Vriddachalam abounding in gardens of radiant white *Mullai* flowers.

திருமுதுகுன்றம்—விருத்தாசலம் VII.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய
பரசமர் படையுடை யீரே
பரசமர் படையுடை யீருமைப் பரவுவார்
அரசர்க ளுலகிலா வாரே.

[பரசு=ஒருவகை ஆயுதம்.]

2. மொய்குழ லாளொடு முதுகுன்ற மேவிய
பையர வம்மசைத் தீரே.
பையர வம்மசைத் தீருமைப் பாடுவார்
நைவிலர் நாடொறு நலமே.

3. முழவமர் பொழிலணி முதுகுன்ற மேவிய
மழவிடை யதுவுடை யீரே
மழவிடை யதுவுடை யீருமை வாழ்த்துவார்
பழியொடு பகையிலர் தாமே.

[மழ=இளமை.]

4. முருகமர் பொழிலணி முதுகுன்ற மேவிய
உருவமர் சடைமுடி யீரே
உருவமர் சடைமுடி யீருமை யோதுவார்
திருவொடு தேசினர் தாமே.

[முரு=வாசனை. தேசினர்=புகழுடையவர்.]

5-6-7. ... .

VRIDDACHALAM—TIRU-GNANA-SAMBANDAR.

HYMN NO. 7

1. O, Lord equipped with arms in drum-resounding Vriddachalam, those that worship Thee so equipped with arms and forces, shall rule over the whole world.

2. O, Lord of Vriddachalam abiding with the maid and making the snake dance, those that worship Thee shall never suffer, but be happy through all their days.

3. O, Lord of Vriddachalam adorned with sounding groves, O, Lord, rider on a young bull, whoever praises thee shall be free from enmity and blame.

4. O, Lord of Vriddachalam abounding in fragrant groves, O, Wearer of the lovely locks, those that praise Thee shall attain to fame and prosperity.

5-6-7. ... ...

8. முத்தி தருமுயர் முதுகுன்ற மேவிய
பத்து முடியடர்த் தீரே
பத்து முடியடர்த் தீருமைப் பாடுவார்
சித்தநல் லவ்வடி யாரே.

9. முயன்றவ ரருள்பெறு முதுகுன்ற மேவியன்
இயன்றவ ரறிவரி யீரே
இயன்றவ ரறிவரி யீருமை யேத்துவார்
பயன்றலை நிற்பவர் தாமே.

[இயன்றவர் = மாறுகொண்டவர்.]

10. மொட்டலர் பொழிலணி முதுகுன்ற மேவிய
கட்டமண் டேரைக்காய்ந் தீரே
கட்டமண் டேரைக்காய்ந் தீருமைக் கருதுவார்
சிட்டர்கள் சீர்பெறு வாரே.

11. மூடிய சோலைசூழ் முதுகுன்றத் தீசனை
நாடிய ஞானசம் பந்தன்
நாடிய ஞானசம் பந்தன் செந்தமிழ்
பாடிய வவர்பழி யிலரே.

8. Oh Lord of Vriddachalam, bestower of salvation, wearer of dense locks, those that praise Thee are devotees that will achieve their desires!

9. Oh Lord of Vriddachalam where all efforts are crowned with success, Lord, incomprehensible to Thy enemies, those that praise Thee will always be benefited.

10. Oh Lord of Vriddachalam abounding in groves where buds open into blossoms, Lord intolerant of shaven-headed Jains and Buddhists, who-ever thinks of Thee will attain to prosperity.

11. Oh Lord of shady grove-surrounded Vriddachalam who ever sings these songs of thy devotee Tirugnanasambanda shall be free from blame.

திருமுதுகுன்றம்—விருத்தாசலம் (VIII)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க்காற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவம் ஆட்டுவானைக்
கொல்வேங் கையதளானைக் கோவணவன் தன்னை
அருமணியை அடைந்தவர்கட் கமுதொப்பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

[ஆற்ற=மிகவும்]

2. காரொளிய கண்டத்தெங் கடவுள் தன்னைக்
காபாலி கட்டங்க மேந்தினானைப்
பாரொளியை விண்ணொளியைப் பாதாளத் தானைப்
பால்மதியஞ்சூடியோர் பண்பன் தன்னைப்
பேரொளியைப் பெண்பாகம் வைத்தான் தன்னைப்
பேணுவார் தம்வினையைப் பேணிவாங்குஞ்
சீரொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

[கட்டங்கம்=ஒருவகையாயுதம்.]

3. எத்திசையும் வானவர்கள் தொழநின்றானை ஏறார்ந்த
பெம்மானை யெம்மானென்று
பத்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப்பன்னாள்
பாமாலை பாடப்பயில் வித்தானை

VRIDDACHALAM—TIRU-NAVUK-ARASU.

HYMN No. 8.

1. O, how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam, that apple of the eye, hill of Gold, most easily accessible to those that meditate on Him, that crown jewel of religious teachers, He who makes the snake dance, wearer of the fierce tiger skin, rare Gem, nectar to those that seek access to him, bathes in *Pancha Kavya*, my refuge and holiest of jewels.

2. O, how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam, whose neck is radiant with ocean-poison, bearer of the skull and *kattanga* weapon, the light of the earth and the light of the heavens and of hell, wearer of the crescent Moon, great light, having the maid as a part of himself, destroyer of the evils of the devotees, the light radiant!

3. O how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam worshipped from all sides by the celestials, rider on a bull, Him who made me

முத்தினை யென்மணியை மாணிக்கத்தை முளைத்
செம்பவளக் கொழுந்தொப்பானைச் [தெழுந்த
சித்தனை யென் திருமுது குன்றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

4. ஊன்கருவின் உள்நின்ற சோதியானை உத்தமனைப்
பத்தர்மனம் குடிகொண்டானைக்
கான்திரிந்து காண்டீப மேந்தினானைக் கார்மேக
மிடற்றானைக் கனலைக்காற்றைத்
தான்தெரிந் தங்கடியேனை யாளாக்கொண்டு
தன்னுடைய திருவடி யென்தலைமேல் வைத்த
தீன்கரும்பைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

5. தக்கனது பெருவேள்வி தகர்த்தானைத் தாமரையான்
நான்முகனுந் தானேயாகி
மிக்கதொரு தீவளி நீராகாயமாய் மேலுலகுக்
கப்பாலா யிப்பாலானை
அக்கினொடு முத்தினையு மணிந்து தொண்டர்க்
கங்கங்கே அறுசமயமாகி நின்ற
திக்கினையென் திருமுது குன்றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

[வளி = காற்று. அக்கி = எலும்பு.]

6. புகழொளியைப் புரமெரித்த புனிதன் தன்னைப்
பொன்பொதிந்த மேனியனைப் புராணன் தன்னை
விழவொலியும் விண்ணொலியு மானான் தன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் தன்னைக்

bow to Him in devotion and sing of Him in songs, pearl, ruby, emerald, sprouted red coral, the object of my meditation !

4. O, how wicked and helpless have I been not knowing the Lord of Vriddachalam, that spark within the foetus, the Lord that abides in the mind of the devotees, He who as a hunter bestowed *Kandeepam* on Arjuna, blue throated, Fire, Wind, sweet as sugar-cane, He who accepting me has set His sacred feet upon my head !

5. O, how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam, destroyer of the sacrifice of Thakka, himself, Vishnu and Brahma, strong wind, Water, Air, transcending this world and the upper, wearer of bones and pearls, the centre of faith unto devotees pervading all the world !

6. O, how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam who is both lustre and praise, the pure one that burnt the three cities Golden-bodied, Ancient of days, music on earth and

கழலொலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக்
கடைதோறும் பிச்சைக் கென்றுசெல்லுந்
திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

7. போர்த்தானை யின்னுரிதோல் பொங்கப் பொங்கப்
புலியதளே உடையாகத் திரிவான் தன்னைக்
காத்தானை ஐம்புலனும் புரங்கள் மூன்றுங்
காலனையுங் குரைகழலாற் காய்ந்தான் தன்னை
மாத்தாடிப் பத்தராய் வணங்குந் தொண்டர்
வல்வினை வேரறும் வண்ணம் மருந்துமாகித்
தீர்த்தானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

8. துறவாதே யாக்கை துறந்தான் தன்னைச்சோதி
முழுமுதலாய் நின்றான் தன்னைப்
பிறவாதே யெவ்வுயிர்க்குந் தானேயாகிப்
பெண்ணினோ டாணுருவாய் நின்றான் றன்னை
மறவாதே தன்திறமே வாழ்த்துந் தொண்டர்
மனத்தகத்தே அனவரதம் மன்னிநின்று
திறலானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

9. பொற்றானைப் புலால்நாறு கபால மேந்திப்
புவலோக மெல்லா முழிதந்தானை
முற்றாத வெண்திங்கள் கண்ணியானை முழு
முதலாய் மூவுலகும் முடிவொன்றில்லாக்

heaven, Lord of Thiruvankadu begging his food from door to door, with the bangles and the anklets sounding, light radiant !

7. O, how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam, who wraps Himself in the stripped skin of the elephant and walks about clothed in the fierce tiger-skin, disciplined in His senses, destroyer of three cities, and of death and destroyer too of the sins of those who praising bow before Him in worship.

8. O, how wicked and helpless have I been, not knowing the Lord of Vriddachalam, who without renouncing has renounced, Himself radiant first principle un-born, source of all life in others, Himself man and woman taking His firm abode in the hearts of those who un-forgetting, bow before Him in daily worship.

9, O, how wicked and helpless have I been not knowing the Lord of Vriddachalam, pillar of gold, bearer of the flesh-smelling skull, wanderer over the whole universe, bearer of the crescent, and coronal, first

கற்றானைக் காளத்தி மலையான் தன்னைக்
கருதாதார் புரமூன்றும் எரிய அம்பால்
செற்றானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

10. இகழ்ந்தானை இருபதுதோள் நெரிய வூன்றி
யெழுநரம்பி னிசைபாடல் இனிதுகேட்டுப்
புகழ்ந்தானைப் பூந்துருத்தி மேயான் தன்னைப்
புண்ணியனை விண்ணவர்கள் நிதியந்தன்னை
மகிழ்ந்தானை மலைமகளோர் பாகம் வைத்து
வளர்மதியஞ் சடைவைத்து மாலோர்பாகந்
திகழ்ந்தானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே.

principle, pillar pervasive through three worlds, Lord of mount Kalahasti, destroyer of the enemies' three cities, the Lord indignant!

10. O, how wicked and helpless have I been not knowing the Lord of Vriddachalam, who crushed the twenty shoulders of disregarding Ravana but was delighted when he sang His praise with stringed instrument, Lord of Thiru—pun—thuruthi, holiness, treasure of the celestials, rejoicing in having as part of Himself Parvathi the daughter of the Mountain, wearer of the growing crescent, displayer of Vishnu as part of Himself.

திருமுதுகுன்றம்—விருத்தாசலம் IX.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. பொன்செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்
கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவடன் முகப்பே
என்செய்த வாறடிகே ளடியேனிட் டளங்கெடவே.

[செய்த=போன்ற. அளம்=துன்பம்.]

2. உம்பரும் வானவரும் முடனேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்
வம்பமருங் குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெருமானருளீ ரடியேனிட் டளங்கெடவே.

[வம்பம்=வாசனை.]

3. பத்தா பத்தர்களுக் கருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்ற மமர்ந்தவனே
மைத்தாருந் தடங்கண் பரவையிவள் வாடாமே
அத்தா தந்தருளா யடியேனிட் டளங்கெடவே.

4. மங்கையோர் கூறமர்ந்தீர் மறைநான்கும் விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர் திகழும்முது குன்றமர்ந்தீர்
கொங்கை நல்லாள்பரவை குணங்கொண்டிருந் தாள்
முகப்பே
அங்கணனே யருளா யடியேனிட் டளங்கெடவே.

VRIDDACHALAM—SUNDARAMURTI.

HYMN NO. 9.

1. Thy body is radiant as gold: Thou wearest the tiger skin: Thou didst burn the three cities, Oh! Lord of Vriddachalam! O Lord save me from my misery in the presence of this lightning-waisted lady, Paravai.

2. Thou gavest me gold in the presence of Brahmins and celestials Oh! Lord of Vriddachalam! Give it to me, my Lord to save me from my misery for this lady with the scented-locks Paravai pines with pain.

3. O, gracious unto devotees, triple-eyed Lord of salvation. Lord of Vriddachalam, rid me of my misery by giving me the gold so that this large-eyed, collyrium-painted lady Paravai may not suffer pain.

4. O, Lord of Vriddachalam, of whom the maid is a part, expounder of the Vedas, wearer of the Moon, be gracious and save me from my misery in the presence of this lovely-breasted lady Paravai.

5. மையாரும் மிடற்றாய் மருவார்புர மூன்றெரித்த
செய்யார் மேனியனே திகழும்முது குன்றமர்ந்தாய்
பையாரும் மரவே ரல்குலாளிவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளா யடியேனிட் டளங்கெடவே.
[மிடற்றாய்=கண்டம். பை=படம்.]

6. நெடியானான் முகனு மிரவியொடு மிந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முதுகுன்ற மமர்ந்தவனே
படியாரும் மியலாள் பரவையிவ டன்முகப்பே
யடிகேடந்தருளா யடியேனிட் டளங்கெடவே.
[படியாரும்=ஒப்பற்ற.]

7. கொந்தணவும் பொழில்சூழ் குளிர்மாமதின் மாளிகை
மேல்
வந்தணவும் மதிசேர் சடையாமுது குன்றுடையாய்
பந்தணவும் விரலாள் பரவையிவ டன்முகப்பே
அந்தணனே யருளா யடியேனிட் டளங்கெடவே.

8. பரசாருங் கரவா பதினெண் கணமுஞ்சூழ
முரசார் வந்ததிர முதுகுன்ற மமர்ந்தவனே
விரைசேருங் குழலாள் பரவையிவ டன்முகப்பே
அரசே தந்தருளா யடியேனிட் டளங்கெடவே.

9. ஏத்தா திருந்தறியே னிமையோர்தனி நாயகனே
மூத்தா யுலகுக்கெல்லா முதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தாருங் குழலாள் பரவையிவ டன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேனிட் டளங்கெடவே.

10. பிறையாருஞ் சடையெம் பெருமானரு ளாயென்று
முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில் வயல்நாவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதாஞ் சிவலோகமதே.

5. O, Lord of Vriddachalam, black-throated destroyer of enemies, cities, radiant of body, grant, out of Thy grace that my misery may cease. For, this lady Paravai is unhappy !

6. O, Lord of Vriddachalam worshipped with bowed heads by the stately Brahma, the Sun and the Moon, grant of Thy grace that my misery may cease in the presence of this shapely lady Paravai !

7. O, Lord of Vriddachalam where the cool moonlight rests on groves full of flowers in bunches, O, Lord of Thy grace, let my misery cease in the presence of this ball-fingered Lady Paravai !

8. O, Lord of Vriddachalam surrounded by the eighteen elements and sound of drums, grant of Thy grace that my misery may cease in the presence of this lady Paravai of fragrant locks !

9. O, Peerless Lord of the celestials, I have never refrained from praising Thee O ancient of days, Lord of Vriddachalam, grant of Thy grace that the misery of my wicked self may cease in the presence of this lady Paravai of flower-adorned locks.

10. The chief of Brahmins born in field-surrounded Tirunavalur, I have sung the praise of the Lord of Vriddachalam, worshipped in proper form by the celestials who beg favour of the Lord, wearer of the crescent. Whoso sings these songs shall attain to salvation.

திருமுதுகுன்றம் X.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. நஞ்சியிடை யின்று நாளையென்றும்மை நச்சுவார்
துஞ்சியிட்டாற் பின்னைச்செய்வ தென்னடிகேள் சொலீர்
பஞ்சியிடப்புட்டில் கீறுமோபணி யீரருள்
முஞ்சியிடைச் சங்கமார்க்குஞ் சீர்முது குன்றரே.

[புட்டில்=கூடு. முஞ்சி=ஒருவகைப்புல்.]

2. ஏரிக்கனகக் கமல மலரன்ன சேவடி
ஊரித்தனையுந் திரிந்தக் காலவை நோங்கொலோ
வாரிக்கட்சென்று வளைக்கப்பட்டுவ ருந்திப்போய்
மூரிக்களிறு முழக்கருமுது குன்றரே.

3. தொண்டர்கள் பாடவிண் ணோர்களேத் தவுழிதர்வீர்
பண்டகந்தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே
கண்டகர்வாளிகள் வில்லிகள்புறங் காக்குஞ்சீர்
மொண்டகை வேள்வி முழக்கருமுது குன்றரே.

[உழிதர்வீர்=திரிவீர்.]

4. இளைப்பறி யீரிம்மை யேத்துவார்க்கம்மைசெய்வதென்
விளைப்பறி யாதவெங் காலனையுயிர் வீட்டினீர்
அளைப்பிரி யாவர வல்குலாளொடு கங்கைசேர்
முளைப்பிறைச் சென்னிச் சடைமுடிமுது குன்றரே.

[அளை=புற்று.]

VRIDDACHALAM—SUNDARAMURTI.

HYMN NO. 10.

O, Lord of Vriddachalam where the sacred conch is blown from amid the *munchi* grass, what shall they do, who weltering in this world of poison say to themselves, they shall seek Thee another day and forget that if they die they can do nothing. The arrow does not cleave cotton.

2. O, Lord of Vriddachalam, where in ponds lusty full-grown elephants caught and held by crocodiles keep roaring, do not Thy feet soft as a lotus-flower, golden in the lake, suffer by this wandering all the world over ?

3. O, Lord of Vriddachalam, where the sacrificial fires are guarded by fierce sharp-shooting hunters, why dost Thou beg for food from door to door ? Lord whom devotees propitiate in song and celestials praise !

4. O, Lord of Vriddachalam having by Thy side the snake of the nest, the lovely maid, the river Ganges, the crescent on Thy head, knowest Thou no weariness Lord who savest devotees and even killest Death the unsuspecting :

5. ஆடியசைந்தடி யாருநீரு மகந்தொறும்
பாடிப் படைத்த பொருளெலாமுமை யாளுக்கோ
மாட மதிலணி கோபுரமணி மண்டபம்
மூடி முகிறவழ் சோலைசூழ்முது குன்றரே.

6. இழைவளர் நுண்ணிடை மங்கையொடிடு காட்டிடைக்
குழைவளர் காதுகள் மோதநின் றுகு னிப்பதோ
மழைவள ரும்நெடுங் கோட்டிடைமத யானைகள்
முழைவள ராளிமுழக்கஞ்முது குன்றரே.

7. சென்றி லிடைச்செடி நாய்குரைக்கச் செடிச்சிகள்
மென்றிலிடைப்பலி தேரப்போவது வாழ்க்கையே
குன்றி லிடைக்களி றுளிகொள்ளக் குறத்திகள்
முன்றி லிடைப்பிடி கன்றிடும்முது குன்றரே.

[பிடி = பெண்யானை. கன்றி = வருந்தும்]

8. அந்தி திரிந்தபடி யாருநீரு மகந்தொறும்
சந்திகடோறும் பலிக்குச் செல்வது தக்கதே
மந்தி கடுவனுக் குண்பழநாடி மலைப்புறம்
முந்தி யடிதொழ நின்றசீர்முது குன்றரே.

9. செட்டிநின் காதலி யூர்கடோறு மறஞ்செய
அட்டுமின் சில்பலிக் கென்றகங்கடை நிற்பதே
பட்டிவெள் ளேறுகந்தேறு வீர்பரிசென்கொலோ
முட்டியடிதொழ நின்ற சீர்முது குன்றரே.

5. O, Lord of Vriddachalam where clouds rest on and roll over groves, where temple tower, palace and fort abound, for whom dost Thou beg from door to door with Thy devotees, is it not for Thy maid Uma ?

6. Why dost thou dance on the crematorium with the maiden slender-waisted as a thread, dance so that both Thy ear ornaments strike against each other, O, Lord of Vriddachalam, where when rain falls the long-tusked rogue elephants and the cave dwelling lions roar back.

7. What a life is Thine going among furious dogs to beg for alms, from low women, O, Lord of Vriddachalam, where the male elephant having been killed by the lion, the female one comes before the hunter-women showing them its distress !

8. Well it is for Thee till the fall of day to go from house to house begging for food, O, Lord of Vriddachalam where the male monkey seeking fruit for his wife ranges over the mountains !

9. Thy wife dispenses charity everywhere, O, Lord, but thou guest seeking alms, O, Lord riding on a white bull of the yard O, Lord of Vriddachalam propitiated by Vishnu.

10. எத்திசை யுந்திரிந் தேற்றக்காற்பிற ரென்சொலார்
பத்தியினுலிடு வாரிடைப்பலி கொள்மினே
எத்திசையுந் திரையேறமோதிக் கரைகண்மேல்
முத்திமுத்தாறு வலஞ்செயுமுது குன்றமே.

11. முத்திமுத்தாறு வலஞ்செயும் முது குன்றரைப்
பித்தனைப் பானடித்தொண்டனூரன் பிதற்றிவை
தத்துவஞானிக ளாயினர்தடு மாற்றிலார்
எத்தவத்தோர்களு மேத்துவார்க்கிட ரில்லையே.

10. If thou seekest alms every-where what shall not men say ? Why dost Thou not beg only of devotees, O, Lord oi Vriddachalam where waves from every side splash upon the shore pearls from Manimuthar, that flows towards the right.

11. These babblements of the devotee of the Lord unsound, who abides in Vriddachalam washed on the right side by the Mani-muthar, will be clear to the wise, and whoever sings these songs shall be free from harm.

திருமுதுகுன்றம்—விருத்தாசலம் XI.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. மெய்யைமுற்றப் பொடிப்பூசியோர்நம்பி வேதநான்கும்
விரித்தோதி யோர்நம்பி
கையிலோர் வெண்மழு வேந்தியோர்நம்பி கண்ணு
மூன்றுமுடையா யொருநம்பி
செய்யநம்பி சிறுசெஞ்சடை நம்பிதிரிபுரந்
தீயெழச்செற்றதோர் வில்லால்
எய்தநம்பி யென்னையாளுடைநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

2. திங்கள்நம்பி முடிமேலடியார்பாற் சிறந்தநம்பி
பிறந்தவுயிர்க் கெல்லாம்
அங்கணநம்பி யருண்மால் விசும்பாளும் அமரர்
நம்பி குமரன்முதற்றேவர்
தங்கள்நம்பி தவத்துக்கொருநம்பி தாதையென்றன்
சரண்பணிந்தேத்தும்
எங்கள்நம்பி யென்னையாளுடைநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

[அங்கண் = அருள்நோக்கம்.]

3. வருந்த அன்று மதயானையுரித்த வழக்குநம்பி
முழக்குங்கடல் நஞ்சம்
அருந்துநம்பி யமரர்க்கமுதீந்த யருளெனம்பி
பொருளால் வருநட்டம்

VRIDDACHALAM—SUNDARAMURTI.

HYMN No. 11

1. Lord whose body is all ash-covered; Lord, expounder of the four Vedas; Lord who bears on the hand white-hot iron, triple eyed Lord, lovely bearer of red locks, destroyer of three cities with the arrow of anger, Lord protector, Thou art my Lord even through seven births.

2. Lord, wearer of the crescent, gracious towards devotees, full of grace to all creation, Lord of the heavens and the celestials, Lord of Kumara and other Gods, the God of all penance, our refuge, my Lord thou art my Lord even through seven births.

3. Lord who stripped the rogue elephant of its skin, Lord who ate poison churned from the sounding ocean, Lord that gave nectar to the celestials, Lord that keeps up the dance that maintains the world in

புரிந்த நம்பி புரிநூலுடைநம்பி பொழுதும் விண்ணும்
முழுதும் பலவாகி
இருந்தநம்பி யென்னையாளுடைநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

4. ஊறுநம்பியமுதா வுயிர்க்கெல்லா முரியநம்பி
தெரியம்மறையங்கம்
கூறுநம்பி முனிவர்க்கருங்கூற்றைக் குமைத்தநம்பி
குமையாய்ப் புலனைந்துஞ்
சீறுநம்பி திருவெள்ளடைநம்பி செங்கண்வெள்ளைச்
செழுங்கோட் டெருதென்றும்
ஏறுநம்பி யென்னையாளுடைநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

[குமைத்த=கொன்ற.]

5. குற்றநம்பி குறுகா ரெயின்மூன்றைக் குலைத்தநம்பி
சிலையாவரை கையில்
பற்றுநம்பி பரமானந்த வெள்ளம் பணிக்குநம்பி
யெனப் பாடுதலல்லால்
மற்றுநம்பி யுனக்கென்செயவல்லேன் மதியிலேன்
படுவெந்துயரெல்லாம்
எற்றுநம்பி யென்னையாளுடை நம்பியெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

[குறுகார்=பகைவர். எற்று=ஒழிக்கும்.]

6. அரித்தநம்பி யடிகைதொழுவார் நோயாண்டநம்பி
முன்னையீண்டுலகங்கள்
தெரித்தநம்பி யொருசேவுடைநம்பி சில்பலிக்கென்ற
கந்தோறுமெய்வேடந்

harmony, wearer of the sacred thread, Lord that is Time and Space all in one, my Lord and Lord through seven of my births!

4. Fountain celestial, nectar unto all creation, expounder of the Vedas, slayer of Death, controller of the senses, wearer of the skull, rider on the large lovely —eyed white well-fed bull, my Lord even through seven births!

5. Destroyer of three inimical cities that put their trust in sin, Lord who bent the mountain as a bow, giver of bliss, what else shall I say of Thee? Thou destroyest all my sins, Thou art my Lord even through seven births!

6. O, noble Lord, destroyer of ill and protector of all devotees, creator of the world, rider on a bull, begging for alms, Lord of all faiths, Thou didst destroy

தரித்தநம்பி சமயங்களினம்பி தக்கன்றன்வேள்வி
புக்கன்றிமையோரை
இரித்தநம்பி யென்னையாளுடைநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

7. பின்னைநம்பும் புயத்தானெடுமாலும் பிரமனுமென்றிவர்
நாடியுங்காணு
உன்னைநம்பி யொருவர்க்கெய்தலாமே யுலகுநம்பியுரை
செய்யுமதல்லால்
முன்னைநம்பி பின்னும்வார் சடைநம்பி முழுதிவை
யித்தனையுந்
தொகுத்தாண்ட
தென்னைநம்பி யெம்பிரானாயநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

8. சொல்லைநம்பி பொருளாய் நின்றநம்பி தோற்றமீறு
முதலாகியநம்பி
வல்லைநம்பி யடியார்க்கருள்செய்ய வருந்திநம்பி
யுனக்காட் செயகில்லார்
அல்லனம்பி படுகின்றதென் னாடியணங் கொருபாகம்
வைத்தெண் கணம்போற்ற
இல்லநம்பி யிடுபிச்சை கொள்நம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே

Thakka's sacrifice, by driving out the crowd of spectator-Gods, my Lord, mine even through seven births !

7. O, Lord whom Brahma and Vishnu sought in vain, but whom any devotee seeks and finds easily, wearer of the locks, my protector, my Lord even through seven births !

8. Word and the content thereof, substance above all appearance, Lord gracious unto devotees, Lord having the maid by Thy side, beggar for alms, my Lord even so through seven births !

9. காண்டுநம்பி கழற்சேவடியென் றுங் கலந்துணைக்
காதலித்தாட் செய்கிற்பாரை
ஆண்டுநம்பி யவர்முன்கதிசேர யருளுநம்பி குருமாய்
பிறைபாம்பைத்
தீண்டுநம்பி சென்னியிற்கன்னி தங்கத்திருத்துநம்பி
பொய்ச்சமண் பொருளாகி
ஈண்டுநம்பி யிமையோர் தொழுநம்பி யெழுபிறப்பு
மெங்கள்நம்பி கண்டாயே.

10. கரக்குநம்பி கசியாதவர் தம்மைக் கசிந்தவர்கிம்மை
யோடம்மையிலின்பம்
பெருக்குநம்பி பெருகக்கருத்தா

9. Lord apparent, Lord protector of those that worship Thy sacred feet, Lord of salvation, wearer of the snake, wearer of the Ganges, transcending the Jains of false doctrines, Lord of the celestials, my Lord even so through seven births !

10. O, Lord hidden unto the unmelting, but bestowing happiness herein and hereafter on those that melt in love for Thee Lord of Prosperity, Lord noble-minded !

XI. திருத்தூங்கானைமாடம் என்ற பெண்ணாகடம் 1.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

பண்—பழந்தக்கராகம்.

1. ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீரெல்லா
மடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங்
கெழுமனைக டோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந்தொழு மின்களே.

2. பிணிநீர சாதல் பிறத்தலிவை
பிரியப் பிரியாத பேரின்பத்தோடு
அணிநீர மேலுலக மெய்தலுறி
லறிமின் குறைவில்லை யானேறுடை
மணிநீல கண்ட முடையபிரான்
மலைமகளுந் தானு மகிழ்ந்துவாழும்
துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந்தொழுமின்களே.

3. சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமாறறியா தலமந்துநீ
ரயர்ந்துங் குறைவில்லை யானேறுடைப்

பூமாணலங்க விலங்கு கொன்றை
புனல்பொதிந்த புன்சடையி னானுறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந்தொழுமின்களே.

4. ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லா
மனந்திரிந்து மண்ணின் மயங்காது நீர்
மூன்று மதிலெய்த மூவாச்சிலை
முதல்வர்க் கிடம்போலு முகிறோய் கொடி
தோன்றுங் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

5. மயறீர்மை யில்லாத தோற்றம் மிவை
மரணத்தொ டொத்தழியு மாறுதலால்
வியறீர மேலுக மெய்தலுறின்
மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர வோங்கிய நாமங்களா
லோவாது நாளுமடி பரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந்தொழு மின்களே.

6. பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படர்நோக் கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரை தோலொடு
நரை தோன்றுங் காலநமக் காதன்முன்

பொன்னீர்மை துன்றப் புறந்தோன் றுநற்
புனல்பொதிந்தபுன் சடையினு னுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

7. இறையூண் டுகளோ டிடுக்க ணெய்தி
யிழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
நிறையூ ணெறி கருதிநின் றீரெல்லா
நீள்கழலே நாளுநினைமின் சென்னிப்
பிறைசூ ழலங்கை விலங்கு கொன்றை
பிணையும் பெருமான் பிரியாத நீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

8. பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில் வாடிப்
பழிப்பாய வாழ்க்கை யொழியத் தவம்
இல்சூ ழிடங்கருதி நின்றீ ரெல்லா
மிறையே பிரியா தெழுந்துபோதும்
கல்சூ ழரக்கன் கதறச் செய்தான்
காதலியுந் தானுங் கருதி வாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங் கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே.

9. நோயும் பிணியு மருந் துயரமு
நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்
வாயு மனங்கருதி நின்றீ ரெல்லா
மலர்மிசைய நான்முகனு மண்ணும் விண்ணும்

தாயவடி யளந்தான் காண மாட்டாத்
தலைவர்க் கிடம்போலுந் தண்சோலை விண்
தோயுங் கடந்தைத் தடங் கோயில்சேர்
தூங்கானை மாடந்தொழு மின்களே.

10. பகடூர் பசிநலிய நோய் வருதலாற்
பழிப்பாய வாழ்க்கை யொழியத் தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கை யாரு
மூடுதுவ ராடையரு நாடிச் சொன்ன
திகடூர்ந்த பொய்ம் மொழிகேட்ட வேண்டா
திருந்திழையுந் தானும் பொருந்தி வாழும்
துகடீர் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந்தொழு மின்களே.

11. மண்ணார் முழவதிரு மாட வீதி
வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில் சேர்
பிறை யுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல் பத்துங்
கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும் போய்
விண்ணோ ருலகத்து மேவி வாழும்
விதியது வேயாகும் வினைமாயுமே.

XI. திருத்தூங்கானைமாடம் 2.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் திருவிருத்தம்.

1. பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றிச் செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலை சூலமென் மேற்பொறி
மேவு கொண்டல்
தென்னார் கடந்தையுட் டூங்கானை மாடச்
சுடர் கொழுந்தே.

2—3—4. … … … …

5. ஆவா சிறுத்தொண்ட னென்னினைந்
தானென் றரும் பிணி நோய்
காவலொழியிற் கலக்குமுன் மேற்பழி
காதல் செய்வார்
தேவா திருவடி நீறென்னைப்
பூசு செந்தாமரையின்
பூவார் கடந்தையுட் டூங்கானை
மாடத்தெம் புண்ணியனே.

6—7—8—9. … … … …

10. கடவுந் திகிரி கடவா தொழியக்
கயிலை யுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத்தாய்
பனிமால் வரைபோல்
இடபம் பொறித்தென்னை யேன்று கொள்ளாய்
இருஞ்சோலை திங்கள்
தடவுங் கடந்தையுட் டூங்கானை
மாடத்தெந் தத்துவனே.

XII. திருநெல்வாயி லரத்துறை 1.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. எந்தை யீசனெம் பெருமா னேறமர்
கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக்
கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி
லரத்துறை யடிகடம் மருளே.

2. ஈர வார்சடை தன்மே
லிளம்பிறை யணிந்தவெம் பெருமான்
சீருஞ் செல்வமு மேத்தாச்
சிதடர்க டொழச்செல்வ தன்றால்
வாரி மாமல ருந்தி
வருபுன னிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலை நெல்வாயி
லரத்துறை யடிகடம் மருளே.

(† பாடம் : சித்தர்கள்)

3. பிணி கலந்தபுன் சடைமேற்
பிறையணி சிவனெனப் பேணிப்
பணி கலந்துசெய் யாத
பாவிக டொழச்செல்வ தன்றால்

மணி கலந்துபொன் னுந்தி
        வருபுன னிவாமல்கு கரைமேல்
அணி கலந்தநெல் வாயி
        லரத்துறை யடிகடம் மருளே.

4. துன்ன வாடையொன் றுடுத்துத்
        தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லா
        லொன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணி யுந்திப்
        பொருபுன னிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயி
        லரத்துறை யடிகடம் மருளே.

5. வெரு குரிஞ்சுவெங் காட்டி லாடிய
        விமலனென் றுள்கி
உருகி நைபவர்க் கல்லா
        லொன்றுங்கை கூடுவ தன்றால்
முரு குரிஞ்சுபூஞ் சோலை
        மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தரு குரிஞ்சுநெல் வாயிலரத்
        துறை யடிகடம் மருளே.

6. உரவு நீர்ச்சடைக் கரந்தவொருவனென்
        றுள்குளிர்ந் தேத்திப்
பரவி நைபவர்க் கல்லாற்
        பரிந்துகை கூடுவ தன்றால்

குரவ நீடுயர் சோலைக்
குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அரவ மாரு நெல்வாயி
லரத்துறை யடிகடம் மருளே.

7. நீலமாமணி மிடற்று நீறணி சிவனைப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம்
மருளே.

8. செழுந்தண் மால்வரை யெடுத்த
செருவலி யிராவண னலற
அழுந்த வூன்றிய விரலான்
போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங்க னிசுமந் துந்திக்
குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயி
லரத்துறை யடிகடம் மருளே.

9. நுணங்கு நூலயன் மாலு மிருவரு
நோக்கரி யானை
வணங்கி நைபவர்க் கல்லால்
வந்துகை கூடுவ தன்றால்
மணங்க மழ்ந்து பொன்னுந்தி
வருபுன னிவாமல்கு கரைமேல்
அணங்குஞ் சோலை நெல்வாயி
லரத்துறை யடிகடம் மருளே.

10. சாக்கி யப்படு வாருஞ்
சமண்படு வார்களு மற்றும்
பாக்கி யப்பட கில்லாப்
பாவிக டொழச்செல்வ தன்றால்
பூக்க மழ்ந்து பொன்னுந்திப்
பொருபுன னிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலை நெல்வாயி
லரத்துறை யடிகடம் மருளே.

11. கறையி னார்பொழில் சூழ்ந்த
காழியுண் ஞானசம் பந்தன்
அறையும பூம்புனல் பரந்த
வரத்துறை யடிகடம் மருளை
முறைமை யாற்சொன்ன பாடன்
மொழியு மாந்தர்தம் வினைபோய்ப்
பறையு மையுற வில்லைப்
பாட்டிவை பத்தும்வல் லார்க்கே.

XII. திருநெல்வாயி லரத்துறை 2.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

திருக்குறுந்தொகை.

1. கடவுளைக் கட லுள்ளெழு நஞ்சுண்ட
உடலு ளானையொப் பாரிய லாதவெம்
அடலு ளானை யரத்துறை மேவிய
சுடரு ளானைக்கண் டீர்நாந் தொழுவதே.

2. கரும்பொப் பானைக் கரும்பினிற் கட்டியை
விரும்பொப் பானைவிண் ணோரு மறிகிலா
அரும்பொப் பானை யரத்துறை மேவிய
சுரும்பொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே.

[சுரும்பு = வண்டு]

3. ஏறொப் பானையெல் லாவுயிர்க் கும்மிறை
வேறொப் பானை விண்ணோரு மறிகிலா
ஆறொப் பானை யரத்துறை மேவிய
ஊறொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே.

[ஊறு = ஊற்று]

4. பரப்பொப் பானைப் பகலிருள் நன்னிலா
இரப்பொப் பானை யிளமதி சூடிய
அரப் பொப்பானை யரத்துறை மேவிய
சுரப்பொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே.

[அரப்பு = அரைப்பு. (சந்தனம்)]

5. நெய்யொப் பானைநெய் யிற்சுடர் போல்வதோர்
மெய்யொப் பானைவிண் ணோரு மறிகிலார்
ஐயொப் பானை யரத்துறை மேவிய
கையொப் பானைக்கண் டேர்நாந் தொழுவதே.

[ஐ=அழகு]

6. நிதியொப் பானை நிதியிற் கிழவனை
விதியொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அதியொப் பானை யரத்துறை மேவிய
கதியொப் பானைக்கண் டேர்நாந் தொழுவதே.

7. புனலொப் பானைப் பொருந்தலர் தம்மையே
மினலொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அனலொப் பானை யரத்துறை மேவிய
கனலொப் பானைக்கண் டேர்நாந் தொழுவதே.

8. பொன்னொப்பானைப் பொன்னிற் சுடர் போல்வதோர்
மின்னொப் பானை விண்ணோரு மறிகிலார்
அன்னொப் பானை யரத்துறை மேவிய
தன்னொப் பானைக் கண்டேர்நாந் தொழுவதே.

9. காழி யானைக் கனவிடை யூருமெய்
வாழியானை வல்லோரு மென் றின்னவர்
ஆழியான் பிரமற்கு மரத் துறை
ஊழியானைக் கண்டேர் நாந் தொழுவதே.

[காழி=சீர்காழி.]

10. கலையொப் பானைக்கற் றார்க்கோ ரமுதினை
மலையொப் பானை மணிமுடி யூன்றிய
அலையொப் பானை யரத்துறை மேவிய
நிலையொப் பானைக் கண்டேர்நாந் தொழுவதே.

XII. திருநெல்வாயி லரத்துறை 3.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. கல்வாய கிலுங் கதிர்மா மணியுங்
கலந்துந் திவருந் நிவவின் கரைமேல்
நெல்வாயிலரத் துறைநீ டுறையுந்
நிலவெண்மதிசூ டியநின் மலனே
நல்வாயில் செய்தார் நடந்தா ருடுத்தார்
நரைத்தா ரிறந்தா ரென்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின் றதறிந் தடியேன்
றொடர்ந்தே னுய்யப்போவதொர் சூழல்
சொல்லே.

2. கறிமா மிளகும் மிகுவன் மரமும்
மிகவுந் திவருந் நிவவின் கரைமேல்
நெறிவார் குழலா ரவர்காண நடஞ்செய்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
வறிதே நிலையா தவிம்மண் ணுலகின்
னரகை வகுத்தனை நானிலையேன்
பொறிவாயி லிவ்வைந் தினையு மவியப்
பொருதுன்னடியே புகுஞ்சூழல் சொல்லே.

3. புற்றுடரவம் மரையார்த் துகந்தாய்
புனிதா பொருவெள் விடையூர் தியினாய்
எற்றே யொருகண் ணிலனின்னை யல்லா
னெல்வாயி லரத்துறை நின்மலனே

மற்றே லொருபற் றிலனெம் பெருமான்
வண்டார் குழலாண் மங்கைபங் கினனே
அற்றார் பிறவிக் கடனீந்தி யேறி
யடியே னுய்யப்போ வதொர்சூழல் சொல்லே.

4. கோடுயர்கோங் கலர் வேங்கையலர்
மிகவுந்திவருந் நிவவின் கரைமேல்
நீடுயர்சோலை நெல்வா யிலரத்
துறை நின்மலனே நினைவார் மனத்தாய்
ஓடு புனற்கரை யாமிளமை யுறங்
கிவிழித்தா லொக்கு மிப்பிறவி
வாடியிருந்து வருந்தல் செய்யா
தடியே னுய்யப்போ வதொர்சூழல் சொல்லே.

5. உலவும் முகிலிற் றலைகற் பொழிய
வுயர்வே லொடிழியு நிவவின் கரைமேல்
நிலவும் மயிலா ரவர்தாம் பயிலு
நெல்வாயிலரத் துறைநின் மலனே
புலனைந்து மயங்கி யகங்குழையப்
பொருவே லொர்நமன் றமர்தா நலிய
அலமந்துமயங் கியயர்வ தன்முன்
னடியே னுய்யப்போ வதொர்சூழல் சொல்லே.

6. ஏலம் மிலவங் கமெழிற் கனகம்
மிகவுந்திவருந் நிவவின் கரைமேல்
நீலம் மலர்ப்பொய் கையிலன்னமலி
நெல்வாயிலரத் துறையா யொருநெல்

வாலூன் றவருந் துமுடம் பிதனை
மகிழாதழகா வலந்தே னினியான்
ஆலந் நிழலி லமர்ந்தா யமரா
வடியே னுய்யப்போ வதொர் சூழல்சொல்லே.

7. சிகரம் முகத்திற் றிரளா ரகிலும்
மிகவுந் திவருந் நிவவின் கரைமேல்
நிகரின் மயிலா ரவர்தாம் பயிலுந்
நெல்வாயிலரத் துறைநின் மலனே
மகரக் குழையாய் மணக் கோலமதே
பிணக்கோல மதாம் பிறவியிது தான்
அகரம்முதலி னெழுத்தாகி நின்று
யடியேனுய்யப் போவதொர் சூழல்சொல்லே.

8. திண்டேர் நெடுவீ தியிலங் கையர்கோன்
றிரடோ ளிருபஃது நெரித்தருளி
ஞெண்டாடுநெடு வயல்சூழ் புறவின்
னெல்வாயிலரத் துறைநின் மலனே
பண்டேமிகநான் செய்த பாக்கியத்தாற்
பரஞ்சோதி நின்னா மம்பயிலப் பெற்றேன்
அண்டாவமரர்க் கமரர் பெருமா
னடியே னுய்யப்போ வதொர்சூழல் சொல்லே.

9. மாணாவுருவா கியொர் மண்ணளந்தான்
மலர் மேலவனே டியுங்காண் பரியாய்
நீணீண் முடிவா னவர்வந் திறைஞ்சுந்
நெல்வாயிலரத் துறைநின் மலனே

வாணுர் நுதலார் வலைப்பட் டடியேன்
பலவின் கனியீந் ததுபோல் வதன்முன்
ஆணோடு பெண்ணு முருவாகி நின்று
யடியேனுய்யப்போ வதொர்சூழல் சொல்லே.

10. நீரூருநெடு வயல்சூழ் புறவின்
னெல்வாயிலரத் துறைநின் மலனைத்
தேரூர்நெடுவீ திநன் மாடமலி
தென்னு வலர்கோ னடித்தொண் டனணி
ஆரூரனுரைத் தன நற்றமிழின்
மிகுமாலை யொர்பத் திவை கற்றுவல்லார்
காரூர்களிவண் டறையானை மன்ன
ரவராகி யொர்விண் முழுதாள் பவரே.

AT TIRU-NEL-VAYIL-ARATHORAI.

Behold, the Neva flowing clear !
A Sign, how pure and rare and dear
This holy spot, where all things change
Into something rich and strange !
Dreams of Beauty in sculptured stone
And gifts of pearl, to the Lord's own
Favourite singer :—Palanquin
Of pearl to ride on, flashing seen
On Neva's banks : Umbrella too
And Fan likewise, to one most true !
I am blest indeed to worship here,
For at this spot, the Lord's most near.

XIII. திருவெருக்கத்தம்புலியூர்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
உடையா னுமையோடு முடனா யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தருகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே.

2. இலையார் தருசூலப் படையெம் பெருமானாய்
நிலையார் மதின்மூன்று நீறாய் விழவெய்த
சிலையா னெருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையா னடியேத்தக் கருதா வினைதானே.

3. விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தி
பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடி
எண்ணா ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணா வெனவல்லார்க் கடையா வினைதானே.

4. அரையார் தருநாக வணிவா னலர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி
வரையா னெருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே.

5. வீறார் முலையாளைப் பாக மிகவைத்துச்
சீறா வருகாலன் சினத்தை யழிவித்தான்
ஏறா னெருக்கத்தம் புலியூ ரிறையானை
வேறா நினைவாரை விரும்பா வினைதானே.

ERU-KATHAM-PULIYUR—TIRU-GNANA-SAMBANDAR.

1. Evil does not afflict him who worships at the lovely temple of Eru katham-puliyur, the Lord surrounded by the hosts of Elements, wearer of the stipped skin of the Elephant, having the maid Uma by His side, and the Ganges on His locks and riding on a bull!

2. Evil does not afflict him who worships at lovely Eru-katham-puliyur, the Lord whose spear—point resembles a leaf; who with His bow shot and reduced to ashes the three floating cities, Lord wearer of the crescent!

3. Evil does not afflict him who is able to call upon the Lord of lovely Eru-katham-puliyur, O Lord of the elestials, O Lovely one, rider on a bull, Man and Woman in one, unsound of mind, wearer of the crescent!

4. Fortune favours him who worships at Eru-katham-puliyur, the Lord who rejoices to bear on His locks the tossing waves of the Ganges, and wear round His loins the serpent, rider on a bull, Lord adorned with garlands of fully opened and fragrant blossoms of the *Konrai*.

5. Evil does not afflict him who steadily meditates on the Lord of Eru-katham-puliyur, who has the maid of the bowed breasts by His side, who destroyed the wrath of the wrathful destroyer Death, Lord rider on a Bull!

6-7. நகுவெண் டலையேந்தி நானாவிதம் பாடிப்
புகுவா னயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவா னெருக்கத்தம் புலியூர்த் தகைந்தங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே.

8. ஆவா வெனவரக்க னலற வடர்த்திட்டுத்
தேவா வெனவருளார் செல்வங் கொடுத்திட்ட
கோவே யெருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே யெனவல்லல் தீர்தல் திடமாமே.

9. மறையா னெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத் தின்றொத்தே
இறையா னெருக்கத்தம் புலியூ ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும்வினையே.

10. புத்த ரருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையுஞ் சோதி யுமையோடும்
நித்த னெருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்த னறவன்றன் னடியே யடைவோமே.

11. ஏரா ரெருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலை யிவைவல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறைவாரே.

6-7. Evil does not afflict him who praises the feet of the Lord who abides at Eru-kathamu-puliyur, the Lord bearer of the grinning skull, wearing the tiger-skin round His loins, Lord who begs for food singing diversely !

8. Most surely are men rid of sins who call upon the Lord of Eru-katham-puliyur, the Lord who crushed with His feet and caused Ravana to howl but when he chanted His praise, gave him all good fortune !

9. Invisible unto Brahma and Vishnu, Lord bearer of the flaming fire, wearer of the crescent, radiant as groups of strung pearl, having the black poison on His throat ! whoever thinks of Him shall be free from sins !

10. Let us give up the false doctrines of the Jains and the Buddhists and seek the feet of Him, the radiant clear flame, ever lasting with the maid Uma, abiding at Eru-katham-puliyur.

11. Whoever praises the gracious Lord of Eru-katham-puliyur in the choice tamil of Tiru-gnana-sambandar of Shiyali, will abide for ever in regions celestial.

XIV. திருஅறையணிநல்லூர்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

பண்.—காந்தாரம்

1. பீடினாற் பெரியோர்களும் பேதைமை கெடத்தீதிலா
வீடினா ருயர்ந்தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலை நீறணிந்தாரழல்
ஆடினாரறை யணிநல்லூ ரங்கையாற் றொழுவார்களே.

2. இலையினார்சூல மேறுகந் தேறியே யிமையோர்தொழ
நிலையினாலொரு காலுறச் சிலையினான் மதிலெய்தவன்
அலையினார் புனல் சூடியவண்ணலா ரறையணிநல்லூர்
தலையினாற் றொழுதோங்குவார் நீங்குவார் தடுமாற்றமே.

3. என்பினார் கனல்சூலத்தா ரிலங்குமாமதி யுச்சியான்
பின்பினாற் பிறங்குஞ்சடைப் பிஞ்ஞகன் பிறப்பிலி
யென்று
முன்பினார் மூவர்தாந் தொழுமுக்கண் மூர்த்திதன்
றாள்களுக்
கன்பினா ரறையணிநல்லூ ரங்கையாற் றொழுவார்களே.

4. விரவு நீறுபொன் மார்பினில் விளங்கப்பூசிய வேதியன்
உரவு நஞ்சமுதாக வுண்டுறுதி பேணுவதன்றியும்
அரவு நீள்சடைக்கண்ணியா ரண்ணலா ரறையணி
நல்லூர்
பரவு வார்பழி நீங்கிடப்பறையுந்தாஞ் செய்தபாவமே.

TIRU-GNANA-SAMBANDAR—ARAI-ANI-NALLUR.

1. Even those distinguished by fame and those proud of unblemished ancestry, to be rid of folly, worship with folded hands the houseless wearer of the white crescent, author of the Vedas, wearer of the sacred ashes, the Lord of Araianinallur who dances on fire.

2. They shall be rid of delusion, who lifting their hands above their head, worship at Araianinallur, the Lord whose spear is as a leaf, who rides rejoicingly on the bull, who is worshipped by the celestials, who struck down the floating cities with His arrow, shot from the bow when He took His stand, one foot before another firmly planted (in attitude to shoot), wearer of the wave—tossed water of the Ganges.

3. The devotees of the feet of the triple-eyed Lord worship Him at Araianinallur, the Lord who wears as ornaments a skull, fire and a spear. His chest bears the crescent, behind the flowing locks glow on His head, the unborn existing before and after the Trinity!

4. Those that worship at Araianinallur shall be rid alike of censure and of sins, by reason of their devotion to the Lord, the Lord of the Vedas who wears on His golden chest the scented ashes, who swallowed poison as if it were nectar, and so preserved the integrity of the world and wears as an ornament the serpent on His long flowing locks!

5. தீயினார் திகழ்மேனியாய் தேவர்தாந் தொழுதேவனீ
ஆயினாய் கொன்றையாயன லங்கையா யறையணி
நல்லூர்
மேயினார் தமதொல்வினை வீட்டினாய் வெய்யகாலனைப்
பாயினாய திர்கழலினாய் பரமனேயடி பணிவனே.

6. விரையினார் கொன்றைசூடியும் வேகநாகமும் வீக்கிய
அரையினா ரறையணிநல்லூ ரண்ணலா ரழகாயதோர்
நரையினார் விடையூர்தியார் நக்கனார் நறும்போதுசேர்
உரையினா லுயர்ந்தார்களு முரையினா லுயர்ந்
தார்களே.

7. வீரமாகிய வேதியர் வேகமாகளி யானையின்
ஈரமாகிய வுரிவைபோர்த்தரிவை மேற்சென்ற
வெம்மிறை
ஆரமாகிய பாம்பினா ரண்ணலா ரறையணிநல்லூர்
வாரமாய் நினைப்பார் கடம்வல்வினை யவைமாயுமே.

8. தக்கனார் பெருவேள்வியை தகர்த்துகந்த வன்றாழ்
சடை
முக்கணான் மறைபாடிய முறைமையான் முனிவர்
தொழ
அக்கினோ டெழிலாமை பூணண்ணலா ரறையணி
நல்லூர்
நக்கனாரவர் சார்வலா னல்குசார்விலோ நாங்களே.

5. O Lord supreme! I bow before Thy sounding feet, Thy body glows with the radiance of fire, Thou art the Lord of Lords worshipped by the celestials, Thou wearest cassia *(laburnum)* bearest the fire upon Thy hand, grim Death Thou didst destroy, destroyed too the age-long sins of those that sought Thee at Araianinallur.

6. Even the masters of language, when they sing the praise of the Lord wearing scented cassia, the venomous snake, riding on the radiant white bull, Lord who in His langhter destroyed the three floating cities, the Lord that abides at Araianinallur, shall be rendered immortal.

7. The Lord heroic of the Vedas who declared His prowess to Uma by stripping a fierce elephant of its skin, and wearing it still wet with blood, wearer of the snake whose abode is at Araianinallur, whoever thinks of Him shall be rid even of the worst sins.

8. Refuge have we none save Him, who rejoiced to break up the sacrifice of Thakka, wearer of the long locks, the triple-eyed Lord who gave the gift of the four Vedas, whom sages worship, who wears Skulls and tortoise shell as ornaments and abides at Araianinallur.

9. வெய்யநோயிலர் தீதிலர் வெறியராய்ப் பிறர்பின் செலார்
செய்வதே யலங்கார மாமிவையிவை தேறியின்புறில்
ஐயமேற்றுணுந் தொழிலரா மண்ணலா ரறையணி நல்லூர்ச்
சைவனாரவர் சார்வலால் யாதுஞ்சார்விலோ நாங்களே.

10. வாக்யஞ் சொல்லியாரொடும் வகையலாவகை செய்யன்மின்
சாக்கியஞ் சமணென்றிவை சாரேலும் மரணம்பொடி
ஆக்கியம் மழுவாட்படை யண்ணலா ரறையணி நல்லூர்ப்
பாக்கியங் குறையுடையீரேற் பறையுமாஞ் செய்த பாவமே.

11. கழியுலாங் கடற்கானல் சூழ்கழுமலமமர் தொல்பதிப்
பழியிலா மறைஞானசம்பந்த னல்லதோர் பண்பினார்
மொழியினா லறையணிநல்லூர் முக்கண்மூர்த்தி தன்றாடொழக்
கெழுவினாரவர் தம்மொடுங்கேடில் வாழ்பதி பெறுவரே.

9. No other refuge have we save Him the Lord Siva the Lord without birth or death, immaculate, uninfatuated and unfollowing, all His deeds are beautiful! Whose would appreciate them should seek the alms-taker the Lord at Araianinallur.

10. Indulge not in unprofitable talk with all and sundry; follow not the faith of the Jains or the Buddhists! The Lord at Araianinallur, bearer of the fire, and sword, He with His grace will make your sins melt into nothing.

11. Whoso utters these verses in which in lovely words the triple-eyed Lord of Araianinallur has been praised by Thiru-gnana-sambhanda the faultless, hailing from the ancient town of Kazhumalam, Shiyali, where the groves are washed by the lagoons of the sea, will with their kindred attain to salvation.

XV. திருக்கோவலூர் வீரட்டம் 1.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

1. படைகொள்கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடைய தேறுங் கொடியினன் வீரட்டானஞ் சேர்துமே.

[பாடம் கொடை கொள் வேந்தன்.]

2. கரவலாளர் தம்மனைக் கடைகடோறுங் காணிமிர்த்
திரவலாழி நெஞ்சமே யினியதெய்த வேண்டினீர்
குரவமேறி வண்டினங் குழலொடியாழ்செய் கோவலூர்
விரவினாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே.

3. உள்ளத்தீரே போதுமின் னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற் காலிட்டிங் கவலத்துள் ளழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினன் வீரட்டானஞ் சேர்துமே.

4. கனைகொளிருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனையபலவு மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்
பனைகளுலவு பைம்பொழிற் பழனஞ்சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான் வீரட்டானஞ் சேர்துமே.

5. உளங்கொள்போக முய்த்திடா ருடம்பிழந்த போதின்கண்
துளங்கிநின்று நாடொறுந் துயரலாழி நெஞ்சமே
வளங்கொள்பெண்ணை வந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விளங்குகோவ ணத்தினன் வீரட்டானஞ் சேர்துமே.

6. கேடுமூப்புச் சாக்காடு கெழுமிவந்து நாடொறும்
ஆடுபோல நரைகளா யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற் குழகன்கோவ லூர்தனுள்
வீடுகாட்டு நெறியினன் வீரட்டானஞ் சேர்துமே.

7. உரையும்பாட்டுந் தளர்வெய்தி யுடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி நகுவர்நமர்க ளாதலால்
வரைகொள்பெண்ணை வந்துலா வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர்வெண் ணீற்றினன் வீரட்டானஞ் சேர்துமே.

8. ஏதமிக்க மூப்பினோ டிருமலீளை யென்றிவை
ஊதலாக்கை யோம்புவீ ருறுதியாவ தறிதிரேல்
போதில்வண்டு பண்செயும் பூந்தண்கோவ லூர்தனுள்
வேதமோது நெறியினன் வீரட்டானஞ் சேர்துமே.

9. ஆறுபட்ட புன்சடை யழகனாயி ழைக்கொரு
கூறுபட்ட மேனியான் குழகன்கோவ லூர்தனுள்
நீறுபட்ட கோலத்தா னீலகண்ட னிருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானஞ் சேர்துமே.

10. குறிகொளாழி நெஞ்சமே கூறைதுவரிட் டார்களும்
அறிவிலாத வமணர்சொல் லவத்தமாவ தறிதிரேல்
பொறிகொள்வண்டு பண்செயும் பூந்தண்கோவ
லூர்தனுள்
வெறிகொள்கங்கை தாங்கினன் வீரட்டானஞ்
சேர்துமே.

11. கழியோடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
பழிகடீரச் சொன்னசொற் பாவநாச மாதலால்
அழிவிலீர்கொண் டேத்துமின் னந்தண்கோவ
லூர்தனுள்
விழிகொள்பூதப் படையினன் வீரட்டானஞ்சேர்துமே.

XV. திருக்கோவலூர் வீரட்டம் 2.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. செத்தையேன் சிதம்பநாயேன்
செடியனே னழுக்குப்பாயும்
பொத்தையே போற்றிநாளும்
புகலிட மறியமாட்டேன்
எத்தைநான் பற்றிநிற்கேன்
இருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வதென்னே
கோவல் வீரட்டனீரே.

2. தலைசுமந் திருகைநாற்றித்
தரணிக்கே பொறையதாகி
நிலையிலா நெஞ்சந்தன்னுள்
நித்தலு மைவர்வேண்டும்
விலைகொடுத் தறுக்கமாட்டேன்
வேண்டிற்றே வேண்டியெய்த்தேன்
குலைகொண்மாங் கனிகள்சிந்துங்
கோவல் வீரட்டனீரே.

3. வழித்தலைப் படவுமாட்டேன்
வைகலுந் தூய்மைசெய்து
பழித்திலேன் பாசமற்றுப்
பரமநான் பாவமாட்டேன்

இழித்திலேன் பிறவிதன்னை
யென்னினைந் திருக்கமாட்டேன்
கொழித்துவந் தலைக்குங்கெண்ணீர்க்
கோவல் வீரட்டனீரே.

4. சாற்றுவரைவர் வந்து
சந்தித்த குடிமைவேண்டிக்
காற்றுவர் கனலப்பேசிக்
கண்செவி மூக்குவாயுள்
ஆற்றுவர லந்துபோனேன்
ஆதியை யறிவொன்றின்றிக்
கூற்றுவர் வாயிற்பட்டேன்
கோவல் வீரட்டனீரே.

5. தடுத்திலே னைவர்தம்மைத்
தத்துவத் துயர்வுநீர்மைப்
படுத்திலேன் பரப்புநோக்கிப்
பன்மலர்ப் பாதமுற்ற
அடுத்திலேன் சிந்தையார
வார்வலித் தன்புதிண்ணம்
கொடுத்திலேன் கொடியவாநான்
கோவல் வீரட்டனீரே.

6. மாச்செய்த குரம்பைதன்னை
மண்ணிடை மயக்கமெய்து
நாச்செய்து நாலுமைந்து
நல்லன வாய்தல்வைத்துக்

காச்செய்த காயந்தன்னுள்
நித்தலு மைவர்வந்து
கோச்செய்து குமைக்கவாற்றேன்
கோவல் வீரட்டனீரே.

7. படைகள்போல் வினைகள்வந்து
பற்றியென் பக்கநின்றும்
விடகிலா வாதலாலே
விகிர்தனை விரும்பியேத்தும்
இடையிலே னென்செய்கேனோ
விரப்பவர் தங்கட்கென்றும்
கொடையிலேன் கொள்வதேநான்
கோவல் வீரட்டனீரே.

8. பிச்சிலேன் பிறவிதன்னைப்
பேதையேன் பிணக்கமென்னும்
துச்சுளே யழுந்தி வீழ்ந்து
துயரமே யிடும்பைதன்னுள்
அச்சனை யாதிமூர்த்திக்
கன்பனாய் வாழமாட்டாக்
கொச்சையேன் செய்வதென்னே
கோவல் வீரட்டனீரே.

9. நிணத்திடை யாக்கைபேணி
நியமஞ்செய் திருக்கமாட்டேன்
மணத்திடை யாட்டம்பேசி
மக்களே சுற்றமென்னும்

கணத்திடை யாட்டப்பட்டுக்
காதலா லுன்னைப்பேணும்
குணத்திடை வாழமாட்டேன்
கோவல் வீரட்டனீரே.

10. விரிகட லிலங்கைக்கோனை
வியன்கயி லாயத்தின்கீழ்
இருபது தோளும்பத்துச்
சிரங்களு நெரியவூன்றிப்
பரவிய பாடல்கேட்டுப்
படைகொடுத் தருளிச்செய்தார்
குரவொடு கோங்குசூழ்ந்த
கோவல் வீரட்டனாரே.

XVI. திருநாவலூர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. கோவல னான்முகன் வானவர்
கோனுங்குற் றேவல் செய்ய
மேவலர் முப்புரந் தீயெழு
வித்தவ ரோரம்பினால்
ஏவலனார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங் கொண்ட
நாவல னார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

2. தன்மையினா லடியேனைத்
தாமாட்கொண்ட நாட் சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்ட
னென்பதோர் வாழ்வு தந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்
தந்தென்னைப் போகம் புணர்த்த
நன்மையி னார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

3. வேகங் கொண் டோடிய
வெள்விடை யேறியோர் மெல்லியலை
ஆகங் கொண்டார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங் கொண்டார்
போகங் கொண்டார்கடற் கோடியின்
மோடியைப் பூண்பதாக
நாகங் கொண்டார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

4. அஞ்சுங் கொண்டாடுவ ராவினிற்
சேவினை யாட்சி கொண்டார்
தஞ்சங் கொண்டாரடிச் சண்டியைத்
தாமென வைத்து கந்தார்
நெஞ்சங் கொண்டார் வெண்ணெய்
நல்லூரில் வைத்தெனை யாளுங்கொண்டு
நஞ்சங் கொண்டார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

5. உம்பரார் கோனைத் திண்டோண்
முரித்தா ருரித்தார் களிற்றைச்
செம்பொனார் தீவண்ணர் தூவண்ண
நீற்றரோ ராவணத்தால்
எம்பிரானார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங்கொண்ட
நம்பிரா னார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

6. கோட்டங் கொண்டார் குடமூக்கிலுங்
கோவலுங் கோத்திட்டையும்
வேட்டங் கொண்டார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங் கொண்டார்
ஆட்டங் கொண்டார் தில்லைச்
சிற்றம்பலத்தே யருக்கனை முன்
நாட்டங் கொண்டார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

7. தாயவளாய்த் தந்தை யாகிச்
சாதல் பிறத்தலின்றிப்
போயகலா மைத்தன் பொன்னடிக்
கென்னைப் பொருந்த வைத்த
வேயவனார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங்கொண்ட
நாயகனார்க் கிட மாவது
நந்திரு நாவலூரே.

8. வாயாடி மாமறை யோதியோர்
வேதிய னாகிவந்து
தீயாடியார் சினக் கேழலின்பின்
சென்றோர் வேடுவனாய்
வேயாடியார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங்கொண்ட
நாயாடி யார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

9. படமாடு பாம்பணை யானுக்கும்
பாவைநல் லாடனக்கும்
வடமாடு மால்விடை யேற்றுக்கும்
பாகனாய் வந்தொரு நாள்
இடமாடியார் வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை யாளுங்கொண்ட
நடமாடி யார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே.

10. மிடுக்குண்டென் றோடியோர் வெற்பெடுத்தான்
 வலியை நெரித்தார்
அடக்கங் கொண்டாவணங் காட்டிநல்
 வெண்ணெயூ ராளுங் கொண்டார்
தடுக்க வொண்ணாததோர் வேழத்
 தினையுரித் திட்டுமையை
நடுக்கங் கண்டார்க்கிட மாவது
 நந்திரு நாவலூரே.

11. நாதனுக் கூர்நமக் கூர்
 நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு
 மூரணி நாவலூரென்
றோதநற் றக்கவன் றொண்டனா
 ரூர னுரைத்த தமிழ்
காதலித் துங் கற்றுங்
 கேட்பவர் தம்வினைக் கட்டறுமே.

AT TIRU-VENNAI-NALLUR

This is Sadayappa's land
His, who with a lavish hand
Made happy Poet Kambar's days!
And he, in turn with lavish praise,
Has built round Sadayappa's name
A lasting monument of Fame!
O happy spot, to Fame so dear,
With Poet and Patron without peer!

XVII. திருவெண்ணெய் நல்லூர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூ
ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

2. நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

3. மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே.

4. முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே.

TIRU-VENNAI-NALLUR XVII.—SUNDARAMURTI.

1. O Unsound of mind! Wearer of the crescent, Oh Lord of grace! on no account shall I forget Thee: But think of Thee always; Lord who has set up His abode at Tiru-Vennai-Nallur on the southern bank of the Pennar in the shrine called Tiru-Arul-Turai; O Father how can I any longer say I am not Thy slave?

2. For many days forgetting Thee, I wandered about like an Evil spirit, dog that I am! I am weary. I won Thy grace so hard to get, Lord who abides at Tiru-Vennai-Nallur, on the southern bamboo-grown bank of the Pennar in that shrine called Tiru-Arul-Turai, O Mother. how can I any longer say, I am not Thy slave?

3. I forget Thee not: but think of Thee much, O Lord who abides at Tiru-Vennai-Nallur on the southern bank of the Pennar, radiant with the water-washed gold, rubies, and diamonds, in that shrine called Tiru-Arul-Turai, O Mother how can I any longer say, I am not Thy slave?

4. I shall not die; I shall not be born again; even if I am born, I shall not grow old; O Lord who rides on an ox! Though I, a wicked one, shall tell only lies, protect me by Thy grace! O Lord who abides at Tiru-Vennai-Nallur on the southern bank thickly-grown with plants, of the Pennar, in that shrine called Tiru-Arul-Turai! O Lord! How can I say any longer, I am not thy slave?

5. பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே.

6. தண்ணார்மதி சூடதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

7. ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே.

8. ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே.

5. Give me that which Thy devotees get, O Lord of Grace! I, who am as useless as wealth in the hands of a fool, O Lord who abides at Tiru-Vennai-Nallur on the pollen-scattering southern bank of the Pennar, in that shrine which is called Tiru-Arul-Turai; Oh ancient of days, how can I any longer say, I am not thy slave?

6. Wearer of the cool moon on the head, with the body radiant as fire or flame, Thou didst burn with Thy smile Thy enemies, three cities, Lord who abidest at the most famous spot on earth, Tiru-Vennai-Nallur, on the southern bank of the Pennar, in that shrine called Tiru-Arul-Turai! how can I any longer say, I am not Thy slave?

7. Flesh, life, body, the world, the sky, the land, the sea, the mountain, all Thou art! Lord who abides at Tiru-Vennai-Nallur, on the honey-shedding southern bank of the Pennar, in that shrine called Tiru-Arul-Turai, how can I any longer say, I am not Thy slave?

8. O Thou that with Thy bow didst destroy the three cities of Thy enemies, should I still wander about talking confusedly? Thou who bearest the Ganges that flowed down from the flushed sun-set sky, O Thou who abidest at Tiru-Vennai-Nallur, on the southern bank of the Pennar, in that Shrine which is called Tiru-Arul-Turai, how can I any longer say, I am not Thy slave?

9. மழுவாள்வல னேந்திமறை யோதிமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

10. காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ
ரருட்டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே.

9. Bearing the column of fire on Thy right and the maid on the left, Lord who gavest us the Vedas, is it not Thy duty to save Thy devotees from sins, Oh Lord Beautiful, who abidest at Tiru-Vennai-Nallur on the fertile southern bank of the Pennar in that Shrine known as Tiru-Arul-Turai (the abode of Divine Grace) how can I any longer say, I am not Thy slave?

10. The waters from the clouds fill the river and widen the banks with their waves, as if with hands and by flinging precious gems, make this the most famous on earth, Tiru-Vennai-Nallur on the southern bank of the Pennar, and Thou Lord abidest there at the Shrine called Tiru-Arul-Turai and how can I known as Aruran say any longer, I am not thy slave?

XVIII. திருமுண்டீச்சரம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. ஆர்த்தான்கா ணழுகை மரைக்கு நாணு
வடியவர்கட் கன்பன்கா ணானைத் தோலைப்
போர்த்தான்காண் புரிசடைமேற் புனலேற்றான்காண்
புறங்காட்டி லாடல் புரிந்தான் றான்காண்
காத்தான்கா ணுலகேழுங் கலங்கா வண்ணங்
கனைகடல்வாய் நஞ்சதனைக் கண்டத்துள்ளே
சேர்த்தான்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

[நாகம் = பாம்பு.]

2. கருத்தன்காண் கமலத்தோன் றலையிலொன்றைக்
காய்ந்தான்காண் பாய்ந்தநீர் பரந்தசென்னி
ஒருத்தன்கா ணுமையவளோர் பாகத்தான்கா
ணோருருவின் மூவுருவா யொன்றாய்நின்ற
விருத்தன்காண் விண்ணவர்க்கு மேலானான்காண்
மெய்யடியா ருள்ளத்தே விரும்பிநின்ற
திருத்தன்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

3. நம்பன்கா ணரைவிடையொன் றேறினான்கா
ணாதன்காண் கீதத்தை நவிற்றினான்காண்
இன்பன்கா ணிமையாமுக் கண்ணினான்கா
ணேசற்று மனமுருகு மடியார்தங்கட்

கன்பன்கா ணாழலதா டினன்கா
ணவனிவனென் றியாவர்க்கு மறிய வொண்ணச்
செம்பொன்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

[நேசற்று = துக்கமற்று.]

4. மூவன்காண் மூவர்க்கு முதலானன்காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவானன்காண்
காவன்கா ணுலகுக்கோர் கண்ணானன்காண்
கங்காளன்காண் கயிலைமலையி னன்காண்
ஆவன்கா ணாவகத்தஞ் சாடினன்கா
ணாழலாய யற்கரிக்கு மறியவொண்ணத்
தேவன்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன் காணவனென் சிந்தையானே.

[ஆவகத்தஞ்சு = பசுவினிடத்ததான பஞ்சகவ்யம்.]

5. கானவன்காண் கானவனைப் பொருதான் றன்காண்
கனலாட வல்லான்காண் கையிலேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயினன்காண்
வல்லேமின் றதுவேற வல்லான்றன்காண்
ஊனவன்கா ணுலகத்துக் குயிரானன்கா [கென்றும்
ணுரையவன்கா ணுணர்வவன்கா ணுணர்ந்தார்க்
தேனவன்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

6. உற்றவன்கா ணுறவெல்லா மாவான்றன்கா
ணொழிவற நின்றெங்கு முலப்பிலான்காண்
புற்றரவே யாடையுமாய்ப் பூணுமாகிப்
புறங்காட்டி லெரியாடல் புரிந்தான்றன்காண்

நற்றவன்கா ணடியடைந்த மாணிக்காக
நணுகியதோர் பெருங்கூற்றைச் சேவடியினால்
செற்றவன்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

[முலப்பு=அழிவு. மாணிக்காக=மார்க்கண்டன்.]

7. உறைத்தவன்கா ணுணராத தக்கன்வேள்வி
யுருண்டோடத் தொடர்ந்த தருக்கன் பல்லை
யெல்லாம்
தகர்த்தவன்காண் டக்கன்தன் றலையைச்செற்ற
தலையவன்காண் மலைமகளா முமையைச்சால
மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார் வேள்வி
வந்தவி யுண்டவரோடு மதனையெல்லாம்
சிதைத்தவன்காண் டிருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

[தருக்கன்=சூரியன்.]

8-9. உரிந்த வுடையார் துவரா லுடம்பை மூடி
யுழிதருமவ் வூமர வருணரா வண்ணம்
பரிந்தவன்காண் பனிவரைமீப் பண்டமெல்லாம்
பரித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரந்துவரு மிருகரையுந் தடவாவோடி
நின்மலனை வலங்கொண்டு நீளநோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

[துவர்=சிவப்பு.]

10. அறுத்தவன்கா ணடியவர்க ளல்லலெல்லா
மரும்பொருளாய் நின்றவன்கா ணனங்கனாக
மறுத்தவன்காண் மலைதன்னை மதியாதோடி
மலைமகடன் மனநடுங்க வானோரஞ்சக்
கறுத்தவனாய்க் கயிலாய மெடுத்தோன் கையுங்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்கியோடச்
செறுத்தவன்காண் டிருமுண்டீச் சரத்துமேய .
சிவலோகன்கா ணவனென் சிந்தையானே.

[கறுத்தவன்=கோபித்தவன். செறுத்தவன்=அழித்தவன்]

XIX. திருஇடையாறு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. முந்தையூர் முதுகுன்றங் குரங்கணின் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றடைவான் றிருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

2. சுற்றுமூர் சுழியல் திருச்சோ புரந்தொண்டர்
ஒற்றுமூ ரொற்றியூர் திருவூற லொழியாப்
பெற்றமேறி பெண்பாதி யிடம்பெண்ணைத் தெண்ணீர்
எற்றமூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

3. கடங்களூர் திருக்காரிக் கரைகயி லாயம்
விடங்களூர் திருவெண்ணி யண்ணுமலை வெய்ய
படங்களூர் கின்றபாம் பரையான் பரஞ்சோதி
இடங்கொளூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

4. கச்சையூர் காவங் கழுக்குன்றங் காரோணம்
பிச்சையூர் திரிவான் கடவூர் வடபேறூர்
கச்சியூர் கச்சிசிக்கல் நெய்த்தான மிழலை
இச்சையூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

5. நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்ற மமர்ந்த
பிறையனூர் பெருமூர் பெரும்பெற்றப் புலியூர்
மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி வாய்த்த
இறையனூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

6. திங்களூர் திருவா திரையான் பட்டினமூர்
நங்களூர் நறையூர் நனிநா லிசைநாலூர்
தங்களூர் தமிழா னென்றுபா விக்கவல்ல
எங்களூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

7. கருக்கநஞ் சமுதுண்ட கல்லாலன் கொல்லேற்றன்
தருக்கருக் கனைச்செற் றுகந்தான்றன் முடிமேல்
எருக்கநாண் மலரிண் டையுமத்த முஞ்சூடி
இருக்குமூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

8. தேசனூர் வினைதேய நின்றான் றிருவாக்கூர்
பாசனூர் பரமேட்டி பவித்திர பாவ
நாசனூர் நனிபள்ளி நள்ளாற்றை யமர்ந்த
ஈசனூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

9. பேறனூர் பிறைச்சென் னியினான் பெருவேளூர்
தேறனூர் திருமா மகள்கோன் றிருமாலோர்
கூறனூர் குரங்காடு துறைதிருக் கோவல்
ஏறனூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

10. ஊறிவா யனநாடி யவன்றொண்ட னூரன்
தேறுவார் சிந்தை தேறுமிடஞ் செங்கண்வெள்ளே
றேறுவா ரெய்தமா னிடையா றிடைமருதைக்
கூறுவார் வினையெவ் விடமெய் குளிர்வாரே.

XX. திருநெல்வெண்ணெய்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல்வண மிடுவது சொல்லே.

2. நிச்சலு மடியவர் தொழுதெழு நெல்வெணெய்க்
கச்சிள வரவசைத் தீரே
கச்சிள வரவசைத் தீருமைக் காண்பவர்
அச்சமொ டருவினை யிலரே.

3. நிறைவிரி தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
அரைவிரி கோவணத் தீரே
அரைவிரி கோவணத் தீருமை யலர்கொடு
உரைவிரிப் போருயர்ந் தோரே.

4. நீர்மல்கு தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
ஊர்மல்கி யுறையவல் லீரே
ஊர்மல்கி யுறையவல் லீருமை யுள்குதல்
பார்மல்கு புகழவர் பண்பே.

5. நீடிளம் பொழிலணி நெல்வெணெய் மேவிய
ஆடிளம் பாப்பசைத் தீரே
ஆடிளம் பாப்பசைத் தீருமை யன்பொடு
பாடுள முடையவர் பண்பே.

6. நெற்றியோர் கண்ணுடை நெல்வெணெய் மேவிய
பெற்றிகொள் பிறைநுத லீரே
பெற்றிகொள் பிறைநுத லீருமைப் பேணுதல்
கற்றறி வோர்கடங் கடனே.

7. நிறையவர் தொழுதெழு நெல்வெணெய் மேவிய
கறையணி மிடறுடை யீரே
கறையணி மிடறுடை யீருமைக் காண்பவர்
உறைவது மும்மடிக் கீழே.

8. நெருக்கிய பொழிலணி நெல்வெணெய் மேவியன்
அரக்கனை யசைவுசெய் தீரே
அரக்கனை யசைவுசெய் தீருமை யன்புசெய்
திருக்கவல் லாரிட ரிலரே.

9. நிரைவிரி சடைமுடி நெல்வெணெய் மேவியன்
இருவரை யிடர்கள் செய்தீரே
இருவரை யிடர்கள்செய் தீருமை யிசைவொடு
பரவவல் லார்பழி யிலரே.

10. நீக்கிய புனலணி நெல்வெணெய் மேவிய
சாக்கியச் சமண்கெடுத் தீரே
சாக்கியச் சமண்கெடுத் தீருமைச் சார்வது
பாக்கிய முடையவர் பண்பே.

11. நிலமல்கு தொல்புகழ் நெல்வெணெ யீசனை
நலமல்கு ஞானசம் பந்தன்
நலமல்கு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலமல்கு வார்துய ரிலரே.

XXI. திருவடுகூர்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. சுடுகூ டெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகா மங்கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே.

2. பாலுந் நறுநெய்யுந் தயிரும் பயின்றாடி
ஏலுஞ் சுடுநீறு மென்பு மொளிமல்கக்
கோலம் பொழிற்சோலைக் கூடி மடவன்னம்
ஆலும் வடுகூரி லாடும் மடிகளே.

3. சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதன்மேல்
ஓடுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
ஏடு மலர்மோந்தங் கெழிலார் வரிவண்டு
பாடும் வடுகூரி லாடும் மடிகளே.

4. துவரும் புரிசையுந் துதைந்த மணிமாடம்
கவர வெரியோட்டிக் கடிய மதிலெய்தார்
கவரு மணிகொல்லைக் கடியமுலை நல்லார்
பவரும் வடுகூரி லாடும் மடிகளே.

5. துணியா ருடையாடை துன்னி யரைதன்மேல்
தணியா வழலுகந் தெரியா வகைவைத்தான்
பணியா ரடியார்கள் பலரும் பயின்றேத்த
அணியார் வடுகூரி லாடும் மடிகளே.

6. தளருங் கொடியன்னா டன்னோ டுடனாகிக்
கிளரு மரவார்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண் டிசைபாட
ஒளிரும் வடுகூரி லாடும் மடிகளே.

7. நெடியர் சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர் விடையூர்வர் கொடியர் மொழிகொள்ளார்
கடிய தொழிற்காலன் மடிய வுதைகொண்ட
அடியர் வடுகூரி லாடும் மடிகளே.

8. பிறையு நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பலபாடி மயானத் துறைவாரும்
பறையு மதிர்குழலும் போலப் பலவண்டாங்
கறையும் வடுகூரி லாடும் மடிகளே.

9. சந்தம் மலர்வேய்ந்த சடையின் னிடைவிம்மு
கந்தம் மிகுதிங்கட் சிந்து கதிர்மாலை
வந்து நயந்தெம்மை நன்று மருள்செய்வார்
அந்தன் வடுகூரி லாடும் மடிகளே.

10. திருமா லடிவீழத் திசைநான் முகனாய
பெருமா னுணர்கில்லாப் பெருமா னெடுமுடிசேர்
செருமால் விடையூருஞ் செம்மான் றிசைவில்லா
அருமா வடுகூரி லாடும் மடிகளே.

11. படிநோன் பவையாவர் பழியில் புகழான
கடிநா ணிகழ்சோலை கமழும் வடுகூரைப்
படியா னசிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே.

XXII. திருவாமாத்தூர் 1.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

1. துன்னம்பெய் கோவணமுந் தோலுமுடை யாடை
பின்னஞ் சடைமேலோர் பிள்ளை மதிசூடி
அன்னஞ்சேர் தண்கான லாமாத்தூ ரம்மான்றன்
பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே.

2. கைம்மாவின் றோல்போர்த்த காபாலி வானுலகில்
மும்மா மதிலெய்தான் முக்கணன் பேர்பாடி
அம்மா மலர்ச்சோலை யாமாத்தூ ரம்மானெம்
பெம்மானென் றேத்தாதார் பேயரிற் பேயரே.

3. பாம்பரைச் சாத்தியோர் பண்டரங்கன் விண்டதோர்
தேம்ப விளமதியஞ் சூடிய சென்னியான்
ஆம்பலம் பூம்பொய்கை யாமாத்தூ ரம்மான்றன்
சாம்ப லகலத்தார் சார்பல்லாற் சார்பிலமே.

4. கோணாகப் பேரல்குற் கோல்வளைக்கை மாதராள்
பூணாகம் பாகமாப் புல்கி யவளோடும்
ஆணாகங் காதல்செய் யாமாத்தூ ரம்மானைக்
காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே.

5. பாட னெறிநின்றான் பைங்கொன்றைத் தண்டாரே
சூட னெறிநின்றான் சூலஞ்சேர் கையினான்
ஆட னெறிநின்றா னாமாத்தூ ரம்மான்றன்
வேட நெறிநில்லா வேடமும் வேடமே.

6. சாமவரை வில்லாகச் சந்தித்த வெங்கணையால்
காவன் மதிலெய்தான் கண்ணுடை நெற்றியான்
யாவருஞ் சென்றேத்து மாமாத்தூ ரம்மானைத்
தேவர் தலைவணங்குந் தேவர்க்குந் தேவனே.

7. மாறுத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேறுக நில்லாத வேடமே காட்டினான்
ஆறுத தீயாடி யாமாத்தூ ரம்மானைக்
கூறுத நாவெல்லாங் கூறுத நாக்களே.

8. தாளா லரக்கன்றோள் சாய்த்த தலைமகன்தன்
நாளா திரையென்றே நம்பன்ற னாமத்தால்
ஆளானார் சென்றேத்து மாமாத்தூ ரம்மானைக்
கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே.

9. புள்ளுங் கமலமுங் கைக்கொண்டார் தாமிருவர்
உள்ளு மவன்பெருமை யொப்பளக்குந் தன்மையதே
அள்ளல் விளைகழனி யாமாத்தூ ரம்மானெம்
வள்ளல் கழல்பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே.

10. பிச்சை பிறர்பெய்யப் பின்சாரக் கோசாரக்
கொச்சை புலானாற வீருரிவை போர்த்துகந்தான்
அச்சந்தன் மாதேவிக் கீந்தான்ற னாமாத்தூர்
நிச்ச னினையாதார் நெஞ்சமு நெஞ்சமே

11. ஆட லரவசைத்த வாமாத்தூ ரம்மானைக்
கோட விரும்புறவிற் கொச்சை வயத்தலைவன்
நாட லரியசீர் ஞானசம் பந்தன்றன்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே.

XXII. திருவாமாத்தூர் 2.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

1. குன்ற வார்சிலை நாண ராவரி
வாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாட மாளிகை
சூளி கைக்கெதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில் வந்தணையு மாமாத்தூ ரம்மானே.

2. பரவி வானவர் தான வர்பல
ருங்க லங்கிட வந்த கார்விடம்
வெருவ வுண்டுகந்த வருளென்கொல் விண்ணவனே
கரவின் மாமணி பொன்கொ ழித்திழி
சந்து காரகி றந்து பம்பைநீர்
அருவி வந்தலைக்கு மாமாத்தூ ரம்மானே.

3. நீண்ட வார்சடை தாழ நேரிழை
பாட நீறுமெய் பூசி மாலயன்
மாண்ட வார்சுடலை நடமாடு மாண்பதுவென்
பூண்ட கேழன் மருப்ப ராவிரி
கொன்றை வாள்வரி யாமை பூணென
ஆண்ட நாயகனே யாமாத்தூ ரம்மானே.

4. சேலி னேரன கண்ணி வெண்ணகை
மான்வி ழித்திரு மாதைப் பாகம்வைத்
தேல மாதவ நீமுயல்கின்ற வேடமிதென்

பாலி னேர்மொழி மங்கை மார்நட
மாடி யின்னிசை பாட நீள்பதி
ஆலை சூழ்கழனி யாமாத்தூ ரம்மானே.

5 தொண்டர் வந்து வணங்கி மாமலர்
தூவி நின்கழ லேத்து வாரவர்
உண்டியால் வருந்த விரங்காத தென்னை கொலாம்
வண்ட லார்கழ னிக்க லந்தும
லர்ந்த தாமரை மாதர் வாண்முகம்
அண்டவாணர் தொழு மாமாத்தூ ரம்மானே.

6. ஓதி யாரண மாய நுண்பொரு
ளன்று நால்வர்முன் கேட்க நன்னெறி
நீதி யாலநீழ லுரைக்கின்ற நீர்மையதென்
சோதி யேசுட ரேசு ரும்பமர்
கொன்றை யாய்திரு நின்றி யூருறை
ஆதியே பரனே யாமாத்தூ ரம்மானே.

7. மங்கை வாணுதன் மான்ம னத்திடை
வாடி யூடம ணங்க மழ்சடைக்
கங்கையா ளிருந்த கருத்தாவ தென்னைகொலாம்
பங்க யமது வுண்டு வண்டிசை
பாட மாமயி லாட விண்முழ
வங்கையா லதிர்க்கு மாமாத்தூ ரம்மானே.

8. நின்ற டர்த்திடு மைம்பு லன்னிலை
யாத வண்ண நினைந்து ளத்திடை
வென்றடர்த் தொருபான் மடமாதை விரும்புதலென்

குன்றெ டுத்தநி சாசரன்றிர
டோளி ருபது தாளெ ரிதர
அன்றடர்த் துகந்தா யாமாத்தூ ரம்மானே.

9. செய்ய தாமரை மேலி ருந்தவ
னோடு மாலடி தேட நீண்முடி
வெய்ய வாரழலாய் நிமிர்கின்ற வெற்றிமையென்
னைதய லாளொடு பிச்சைக் கிச்சை
தயங்கு தோலரை யார்த்த வேடங்கொண்
டுடைய மேற்றுகந்தா யாமாத்தூ ரம்மானே.

10. புத்தர் புன்சம ணாதர் பொய்ம்மொழி
நூல்பி டித்தலர் தூற்ற நின்னடி
பத்தர் பேணநின்ற பரமாய பான்மையதென்
முத்தை வென்ற முறுவ லாளுமை
பங்க னென்றிமை யோர் பரவிடும்
அத்தனே யரியா யாமாத்தூ ரம்மானே.

11. வாடல் வெண்டலை மாலை யார்த்தும
யங்கி ருள்ளெரி யேந்தி மாநடம்
ஆடன் மேயதென்னென் றுமாத்தூ ரம்மானைக்
கோடனைக மரும்பு பைம்பொழிற்
கொச்சை யாரிறை ஞான சம்பந்தன்
பாடல் பத்தும்வல்லார் பரலோகஞ் சேர்வாரே.

XXII. திருவாமாத்தூர் 3.

திருக்குறுந்தொகை.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. மாமாத் தாகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியுங் காண்கிலர் தாண்முடி
ஆமாத் தூரர்னே யருளாயென் றென்று
ஏமாப் பெய்திக் கண்டாரிறை யானையே.

[மாத்து=மாற்று. மால்=விஷ்ணு. அயன்=பிரமன் ஏமாம்பு=களிப்பு.]

2. சந்தியானைச் சமாதி செய்வார் தங்கள்
புந்தி யானைப்புத் தேளிர் தொழப்படும்
அந்தி யானை யாமாத்தூ ரழகனைச்
சிந்தி யாதவர் தீவினை யாளரே.

[புந்தி=புத்தி. புத்தேளிர்=தேவர்.]

3. காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவேன்
ஆமாத் தூரரனே யென்றழைத் தலும்
தேமாத் தீங்கனி போலத்தித் திக்குமே.

[காமாத்தம்=பொருளும் இன்பமும். ஆறு=வழி.]

4. பஞ்ச பூத வலையிற் படுவதற்
கஞ்சி நானுமா மாத்தூ ரழகனை
நெஞ்சினு ளினைந்தே னினை வெய்தலும்
வஞ்ச வாறுகள் வற்றின காண்மினே.

[ஆறுகள்=வழிகள்.]

5. குராம னுங்குழ லாளொரு கூறனர்
அராம னுஞ்சடை யான்றிரு வாமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் யீசனை
நிராம யன்றனை நாளு நினைமினே.

[குரா=ஒருவகை மலர். அரா=பாம்பு. நிராமயன்=நோயற்றவன்]

6. பித்தனைப் பெருந் தேவர் தொழப்படும்
அத்த னையணி யாமாத்தூர் மேவிய
முத்தி னையடி யேனுண் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே.

7. நீற்றி னார்திரு மேனிய னேரிழை
கூற்றி னன்குழற் கோலச் சடையிலோர்
ஆற்றி னனணி யாமாத்தூர் மேவிய
ஏற்றி னனெமை யாளுடை யீசனே.

[கூறு=பாகம்.]

8. பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகு மமுதினை யாமாத்தூர்
சண்ணிப் பானைத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னானவன் காண்மினே.

[வித்தகர்=ஞானிகள். சண்ணிப்பானை=நெருங்கி வீற்றிருப்பவனை]

9. குண்டர் பீலிகள் கொள்ளுங் குணமிலா
மிண்ட ரோடெனை வேறுபடுத் துய்யக்
கொண்ட நாதன் குளிர்புனல் வீரட்டத்
தண்ட னாரிட மாமாத்தூர் காண்மினே.

[பீலி=மயில் தோகை.]

10. வானஞ் சாடுமதி யரவத் தொடு
தானஞ் சாதுடன் வைத்த சடையிடைத்
தேனஞ் சாடிய தெங்கிள நீரொடும்
ஆனஞ் சாடிய வாமாத்தூ ரையனே.

[வான் = ஆகாயம். நஞ்சு = விஷம். ஆனம் = பஞ்சகவியம்]

11. விடலையாய் விலங்கல் லெடுத் தான்முடி
அடர வோர்விர லூன்றிய வாமாத்தூர்
இடமதாக் கொண்ட வீசனுக் கென்னுளம்
இடமதா கக்கொண் டின்புற் றிருப்பனே.

[விலங்கல் = மலை.]

XXII. திருவாமாத்தூர் 4.

திருத்தாண்டகம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

1. வண்ணங்க டாம்பாடி வந்துநின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பா லின்றெய்து கனலப்பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்க டாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்துகாணீர்
அழகியரே யாமாத்தூ ரையனாரே.

[விடை=ரிஷபம். சுண்ணம்=விபூதி.]

2. வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளைமாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணையேந்திக்
கந்தாரந் தாமுரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீ ரூரேதென்றேன்
நொந்தார் போல்வந்தென தில்லேபுக்கு
நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தாமரை மலர்மே லளிவண்டி யாழ்செய்
யாமாத்தூ ரென்றடிகள் போயினாரே.

[கந்தாரம்=ஓரிராகம். நுடங்கே=ஒசியும்.]

3. கட்டங் கந்தா மொன்றுகை யிலேந்திக்
கடிய விடையேறிக் காபாலியார்
இட்டங் கடாம்பேசி யில்லேபுக்கு
இடும்பலியு மிடக்கொள் ளார்போ வாரல்லர்

பட்டிமை யும்படிறுமே பேசா நின்றார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின்றார்தாம்
அட்டியசில் பலியுங் கொள்ளார் விள்ளார்
அழகியரே யாமாத்தூ ரையனாரே.

[கட்டங்கம்=ஓராயுதம். பட்டிமை=வஞ்சகம். படிறு=பொய். விள்ளார்=பேசார்.]

4. பசைந்தபல பூதத்தர் பாடலாடல்
படநாகக் கச்சையர் பிச்சைக் கென்றங்
கிசைந்ததோ ரியல்பின ரெரியின் மேனி
யிமையாமுக் கண்ணினர் நால்வேதத்தர்
பிசைந்ததிரு நீற்றினர் பெண்ணோர் பாகம்
பிரிவறியாப் பிஞ்ஞகனார் தெண்ணீர்க் கங்கை
அசைந்ததிரு முடியரங் கைத்தீயர்
அழகியரே யாமாத்தூ ரையனாரே.

5. உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்திவெள்ளேறு
இருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்க டொழுதேத்து மிறைவனார்தாம்
பொருளுடை யரல்ல ரிலருமல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ்சூழ
அருளுடைய வங்கோதை மாலை மார்பர்
அழகியரே யாமாத்தூ ரையனாரே.

[யூர்தி=வாகனம்.]

6. வீறுடைய வேறேறி நீறு பூசி
வெண்டோடு பெய்தி டங்கை வீணையேந்திக்
கூறுடைய மடவாளோர் பாகங் கொண்டு
குழையாடக் கொடு கொட்டி கொட்டாவந்து
பாறுடைய படுதலை யோர்கையி லேந்திப்
பலிகொள்வா ரல்லர் படிறே பேசி
ஆறுடைய சடைமுடி யெம்மடிகள் போலும்
அழகியரே யாமாத்து ரையனாரே.

[வீறு=பெருமை. கொடிகொட்டி=ஓர் கூத்து. பாறு=பருந்து]

7. கையோர் கபாலத்தர் மானின் றோலர்
கருத்துடையர் நிருத்தராய்க் காண்பார் முன்னே
செய்ய திருமேனி வெண்ணீ றாடித்
திகழ்புன் சடைமுடிமேற் றிங்கள்சூடி
மெய்யொரு பாகத் துமையை வைத்து
மேவார் திரிபுரங்கள் வேவச்செய்து
ஐயனார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே யாமாத்து ரையனாரே.

[மெய்=சரீரம். மேவார்=பகைவர்.]

8. ஒன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றேற்றியூ ரும்மூரே யுணரக் கூறீர்
நின்றுதா னென்செய்வீர் போவீ ராகில்
நெற்றிமேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்
என்றுந்தா னிவ்வகையே யிடர்செய் கின்றீர்
இருக்கு மூரினி யறிந்தோ மேகம்பமோ
அன்றித்தான் போகின்றீ ரடிகளெம்மோடு
அழகியரே யாமாத்து ரையனாரே.

9. கல்லலகு தாங் கொண்டு காளத்தியார்
கடியவிடை யேறிக் காணக்காண
இல்லமே தாம்புகுதா விடுமின் பிச்சை யென்றாருக்
கெதிரெழுந்தே னெங்குங் காணேன்
சொல்லாதே போகின்றீ ரும்மூரேது
துருத்தி பழனமோ நெய்த்தானமோ
அல்லலே செய்தடிகள் போகின்றீர்தாம்
அழகியரே யாமாத்தூ ரையனாரே.

[அல்லல் = துன்பம்.]

10. மழுங்கலா நீறாடு மார்பர் போலு
மணிமிழலை மேய மணாளர் போலும்
கொழுங்குவளைக் கோதைக் கிறைவர் போலுங்
கொடுகொட்டி தாள முடையார் போலும்
செழுங்கயி லாயத்தெஞ் செல்வர் போலுந்
தென்னதிகை வீரட்டஞ் சேர்ந்தார் போலும்
அழுங்கினாரை யுறவு தீர்ப்பார் போலும்
அழகியரே யாமாத்தூ ரையனாரே.

[ஐயுறவு = சந்தேகம்.]

XXII. திருவாமாத்தூர் 5.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. காண்டனன் காண்டனன் காரிகையாடன் கருத்தனாய்
ஆண்டனா னாண்டனா னாமாத்தூரெம் மடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன் கேண்மின்கண்
மீண்டனன் மீண்டனன் வேதவித்தல்லா தவர்கட்கே.

2. பாடுவன் பாடுவன் பார்ப்பதிதன்னடி பற்றிநான்
தேடுவன் தேடுவன் திண்ணெனப்பற்றிச் செறிதர
ஆடுவ னாடுவ னாமாத்தூரெம் மடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றமதற்றென் குறிப்போடே.

3. காய்ந்தவன் காய்ந்தவன் கண்ணழலாலன்று காமனைப்
பாய்ந்தவன் பாய்ந்தவன் பாதத்தினாலன்று கூற்றத்தை
ஆய்ந்தவ னாய்ந்தவ னாமாத்தூரெம் மடிகளார்
ஏய்ந்தவ னேய்ந்தவ னெம்பிராட்டியைப் பாகமே.

4. ஓர்ந்தன னோர்ந்தன னுள்ளத்துள் ளேநின்ற வொண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்றுதிருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலிமென்றோட் டடமுலை
ஆர்ந்தன னார்ந்தன னாமாத்தூரைய னருளதே.

5. வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர் தங்களைச்
சென்றவன் சென்றவன் சில்பலிக்கென்று தெருவிடை
நின்றவ னின்றவ னீதி நிறைந்தவர் தங்கள்பால்
அன்றவ னன்றவன் செய்யருளாமாத்தூ ரையனே.

6. காண்டவன் காண்டவன் காண்டற்கரிய கடவுளாய்
நீண்டவ னீண்டவ னாரணனான்முக னேடவே
ஆண்டவ னாண்டவ னாமாத்தூரையு மென்னையுமாட்
பூண்டவன் பூண்டவன் மார்பிற் புரிநூல் புரளவே.

7. எண்ணவ னெண்ணவ னேழுலகத்துயிர் தங்கட்குக்
கண்ணவன் கண்ணவன் காண்டுமென்பாரவர் தங்கட்குப்
பெண்ணவன் பெண்ணவன் மேனியோர்பாகமாம் பிஞ்ஞகன்
அண்ணவ னண்ணவ னாமாத்தூரெம் மடிகளே.

8. பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்தென்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தினுட்பொரு ளாகிய
அன்னவ னன்னவ னாமாத்தூரையனை யார்வத்தால்
என்னவ னென்னவ னென்மனத்தின்புற் றிருப்பனே.

9. தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்க ளொடோறும்
நாடுவ னாடுவனாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கைபிடித்து மகிழ்ந்துளே
ஆடுவ னாடுவ னாமாத்தூரெம் மடிகளே.

10. உற்றனை னுற்றவர் தம்மையொழிந் துள்ளத்
துள்பொருட்
பற்றினன் பற்றினன் பங்கயச்சேவடிக் கேசெல்ல
அற்றன னற்றனை னுமாத்தூர்மேயா னடியார்கட்காள்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும்
பிறவாமைக்கே.

11. ஐயனை யத்தனை யாளுடையாமாத்தூ ரண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை
மையனை மையணி கண்டனை வன்றொண்ட னூரன்
சொல்
பொய்யொன் றுமின்றிப் புலம்புவார் பொற்கழல்
சேர்வரே.

XXIII. திருப்புறவார் பனங்காட்டூர்.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. விண்ண மர்ந்தன மும்ம தில்களை
வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய
பிஞ்ஞ காபிறை சேர்நு தலிடைக்
கண்ணமர்ந் தவனே கலந்தார்க் கருளாயே.

2. நீடல் கோட லலர்வெண் முல்லை
நீர்மலர் நிரைத்தா தளஞ்செய்யப்
பாடல் வண்டறையும் புறவார் பனங்காட்டூர்த்
தோடி லங்கிய காத யன்மின்
னுளங்க வெண்குழை துள்ள நள்ளிருள்
ஆடுஞ் சங்கரனே யடைந்தார்க் கருளாயே.

3. வாளையுங் கய லும்மிளிர் பொய்கை
வார்பு னற்கரை யருகெ லாம்வயற்
பாளை யொண்கமுகம் புறவார் பனங்காட்டூர்ப்
பூளை யுந்நறுங் கொன்றை யும்மத
மத்த மும்புனை வாய்க ழலிணைத்
தாளையே பரவுந் தவத்தார்க் கருளாயே.

4. மேய்ந்தி ளஞ்செந்நென் மென்க திர்கவ்வி
மேற்ப டுதலின் மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப் புறவார் பனங்காட்டூர்
ஆய்ந்த நான்மறை பாடி யாடு
மடிக ளென்றென் றரற்றி நன்மலர்
சாய்ந்தடி பரவுந் தவத்தார்க் கருளாயே.

5. செங்க யல்லொடு சேல்செருச் செயச்
சீறி யாழ்முர றேணி னத்தொடு
பங்கயம் மலரும் புறவார் பனங்காட்டூர்க்
கங்கை யும்மதி யுங்க மழ்சடைக்
கேண்மை யாளொடுங் கூடி மான்மறி
அங்கை யாடலனே யடியார்க் கருளாயே.

6. நீரி னார்வரை கோலி மால்கட
னீடி யபொழில் சூழ்ந்து வைகலும்
பாரினார் பிரியாப் புறவார் பனங்காட்டூர்க்
காரி னார்மலர்க் கொன்றை தாங்கு
கடவு ளென்றுகை கூப்பி நாடொறும்
சீரினால் வணங்குந் திறத்தார்க் கருளாயே.

7. கைய ரிவையர் மெல்வி ரல்லவை
காட்டி யும்மலர்க் காந்த ளங்குறி
பையரா விரியும் புறவார் பனங்காட்டூர்
மெய்ய ரிவையோர் பாகமாகவு
மேவி னாய்கழ லேத்தி நாடொறும்
பொய்யிலா வடிமை புரிந்தார்க் கருளாயே.

8. தூவி யஞ்சிறை மென்ன டையன
மல்கி யொல்கிய தூமலர்ப் பொய்கைப்
பாவில் வண்டறையும் புறவார் பனங்காட்டூர்
மேவி யந்நிலை யாய ரக்கன்
தோள டர்த்தவன் பாடல் கேட்டருள்
ஏவிய பெருமா னென்பவர்க் கருளாயே.

9. அந்தண் மாதவி புன்னை நல்லவ
சோக மும்மர விந்த மல்லிகை
பைந்த ணாழல்கள் சூழ் புறவார் பனங்காட்டூர்

எந்தி ளம்முகில் வண்ண னான்முக
னென்றி வர்க்கரி தாய்நி மிர்ந்ததோர்
சந்த மாயவனே தவத்தார்க் கருளாயே.

10. நீண மார்முரு குண்டு வண்டின
நீல மாமலர் கவ்வி நேரிசை
பாணில் யாழ்முர லும் புறவார் பனங்காட்டூர்
நாண ழிந்துழல் வார்ச மணரு
நண்பில் சாக்கிய ருந்ந கத்தலை
ஊணரி யவனே யுகப்பார்க் கருளாயே.

11. மையி னார்மணி போன்மி டற்றனை
மாசில் வெண்பொடிப் பூசி மார்பனைப்
பைய தேன்பொழில் சூழ் புறவார் பனங்காட்டூர்
ஐய னைப்புக ழான காழியு
ளாய்ந்த நான்மறை ஞானசம்பந்தன்
செய்யுள் பாடவல்லார் சிவலோகஞ் சேர்வாரே.

XXIV. திருவரசிலி

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. பாடல் வண்டறை கொன்றை பான்மதி பாய்புனற்
கங்கை
கோடல் கூவிளமாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல்வெண்டலை மாலைமருவிட வல்லியந்தோண்மேல்
ஆடன் மாசுண மசைத்த வடிகளுக் கிடமர சிலியே.

2. ஏறு பேணிய தேறி யிளமதக் களிற்றினை யெற்றி
வேறு செய்தத னுரிவை வெண்புலால் கலக்கமெய்
போர்த்த
ஊறு தேனவ னும்பர்க்கொருவனல் லொளிகொ
ளொண் சுடராம்
ஆறு சேர்தரு சென்னி யடிகளுக் கிடமர சிலியே.

3. கங்கை நீர்சடை மேலே கதமிகக் கதிரிள வனமென்
கொங்கை யாளொரு பாக மருவிய கொல்லைவெள்
ளேற்றன்
சங்கை யாய்த்திரி யாமே தன்னடியார்க் கருள்செய்து
அங்கை யாலன லேந்து மடிகளுக் கிடமர சிலியே.

4. மிக்க காலனை வீட்டி மெய்கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை யுண்பது பொன்றிகழ் கொன்றை
தக்க நூறிகழ் மார்பிற் றவளவெண் ணீறணிந் தாமை
அக்கி னாரமும் பூண்டவடிகளுக் கிடமர சிலியே.

ARASILI XXIV—TIRU-GNANA-SAMBANDAR.

1. Arasili is the abode of Him who wears Konrai flowers wherein the bees buzz; the milk-white crescent, the flowing Ganges, the fragrant Bilva and the flowers of the *datura* shine on His locks; He wears a garland of dry skulls; over the shoulders of the maid who constitutes one half of Him, the snake-rolls and dances!

2. Arasili is the abode of Him, who mounting on a bull, spurned and killed and stripped the lusty Elephant; wore the skin close to His body even with the flesh clinging white within; He is a fountain of Honey; unique among Gods; radiant fire; with locks that bear the sacred Ganges!

3. The waters of the Ganges drawn by the soft rays of the moon make a lovely park; the lovely-breasted maid is at His side; He rides on a fierce white bull; He bears fire on His lovely hand; and annihilating the doubt, as to His abode, is gracious unto devotees at Arasili.

4. Slaying insolent death and burning *Kama* God of Love to ashes, begging His food all over the country wearing the golden cassia, the well-becoming thread and sacred ashes on his bosom; garlanded with the dry shells of tortoises, He, the Lord, abides at Arasili.

5. மானஞ் சும்மட நோக்கி மலைமகள் பாகமு மருவித்
தானஞ் சாவரண் மூன்றுந் தழலெழச் சரமது துரந்து
வானஞ் சும்பெருவிடத்தை யுண்டவன் மாமறையோதி
ஆனஞ் சாடிய சென்னி யடிகளுக் கிடமா சிலியே.

6. பரிய மாசுணங் கயிறாப் பருப்பத மதற்குமத் தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணியவானவர் கடையக்
கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய வவர் தமைக் கண்டு
அரிய வாரமு தாக்கு மடிகளுக் கிடமா சிலியே.

7-8. வண்ண மால்வரை தன்னை மறித்திட லுற்றவல் லரக்கன்
கண்ணுந் தோளுநல் வாயு நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பாற் பாடிய பாடலைக்கேட்டு
அண்ண லாயருள் செய்த வடிகளுக் கிடமா சிலியே.

9. குறிய மாணுரு வாகிக் குவலய மளந்தவன் றானும்
வெறிகொ டாமரை மேலே விரும்பிய மெய்த்தவத் தோனும்
செறிவொ ணவகை யெங்குந் தேடியுந் திருவடி காண
அறிவொ ணவுரு வத்தெம் மடிகளுக் கிடமா சிலியே.

5. Having as a part of Him the daughter of the mountain-king with her languid looks envied by deer; destroying with his arrow the three defying forts; swallowing the poison dreaded of angels; chanting the Vedas, and bathing in the five products of the cow, is the Lord at Arasili.

6. When with the huge snake as the churning rope, and the huge rock as the churning rod, the wide ocean was churned and black poison rose to the surface and the celestials stood confounded, the Lord of Arasili ate the poison as if it were food!

8. When Ravana in his conceit lifted up Mount Kailas, with the pressure of one toe, the Lord so crushed him as to make his eyes, mouth and shoulders bulge and smart and crack; but when he making a stringed instrument of his own nerves, sang His praise, forgave him and was gracious unto him. The abode of the Lord is Arasili.

9. Arasili is the abode of him who invisible unto Vishnu—who dwarf-like begged a boon but measured the whole world in one stride—and to Brahma seated on the fragrant lotus; they searched for, but could not find Him.

10. குருளை யெய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையிலுண் பவருந் தேரருஞ் சொல்லிய தேறேல்
பொருளைப் பொய்யிலி மெய்யெ நாதனைப் பொன்னடி வணங்கும்
அருளை யார்தர நல்கு மடிகளுக் கிடமா சிலியே.

11. அல்லி நீள்வயல் சூழ்ந்த வரசிலி யடிகளைக் காழி
நல்ல ஞானசம் பந்த னற்றமிழ் பத்திவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தமரர் தொழுதேத்த
வல்ல வானுல கெய்தி வைகலு மகிழ்ந்திருப்பாரே.

10. The Jains shave off their heads even when continuing house-holders; they eat from their hands; let no one hark to their confounded words; those that seek truth, seek it at Arasili.

11. Those who can sing the praise of the God of Arasili abounding in long lotus pools, in the ten stanzas of Tiru-gnana-sambanda of Shiyali will, surrounded by celestials and worshipped by them, go to Heaven and rejoice there for ever.

XXV. திருஇரும்பை மாகாளம்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. மண்டுகங்கை சடையிற் கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரமூன் றெரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய் விளங்கும் மிரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாய்நின்ற மாகாளமே.

2. வேதவித்தாய் வெள்ளைநீறு பூசி வினையாயின
கோதுவித்தா நீறெழக் கொடிமா மதிலாயின
ஏதவித்தா யினதீர்க்குமிடம் மிரும்பை தனுள்
மாதவத்தோர் மறையோர் தொழநின்ற மாகாளமே.

3. வெந்தநீறும் மெலும்பும் மணிந்த விடையூர்தியான்
எந்தையெம்மா னிடமெழில் கொள்சோலை
யிரும்பைதனுள்
கந்தமாய பலவின் கனிகள் கமழும்பொழில்
மந்தியேறிக் கொணர்ந்துண் டுகள்கின்ற மாகாளமே.

4. நஞ்சுகண்டத் தடக்கி நடுங்கும் மலையான்மகள்
அஞ்சவேழ முரித்தபெருமா னமரும் மிடம்
எஞ்சலில்லாப் புகழ்போய் விளங்கும் மிரும்பைதனுள்
மஞ்சிலோங்கும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளமே.

5. பூசுமாசில் பொடியான் விடையான் பொருப்பான்மகள்
கூசவானை யுரித்தபெரு மான்குறை வெண்மதி
ஈசனெங்க ளிறைவன் னிடம்போ லிரும்பைதனுள்
மாசிலோர்கண் மலர்கொண் டணிகின்ற மாகாளமே.

6. குறைவதாய குளிர்திங்கள் சூடிக் குனித்தான்வினை
பறைவதாக்கும் பரமன் பகவன் பரந்தசடை
இறைவனெங்கள் பெருமானிடம்போ லிரும்பைதனுள்
மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே.

7. பொங்குசெங்கண் ணரவும் மதியும் புரிபுன்சடைத்
தங்கவைத்த பெருமானென நின்றவர் தாழ்விடம்
எங்குமிச்சை யமர்ந்தா னிடம்போ லிரும்பைதனுள்
மங்குரேயும் பொழில்சூழ்ந் தழகாய மாகாளமே.

8. நட்டத்தோடு நரியாடு கானத்தெரி யாடுவான்
அட்டமூர்த்தி யழல்போ லுருவன் னழகாகவே
இட்டமாக விருக்கும் மிடம்போ லிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கு மாகாளமே.

9. அட்டகாலன் றனைவவ் வினானவ் வரக்கன்முடி
எட்டுமற்றும் மிருபத்திரண் டும்மிற வூன்றினான்
இட்டமாக விருப்பா னவன்போ லிரும்பைதனுள்
மட்டுவார்ந்த பொழில்சூழ்ந் தெழிலாரு மாகாளமே.

10. அரவமார்த்தன் றனலங்கை யேந்தி யடியும்முடி
பிரமன்மாலும் மறியாமை நின்ற பெரியோனிடம்
குரவமாரும் பொழிற்குயில்கள் சேரும் மிரும்பை
தனுள்
மருவிவானோர் மறையோர் தொழுகின்ற மாகாளமே.

11. எந்தைபெம்மா னிடமெழில் கொள்சோலை
யிரும்பைதனுள்
மந்தமாய பொழில்சூழ்ந் தழகாரு மாகாளத்தில்
அந்தமில்லா வனலாடு வானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாட வல்லார்பழி போகுமே.

XXVI. திருவக்கரை

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. *கறையணி மாமிடற்றான் கரிகாடரங் காவுடையான்*
பிறையணி கொன்றையினா னொருபாகமும் பெண்
ணமர்ந்தான்
மறையவன் றன்றலையிற் பலிகொள்பவன் வக்கரையில்
உறைபவ னெங்கள்பிரா னொலியார்கழ லுள்குதுமே.

2. *பாய்தவன் காலனைமுன் பணைத்தோளியொர் பாகமதா*
வேய்ந்தவ னெண்ணிறந்தவ் விமையோர்க டொழு
திறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்களெரி செய்தவன் வக்கரையில்
தேய்ந்திள வெண்பிறைசேர் சடையானடி
செப்புதுமே.

3. *சந்திர சேகரனே யருளாயென்று தண்விசும்பில்*
இந்திர னும்முதலா விமையோர்க டொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் மனலாய்விழ வோரம்பினால்
மந்தரமேருவில்லா வளைத்தானிடம் வக்கரையே.

4. *நெய்யணி சூலமொடு நிறை வெண்மழு வும்மரவும்*
கையணி கொள்கையினன் கனன்மேவிய வாடலினன்
மெய்யணி வெண்பொடியான் விரிகோவண வாடை
யின்மேல்
மையணி மாமிடற்று னுறையும்மிடம் வக்கரையே.

5. ஏனவெண் கொம்பினொடும் மிளவாமையும் பூண்டுகந்து
கூனிள வெண்பிறையுங் குளிர்மத்தமுஞ் சூடிநல்ல
மானன மென்விழியா ளொடும் வக்கரை மேவியவன்
தானவர் முப்புரங்க ளெரிசெய்த தலைமகனே.

6. கார்மலி கொன்றையொடுங் கதிர் மத்தமும் வாளரவும்
நீர்மலி யுஞ்சடைமே னிரம் பாமதி சூடிநல்ல
வார்மலி மென்முலையா ளொடும் வக்கரை மேவியவன்
பார்மலி வெண்டலையிற் பலிகொண்டுழல் பான்மையனே.

7. கானண வும்மறியா னொரு கையதோர் கைமழுவாள்
தேனண வுங்குழலா ளுமை சேர்திரு மேனியினன்
வானண வும்பொழில்சூழ் திருவக்கரை மேவியவன்
ஊனண வுந்தலையிற் பலி கொண்டுழ லுத்தமனே.

8. இலங்கையர் மன்னனாகி யெழில் பெற்றவி ராவணனைக்
கலங்கவொர் கால்விரலாற் கதிர் பொன்முடி பத்தலற
நலங்கெழு சிந்தையனா யருள் பெற்றலு நன்களித்த
வலங்கெழு மூவிலைவே லுடையானிடம் வக்கரையே.

9. காமனை யீடழித்திட் டவன் காதலி சென்றிரப்பச்
சேமமே யுன்றனக்கென் றருள்செய்தவன் றேவர் பிரான்
சாமவெண் டாமரைமே லயனுந்தர ணியளந்த
வாமன னும்மறியா வகை யானிடம் வக்கரையே.

10. மூடிய சீவரத்தர் முதிர் பிண்டிய ரென்றிவர்கள்
தேடிய தேவர்தம்மா லிறைஞ் சப்படுந் தேவர்
பிரான்
பாடிய நான்மறையன் பலிக் கென்றுபல் வீதிதொறும்
வாடிய வெண்டலைகொண் டுழல்வானிடம் வக்கரையே.

11. தண்புன லும்மரவுஞ் சடை மேலுடையான் பிறை
தோய்
வண்பொழில் சூழ்ந்தழகா ரிறைவன்னுறை
வக்கரையைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ்ஞான சம்பந்தன்
சொன்ன
பண்புனை பாடல் வல்லாரவர் தம்வினை பற்றறுமே.

XXVII. திருஅதிகை வீரட்டானம் 1.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

1. குண்டைக் குறட் பூதங் குழும வனலேந்திக்
கெண்டைப் பிறழ் தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா னாடும்வீரட் டானத்தே.

[குழும=கூட. தொடை=மாலை.]

2. அரும்புங் குரும்பையு மலைத்தமென் கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டுடன்கை யனல்வீசிச்
சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பு மதிகையு ளாடும்வீரட் டானத்தே.

[சுரும்பு=வண்டு.]

3. ஆட லழனாக மரைக்கிட் டசைத்தாடப்
பாடன் மறைவல்லான் படுதம் பலிபெய்வான்
மாட முகட்டின்மேன் மதிதோ யதிகையுள்
வேடம் பலவல்லா னாடும்வீரட் டானத்தே.

4. எண்ணா ரெயிலெய்தா னிறைவ னனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரம னதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே.

[எயில்=மதிள்]

5. கரிபுன் புறமாய கழிந்தா ரிடுகாட்டில்
திருநின் றொருகையாற் றிருவா மதிகையுள்
எரியேந் தியபெருமா னெரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே.

6. துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாய லுமையோ டிசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும் வீரட் டானத்தே.

[அன = அன்ன, போன்ற;]

7. பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடைசூழப் புலித்தோ லுடையாகக்
கீத முமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வனின் றாடும்வீரட் டானத்தே.

[பரமன் = மால். பரமேட்டி = பிரமன்]

8. கல்லார் வரையரக்கன் றடந்தோள் கவின்வாட
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் டலைசூடி
வில்லா லெயிலெய்தா னாடும்வீரட் டானத்தே.

[கவின் = அழகு. ஒல்லை = விரைவு.]

9. நெடியா னான்முகனு நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பானைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் மதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும் வீரட்டானத்தே.

[கடி = மணம்.]

10. அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடனேந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வா துமையோ டுடனாகி
விரைதோ யலர்தாரா னுடும்வீரட் டானத்தே.

[பிண்டி = அசோகமரம்.]

11. ஞாழல் கமழ்காழி யுண்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே.

[ஞாழல் = குங்குமமரம், கோங்குமரம்.]

XXVII. திருஅதிகை வீரட்டானம் 2.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

பண்—கொல்லி.

1. கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

[கூற்று=இயமன்.]

2. நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தே
னினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
வயிற் றோடுதுடக் கிமுடக் கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவ தனை
நணுகா மற்றுரந் துகரந் துமிடற்
றஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

[கரந்து=மறைத்து]

3. பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
சுடுகின் றதுசூலை தவிர்த் தருளீர்

பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூச வல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.
[பாற்ற=போக்க. பெற்றம்=எருது.]

4. முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின்றது சூலைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.
[நலிந்து=வருத்தி.]

5 காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர் கண்டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புக நூக்கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறை யொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.
[கயம்=குளம். நூக்கி=தள்ளி.]

6. சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்

உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள்ளுறு சூலை தவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

[உலந்தார்=செத்தார்.]

7. உயர்ந்தேன் மனைவாழ்க்கையு மொண்பொருளு
மொருவர் தலைகாவலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூலை தவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற்றி னகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

8. வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம்மன மொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையாரு மில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

9. பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்

என்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

[மிளிர் = பிரகாசிப்பது.]

10. போர்த்தா யங்கொ ரானையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமாட வல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கி
ழடர்த்திட் டருள்செய்த வது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்து மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

[புறங்காடு = மயானம். வரை = மலை.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 3.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

பண்—காந்தாரம்.

1. சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு
மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லையஞ்ச வருவதுமில்லை.

[உரிவை=தோல்]

2. பூண்டதோர் கேழ லெயிறும்
பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து
நிலாக்கதிர் போல்வெண் ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங்
கலந்தகட் டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலுமுடையா
ரொருவர் தமர் நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லையஞ்ச வருவதுமில்லை.

[கேழல்=திருமாலாகிய பன்றி. புள்ளி=பறவை.]

3. ஒத்த வடத்திள நாக
முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையு
முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமு மதிகைச்
சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன் றுமில்லை யஞ்ச வருவது மில்லை.

4. மடமான் மறிபொற் கலையு
மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரைய திண்டோளுங்
குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமா றழுவிய பாக
மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன் றுமில்லை யஞ்ச வருவது மில்லை.
[மழு=ஓராயுதம். மாறழுவிய=மால் தழுவிய]

5. பலபல காமத்த ராகிப்
பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங்
கணபதி என்னும் களிறும்
வலமேந் திரண்டு சுடரும்
வான் கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன் றுமில்லை யஞ்ச வருவது மில்லை.

6. கரந்தன கொள்ளி விளங்கும்
கறங்கு துடியின் முழக்கம்
புரந்த பதினெண் கணமும்
பயின் றறியாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள
ரறியப்ப டாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன் றுமில்லை யஞ்ச வருவது மில்லை.

[கறங்கு = ஒலிக்கும். துடி = உடுக்கை.]

7. கொலைவரி வேங்கை யதளுங்
குலவோ டிலங்கு பொற்றோடும்
விலைபெறு சங்கக் குழையும்
விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பு
மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன் றுமில்லை யஞ்ச வருவது மில்லை.

[அதள் = தோல்.]

8. ஆடல் புரிந்த நிலையு
மரையி லசைத்த வரவும்
பாடல் பயின்றபல் பூதம்
பல்லா யிரங்கொள் கருவி

நாடற் கரியதோர் கூத்து
நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா
ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

9. சூழு மரவத் துகிலுந்
துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச
வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும்
விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

[வேழம்=யானை.]

10. நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா
னொன்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

[ஒன்பதுமொன்று=பத்து.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 4.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

பண்—காந்தார பஞ்சமம்

1. முளைக்கதி ரிளம்பிறை மூழ்க வெள்ளநீர்
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மறிக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே.

[வெள்ளநீர்=கங்கை.]

2. ஏறின ரேறினை யேழை தன்னொரு
கூறினர் கூறினர் வேத மங்கமும்
ஆறின ராறிடு சடையர் பக்கமும்
கீறின வுடையினர் கெடில வாணரே.

[யேழை=உமாதேவி.]

3. விடந்திகழ் கெழுதரு மிடற்றர் வெள்ளைநீ
றுடம்பழ கெழுதுவர் முழுதும் வெண்ணிலாப்
படர்ந்தழ கெழுதரு சடையிற் பாய்புனல்
கிடந்தழ கெழுதிய கெடில வாணரே.

4. விழுமணி யயிலெயிற் றம்பு வெய்யதோர்
கொழுமணி நெடுவரை கொளுவிக் கோட்டினார்
செழுமணி மிடற்றினர் செய்ய வெய்யதோர்
கெழுமணி யரவினர் கெடில வாணரே.

5. குழுவினர் தொழுதெழு மடியர் மேல்வினை
தழுவின கழுவுவர் பவள மேனியர்
மழுவினர் மான்மறிக் கையர் மங்கையைச்
செழுவின யோகினர் கெடில வாணரே.

6. அங்கையி லனலெரி யேந்தி யாறெனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமு நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே.

[ஆறெனும் மங்கை = கங்கை.]

7. கழிந்தவர் தலைக்கல னேந்திக் காடுறைந்
தழிந்தவ ரொருவரென் றெள்க வாழ்பவர்
வழிந்திழி மதுகர மிழற்ற மந்திகள்
கிழிந்ததே னுகருங் கெடில வாணரே.

[மதுகரம் = வண்டு. மந்தி — பெண் குரங்கு.]

8. கிடந்தபாம் பருகுகண்ட ரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே.

[அரிவை — பெண். பேதுற = கலங்க, அஞ்ச.]

9. வெறியுறு விரிசடை புரள வீசியோர்
பொறியுறு புலியுரி யரைய தாகவும்
நெறியுறு குழலுமை பாக மாகவும்
கிறிபட வுழிதர்வர் கெடில வாணரே.
[வெறி=வாசனை. கிறி=பொய்.]

10. பூண்டதோ ரரக்கனைப் பொருவின் மால்வரைத்
தூண்டுதோ ளவைபட வடர்த்த தாளினார்
ஈண்டுநீர்க் கமலவாய் மோதி பாய்தரக்
கீண்டுதேன் சொரிதருங் கெடில வாணரே.
[கீண்டு=பிளந்து]

XXVII. திருவதிகை வீரட்டானம் 5.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

கோப்பளித்த திருநேரிசை

1. இரும்புகோப் பளித்தயானை யீருரி போர்த்தவீசன்
கரும்புகோப் பளித்தவின் சொற்காரிகை பாகமாகச்
சுரும்புகோப் பளித்தகங்கைத் துவலைநீர்
சடையிலேற்ற
அரும்புகோப் பளித்தசென்னி யதிகை வீரட்டனாரே.
[காரிகை=பெண். துவலை=திவலை.]

2. கொம்புகோப் பளித்ததிங்கட் கோணல்வெண்
பிறையுஞ்சூடி
வம்புகோப் பளித்தகொன்றை வளர்சடை
மேலும் வைத்துச்
செம்புகோப் பளித்தமூன்று மதிலுடன் சுருங்க
வாங்கி
அம்புகோப் பளிக்கவெய்தா ரதிகை வீரட்டனாரே.
[வம்பு=வாசனை.]

3. விடையுங்கோப் பளித்தபாதம் விண்ணவர்
பரவியேத்தச்
சடையுங்கோப் பளித்ததிங்கட் சாந்தம்வெண்
ணீறுபூசி
உடையுங்கோப் பளித்தநாக முள்குவா ருள்ளத்
தென்றும்
அடையுங்கோப் பளித்தசீரா ரதிகை வீரட்டனாரே.
[உள்குவார்=உருகுவார்.]

4. கறையுங்கொப் பளித்தகண்டர் காமவே ளுருவமங்க
இறையுங்கொப் பளித்தகண்ணா ரேத்துவா ரிடர்க
ளீர்ப்பார்
மறையுங்கொப் பளித்தநாவர் வண்டுண்டு பாடுங்
கொன்றை
அறையுங்கொப் பளித்தசென்னி யதிகை வீரட்டனாரே.

[கறை=விஷக்கறை. காமவேள்=மன்மதன். அறை=தேனறை]

5. நீறுகொப் பளித்தமார்பர் நிழறிகழ் மழுவொன்
றேந்திக்
கூறுகொப் பளித்த கோதைக் கோல்வளை மாதோர்
பாகம்
ஏறுகொப் பளித்தபாத மிமையவர் பரவியேத்த
ஆறுகொப் பளித்தசென்னி யதிகை வீரட்டனாரே.

[கோல்=வளைந்த]

6. வணங்குகொப் பளித்தபாதம் வானவர் பரவியேத்தப்
பிணங்குகொப் பளித்தசென்னிச் சடையுடைப்
பெருமை யண்ணல்
சுணங்குகொப் பளித்தகொங்கைச் சுரிகுழல் பாகமாக
அணங்குகொப் பளித்தமேனி யதிகைவீ ரட்டனாரே.

[சுணங்கு=தேமல்.]

7. சூலங்கொப் பளித்தகையர் சுடர்விடு மழுவாள் வீசி
நூலுங்கொப் பளித்தமார்பி னுண்பொறி யரவஞ்
சேர்த்தி

மாலுங்கொப் பளித்தபாகர் வண்டுபண பாடுங் கொன்றை
ஆலங்கொப் பளித்தகண்டத் ததிகைவீ ரட்டனாரே.

[மால்=திருமால்]

8. நாகங்கொப் பளித்தகையர் நான்மறை யாயபாடி
மேகங்கொப் பளித்ததிங்கள் விரிசடை மேலும் வைத்துப்
பாகங்கொப் பளித்தமாதர் பண்ணுடன் பாடியாட
ஆகங்கொப் பளித்ததோளா ரதிகைவீ ரட்டனாரே.

9. பரவுகொப் பளித்தபாடல் பண்ணுடன் பத்தரேத்த
விரவுகொப் பளித்தகங்கை விரிசடை மேவவைத்து
இரவுகொப் பளித்தகண்ட ரேத்துவா ரிடர்கடீர்ப்பார்
அரவுகொப் பளித்தகைய ரதிகைவீ ரட்டனாரே.

[இரவு=இருள்]

10. தொண்டைகொப் பளித்தசெவ்வாய்த் துடியிடைப் பரவையல்குற்
கொண்டைகொப் பளித்தகோதைக் கோல்வளை பாகமாக
வண்டுகொப் பளித்ததீந்தேன் வரிக்கயல் பருகிமாந்தக்
கெண்டைகொப் பளித்ததெண்ணீர்க் கெடிலவீ ரட்டனாரே.

[தொண்டை=ஓர் சிவந்தகனி. கயல்=ஓர்வகை மீன்.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 6.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருநேரிசை

1. வெண்ணிலா மதியந்தன்னை விரிசடை மேவவைத்து
உண்ணிலாப் புகுந்துநின்றங் குணர்வினுக் குணரக்கூறி
விண்ணிலார் மீயச்சூரார் வேண்டுவார் வேண்டு
வார்க்கே
அண்ணியார் பெரிதுஞ்சேயா ரதிகைவீ ரட்டனாரே.

2. பாடினார் மறைகளோன்கும் பாயிருள்புகுந் தென்
னுள்ளம்
கூடினார் கூடலால வாயிலார் நல்லகொன்றை
சூடினார் சூடன்மேவிச் சூழ்சுடர் சுடலைவெண்ணீர்
ஆடினா ராடன்மேவி யதிகைவீ ரட்டனாரே.

[கூடலாலவாய் = தென்மதுரை.]

3. ஊனையே கழிக்கவேண்டி லுணர்மின்க ளுள்ளத்
துள்ளே
தேனைய மலர்கள்கொண்டு சிந்தையுட் சிந்திக்கின்ற
ஏனைய பலவுமாகி யிமையவ ரேத்தநின்று
ஆனையி னுரிவைபோர்த்தா ரதிகைவீ ரட்டனாரே,

4. துருத்தியாங் குரம்பைதன்னிற் றொண்ணூற்றங்
கறுவர்நின்று
விருத்திதான் றருகவென்று வேதனை பலவுஞ்செய்ய

வருத்தியால் வல்லவாறு வந்துவந் தடையநின்ற
அருத்தியார்க் கன்பர்போலு மதிகைவீ ரட்டனாரே.

[குரம்பை=வீடு. தொண்ணூற்றங்க றுவர்=தொண்ணூற்றாறு தத்துவம். அருத்தியார்=பக்தர்.]

5. பத்தியா லேத்திநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்
துத்தியைந் தலையநாகஞ் சூழ்சடை முடிமேல்வைத்து
உத்தர மலையர்பாவை யுமையவ ளடுங்கவன்று
அத்தியி னுரிவைபோர்த்தா ரதிகைவீ ரட்டனாரே.

[துத்தி=புள்ளி. அத்தி=யானை.]

6. வரிமுரி பாடியென்றும் வல்லவா றடைந்துநெஞ்சே
கரியுரி மூடவல்ல கடவுளைக் காலத்தாலே
சுரிபுரி விரிகுழலாள் துடியிடைப் பரவையல்குல்
அரிவையோர் பாகர்போலு மதிகைவீ ரட்டனாரே.

[கரி=யானை. அரிவை=பெண்.]

7. நீதியா னினைசெய்நெஞ்சே நிமலனை நித்தமாகப்
பாதியா முமைதன்னோடும் பாகமாய் நின்றஎந்தை
சோதியாய்ச் சுடர்விளக்காய்ச் சுண்ணவெண் ணீறதாடி
ஆதியு மீறுமானா ரதிகைவீ ரட்டனாரே.

[சுண்ண=வெண்மை.]

8. எல்லியும் பகலுமெல்லாந் துஞ்சுவேற் கொருவர்வந்து
புல்லிய மனத்துக்கோயில் புக்கனர் காமனென்னும்
வில்லியைங் கணையினானை வெந்துக நோக்கியிட்டார்
அல்லியம் பழனவேலி யதிகைவீ ரட்டனாரே.

[எல்லி=இரவு. உக=வீழ.]

9. ஒன்றவே யுணர்திராகி லோங்காரத் தொருவனாகும்
வென்றவைம் புலன்கடம்மை விலக்குதற் குரியீ
ரெல்லாம்
நன்றவ னாரண னு நான்முகனடிக் காண்குற்று
அன்றவர்க் கரியர்போலு மதிகைவீ ரட்டனாரே.

[புலன்கடம்மை = புலன்களை.]

10. தடக்கையா லெடுத்துவைத்துத் தடவரை குலுங்க
வார்த்துக்
கிடக்கையா லிடர்களோங்கக் கிளர்மணி முடிகள்சாய
முடக்கினார் திருவிரலான் முருகமர் கோதைபாகத்
தடக்கினா ரென்னையாளு மதிகைவீ ரட்டனாரே.

[முருகு = அழகு, இளமை.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 7.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருநேரிசை

1. நம்பனே யெங்கள்கோவே நாதனே யாதிமூர்த்தி
பங்கனே பரமயோகி யென்றென்றே பரவிநாளும்
செம்பொனே பவளக்குன்றே திகழ்மலர்ப் பாதங்
காண்பான்
அன்பனே யலந்துபோனே னதிகைவீ ரட்டனீரே.

2. பொய்யினுன் மிடைந்தபோர்வை புரைபுரை யழுகிவீழ
மெய்யனாய் வாழமாட்டேன் வேண்டிற்றொன்
றைவர்வேண்டார்
செய்யதா மரைகளன்ன சேவடி யிரண்டுங் காண்பான்
ஐயநா னலந்துபோனே னதிகைவீ ரட்டனீரே.

[புரை=புண்.]

3. நீதியால் வாழமாட்டே னித்தலுந் தூயனல்லேன்
ஓதியு முணரமாட்டே னுன்னையுள் வைக்கமாட்டேன்
சோதியே சுடரேயுன்றன் றாமலர்ப் பாதங்காண்பான்
ஆதியே யலந்துபோனே னதிகைவீ ரட்டனீரே.

4. தெருளுமா தெருளமாட்டே றீவினைச் சுற்றமென்னும்
பொருளுளே யழுந்திநாளும் போவதோர் நெறியுங்
காணேன்

இருளுமா மணிகண்டாநின் னிணையடி யிரண்டுங்
காண்பான்
அருளுமா றருளவேண்டு மதிகைவீ ரட்டனீரே.

[தெருள=தெளிவடைய.]

5. அஞ்சினா லியற்றப்பட்ட வாக்கைபெற் றதனுள்
வாழும்
அஞ்சினா லடர்க்கப்பட்டிங் குழிதரு மாதனேனை
அஞ்சினு லுய்க்கும்வண்ணங் காட்டினுய்க் கச்சந்
தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்தசென்னி யதிகைவீ ரட்டனாரே.

[அஞ்சின்=பஞ்சபூதம். மாதன்=பேதை.]

6. உறுகயி றூசல்போல வொன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவுநெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய்பாதத்
தறுகயி றூசலானே னதிகைவீ ரட்டனீரே.

[உறு=வலிய. புல்கு=சேர்ந்த.]

7. கழித்திலேன் காமவெந்நோய் காதன்மை யென்னும்
பாசம்
ஒழித்திலே னூன்கணுக்கி புணர்வெனு மிமை
திறந்து
விழித்திலேன் வெளிறுதோன்ற வினையெனுஞ்
சரக்குக் கொண்டேன்
அழித்திலே னயர்த்துப்போனே னதிகைவீ
ரட்டனீரே.

[வெளிறு=அறியாமை. அயர்த்து=இளைத்து]

8. மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி
ஒன்றினு லுணரமாட்டே னுன்னையுள் வைக்க
மாட்டேன்
கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே
அன்றினு னலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே.

[கன்றிய=கோத்த.]

9. பிணிவிடா வாக்கைபெற்றேன் பெற்றமொன்
றேறுவானே
பணிவிடா விடும்பையென்னும் பாசனத் தழுந்து
கின்றேன்
துணிவிலேன் றாயனல்லேன் றாமலர்ப் பாதங்
காண்பான்
அணியனு யறியமாட்டே னதிகைவீ ரட்டனீரே.

[பெற்ற=எருது. பாசனத்து=பாண்டம், சுற்றம்.]

10. திருவினுள் கொழுநனுருந் திசைமுக முடையகோவும்
இருவரு மெழுந்தும் வீழ்ந்து மிணையடி காணமாட்டா
ஒருவனே யெம்பிரானே யுன்றிருப் பாதங்காண்பான்
அருவனே யருளவேண்டும் அதிகைவீ ரட்டனீரே.

[திருவினுள்=இலக்குமி. திசைமுகமுடையகோவும்=பிரமன்.
அருவன்=உருவிலான்.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 8.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருநேரிசை

1. மடக்கினார் புலியின்றோலை மாமணி நாகங்கச்சா
முடக்கினார் முகிழ்வெண்டிங்கள் மொய்சடைக்
கற்றை தன்மேல்
தொடக்கினார் தொண்டைச்செவ்வாய்த் துடியிடை
பரவையல்குல்
அடக்கினார் கெடிலவேலி யதிகைவீ ரட்டனாரே.

தொடக்கினார்=சேர்த்தார். தொண்டை=ஆதொண்டைக் கனி

2. சூடினார் கங்கையாளைச் சூடிய துழனிகேட்டங்
கூடினா ணங்கையாளு மூடலை யொழிக்கவேண்டிப்
பாடினார் சாமவேதம் பாடிய பாணியாலே
ஆடினார் கெடிலவேலி யதிகைவீ ரட்டனாரே.

துழனி=ஒலி. பாணி—கூத்து.

3. கொம்பினார் குழைத்தவேனற் கோமகன் கோலநீர்மை
நம்பினார் காணலாகா வகையதோர் நடலைசெய்தார்
வெம்பினார் மதில்கண்மூன்றும் வில்லிடை யெரித்து
வீழ்த்த
அம்பினார் கெடிலவேலி யதிகைவீ ரட்டனாரே.

நடலை=துன்பம்.

4. மறிபடக் கிடந்தகையர் வளரிள மங்கைபாகம்
செறிபடக் கிடந்தசெக்கர்ச் செழுமதிக் கொழுந்துவீடிப்
பொறிபடக் கிடந்தநாகம் புகையுமிழ்ந் தழலவீக்கிக்
கிறிபட நடப்பர்போலுங் கெடிலவீ ரட்டனாரே.

மறி=மான். பொறி—புள்ளி.

5. நரிவரால் கவ்வச்சென்று நற்றசை யிழந்ததொத்த
தெரிவரான் மால்கொள்சிந்தை தீர்ப்பதோர் சிந்தை
செய்வார்
வரிவரா லுகளுந்தெண்ணீர்க் கழனிவீழ் பழனவேலி
அரிவரால் வயல்கள்வீழ்ந்த வதிகைவீ ரட்டனாரே.

வரால்=மீன்.

6. புள்ளலைத் துண்டவோட்டி லுண்டுபோய்ப் பலாசங்
கொம்பின்
சுள்ளலைச் சுடலைவெண்ணீ றணிந்தவர் மணிவெள்
ளேற்றுத்
துள்ளலைப் பாகன்றன்னைத் தொடர்ந்திங்கே கிடக்
கின்றேனை
அள்ளலைக் கடப்பித்தாளு மதிகைவீ ரட்டனாரே.

புள்=பருந்து. அள்ளல்—சேறு, நரகம்.

7. நீறிட்ட நுதலர்வேலை நீலஞ்சேர் கண்டர்மாதர்
கூறிட்ட மெய்யராகிக் கூறினா ராறுநான்கும்
கீறிட்ட திங்கள்வீடிக் கிளர்தரு சடையினுள்ளால்
ஆறிட்டு முடிப்பர்போலு மதிகைவீ ரட்டனாரே.

நுதலர்=நெற்றியர்.

8. காணிலார் கருத்தில்வாரார் திருத்தலார் பொருத்த
லாகார்
ஏணிலா ரிறப்புமில்லார் பிறப்பிலார் துறக்கலாகார்
நாணிலா ரைவரோடு மிட்டெனை விரவிவைத்தார்
ஆணலார் பெண்ணுமல்லா ரதிகைவீ ரட்டனாரே.

துறக்க=நீக்க.

10. தீர்த்தமா மலையைநோக்கிச் செருவலி யரக்கன்சென்று
பேர்த்தலும் பேதையஞ்சப் பெருவிர லதனையூன்றிச்
சீர்த்தமா முடிகள்பத்துஞ் சிதறுவித் தவனையன்று
ஆர்த்தவா யலறவைத்தா ரதிகைவீ ரட்டனாரே.

செரு=போரிடும்.

XXVII. திருவதிகை வீரட்டானம் 9.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருநேரிசை

1. முன்பெலா மிளையகால மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண விருமிநாளுங் கருத்தழிந் தருத்தமின்றிப்
பின்பக லுணங்கலட்டும் பேதைமார் போன்றே
னுள்ளம்
அன்பனாய் வாழமாட்டே னதிகைவீ ரட்டனீரே.

[உணங்கல்=வருந்தல்]

2. கறைப்பெருங் கண்டத்தானே காய்கதிர் நமனையஞ்சி
நிறைப்பெருங் கடலைக்கண்டே னீள்வரை யுச்சி
கண்டேன்
பிறைப்பெருஞ் சென்னியானே பிஞ்ஞகா விவை
யனைத்தும்
அறைப்பதோ ருபாயங்காணே னதிகைவீ ரட்டனீரே.

[காய்=கோபிக்கும்]

3. நாதனா ரென்னநாளு நடுங்கின ராகித்தங்கள்
ஏதங்க ளறியமாட்டா ரிணையடி தொழுதோமென்பார்
ஆதனா னவனென்றெள்கி யதிகைவீ ரட்டனேநின்
பாதநான் பரவாதுய்க்கும் பழவினைப் பரிசிலேனே.

[ஏதம்=பிழைபாடு. ஆதனல்=அறிவிலி.]

4. சுடலைச்சேர் சுண்ணமெய்யர் சுரும்புண விரிந்த கொன்றைப்
படலைசே ரலங்கன்மார்பர் பழனஞ்சேர் கழனித் தெங்கின்
மடலைநீர் கிழியவோடி யதனிடை மணிகள்சிந்தும்
கெடிலவீ ரட்டமேய கிளர்சடை முடியனாரே.

[படலை=முடிமாலை. அலங்கன்=மாலை. கிளர்=விளங்கும்.]

5. மந்திர முள்ளதாக மறிகட லெழுநெய்யாக
இந்திரன் வேள்வித்தீயி லெழுந்ததோர் கொழுந்தின் வண்ணம்
சிந்திர மாகநோக்கித் தெருட்டுவார் தெருட்டுவந்து
கந்திர முரலுஞ்சோலைக் கானலங் கெடிலத்தாரே.

10. மைஞ்ஞல மனையகண்ணாள் பங்கன்மா மலையையோடி
மெய்ஞ்ஞரம் புதிரம்பில்க விசைதணிந் தரக்கன் வீழ்ந்து
கைஞ்ஞரம் பெழுவிக்கொண்டு காதலா லினிது சொன்ன
இன்னரங் கேட்டுகந்தார் கெடிலவீ ரட்டனாரே.

[பில்க=சிந்த. உகந்தார்=விரும்பினார்.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 10.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவிருத்தம்

1. மாசிலொள் வாள்போன் மறியுமணி நீர்த்திரைத் தொகுதி
ஊசலை யாடியங்கொண் சிறையன்ன முறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசுங்கெடில வடகரைத் தேயத்தை வீரட்டமே.

2. பைங்காற் றவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுகர்
அங்காற் குவளைமே லாவியு யிர்ப்ப வருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ்செறி கெடிலக் கரைத்தே
வெங்காற் குருசிலை வீரனருள் வைத்த வீரட்டமே.

[குருகு=ஒரு பறவை.]

3. அம்மலர்க் கண்ணிய ரஞ்சனஞ் செந்துவர் வாயிளையார்
வெம்முலைச் சாந்தம் விலைபெறு மாலையெடுத் தவர்கள்
தம்மருங் குற்கிரங் கார்தடந் தோண்மெலியக் குடைவார்
விம்மு புனற்கெடிலக் கரைத்தே யெந்தை வீரட்டமே.

[துவர்=சிவப்பு, மாதர்.]

4. மீனுடைத் தண்புனல் வீரட்டரே நும்மை வேண்டுகின்ற
தியானுடைச் சில்குறை யொன்றுள தானறுந் தண்ணெருக்கின்

தேனுடைக் கொன்றைச் சடையுடைக் கங்கைத் திரைதவழும்
கூனுடைத் திங்கட் குழவியெப் போதுங் குறிகொண்மினே.

[எருக்கு=ஒரு மலர். கூனு=வளைவு.]

5. ஆரட்ட தேனு மிரந்துண் டகமக வன்றிரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி நீர்ப்பரவைச்
வீரட்ட வேலவன் ருதையைச் வீழ்வய லாரதிகை
வீரட்டத் தானை விரும்பாவரும் பாவ வேதனையே.

[ஆர்=யார். அட்ட=சமைத்த.]

6. படர்பொற் சடையும் பகுவா யரவும் பனிமதியும்
சுடலைப்பொடியு மெல்லாமுள வேயவர் தூய தெண்ணீர்க்
கெடிலக் கரைத்திரு வீரட்ட ராவர்கெட் டேனடைந்தார்
நடலைக்கு நற்றுணை யாகுங்கண் டாவர் நாமங்களே.

[பகு=பிளந்த. நடலை=துன்பு.]

7. காளங் கடந்ததொர் கண்டத்த ராகிக் கண்ணார்கெடில
நாளங் கடிக்கொர் நகரமு மாதிற்கு நன்கிசைந்த
தாளங்கள் கொண்டுங் குழல்கொண்டுந் தாமங்ஙனே
வேடங்கள் கொண்டும் விசும்புசெல் வாரவர் வீரட்டரே.

[காளம்=விஷம்]

XXVII. திருவதிகை வீரட்டானம் 11.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை

1. கோணன் மாமதி சூடியோர் கோவணம்
நாணில் வாழ்க்கை நயந்தும் பயனிலை
பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்
காணி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

[நயந்து=விரும்பி, மேற்கொண்டும்.]

2. பண்ணி னைப்பவ ளத்திரள் மாமணி
அண்ண லையம ரர்தொழு மாதியைச்
சுண்ண வெண்பொடி யான்றிரு வீரட்டம
நண்ணி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

3. உற்ற வர்தம் முறுநோய் களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்கி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

[பிறங்கு=விளங்கும்.]

4. முற்றா வெண்மதி சூடு முதல்வனார்
செற்றார் வாழுந் திரிபுரந் தீயெழ
விற்றான் கொண்டெயி லெய்தவர் வீரட்டம்
கற்றா லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

[செற்றார்=பகைவர். வில்=வில்லை,]

5. பல்லா ரும்பல தேவர் பணிபவர்
நல்லா ருந்நயந் தேத்தப் படுபவன்
வில்லான் மூவெயி லெய்தவன் வீரட்டம்
கல்லே னாகிலென் கண்டுயில் கொள்ளுமே.

6. வண்டார் கொன்றையு மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ டரவமும்
விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

[மத்தம் = ஊமத்தமலர். கோலம் = அழகு. விண்டார் = விரோதிகள்.]

7. அரையார் கோவண வாடைய னாறெலாம்
திரையா ரொண்புனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்குவீ ரட்டன்பால்
கரையே னாகிலென் கண்டுயில் கொள்ளுமே.

[விரை = வாசனை.]

8. நீறுடைத் தடந் தோளுடை நின்மலன்
ஆறுடைப் புனல் பாய்கெடி லக்கரை
ஏறுடைக் கொடியான் றிரு வீரட்டம்
கூறி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

[நின்மலன் = குற்றமற்ற கடவுள். ஏறு = இடபம்.]

9. செங்கண் மால்விடை யேறிய செல்வனார்
பைங்க ணானையி னீருரி போர்த்தவர்
அங்கண் ஞாலம தாகிய வீரட்டம்
கங்கு லாகவென் கண்டுயில் கொள்ளுமே.

[கங்குல் = இரவு.]

10. பூணு ணாரம் பொருந்த வுடையவர்
நாணு கவ்வரை வில்லிடை யம்பிஞல்
பேணூர் மும்மதி லெய்தவன் வீரட்டம்
காணே ணுகிலென் கண்டுயில் கொள்ளுமே.

[வரைவில் = மேருமலேயாகிய வில். பேணூர் = பகைவர்.]

11. வரையார்ந் தவயி ரத்திரண் மாணிக்கம்
திரையார்ந் தபுனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்கிய வீரட்டம்
உரையே ணுகிலென் கண்டுயில் கொள்ளுமே.

12. உலந்தார் வெண்டலே யுண்கல ஞகவே
வலந்தான் மிக்கவவ் வாளரக் கன்றனேச்
சிலம்பார் சேவடி யூன்றிஞன் வீரட்டம்
புலம்பே ணுகிலென் கண்டுயில் கொள்ளுமே.

[சிலம்பு = காலணி.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 12.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை.

1. எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்டல ரிடுமவர் வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாடி சேரு மவருக்கே.

[எட்டு = ஆசை, எண்வகை மலர்.]

2. நீளமா நினைந் தெண்மல ரிட்டவர்
கோள வல்வினை யுங்குறை விப்பரால்
வாள மாலிழி யுங்கெடி லக்கரை
வேளி சூழ்ந் தழகாய வீரட்டரே.

3. கள்ளி ஞண்மல ரோரிரு நான்குகொண்
டுள்கு வாரவர் வல்வினை யோட்டுவார்
தெள்ளு நீர்வயல் பாய்கெடி லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ ரட்டரே.

[கள் = தேன். மேனி = சரீரம்.]

4. பூங்கொத் தாயின மூன்றொ டோ ரைந்திட்டு
வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார்
வீங்கு தண்புனல் பாய்கெடி லக்கரை
வேங்கைத் தோலுடை யாடை வீரட்டரே.

[மூன்றொடோரைந்திட்டு—எட்டு.]

5. தேனப் போதுகண் மூன்றொடோ ரைந்துடன்
தானப் போதிடு வார்வினை தீர்ப்பவர்
மீனத் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேன லானை யுரித்தவீ ரட்டரே.

[போது=மலர்.]

6. ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட வகற்றுவார்
பாழித் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேழத் தின்னுரி போர்த்த வீரட்டரே.

[பாழி=வலிய. உரி—தோல்]

7. உமைசெய் நூல்வழி யொண்மல ரெட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி லக்கரை
விரைகள் சூழ்ந் தழகாய வீரட்டரே.

8. ஒலி வண்டறை யொண்மல ரெட்டினால்
காலை யேத்த வினையைக் கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி லச்கரை
வேலி சூழ்ந் தழகாய வீரட்டரே.

[ஆலி—நீரமுதம்.]

9. தாரித் துள்ளித் தடமல ரெட்டினல்
பாரித் தேத்தவல் லாவினை பாற்றுவார்
மூரித் தெண்டிரை பாய்கெடி லக்கரை
வேரிச் செஞ்சடை வேய்ந்த வீரட்டரே.

[பாற்றுவார்=நீக்குவார். மூரி=வலிமை.]

10. அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்
டட்ட மூர்த்திய னாதிதன் பாலனைந்
தட்டு மாறுசெய் கிற்ப வதிகைவீ
ரட்ட னாடி சேரு மவர்களே.

XXVII. திருவதிகை வீரட்டானம் 13.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருத்தாண்டகம்.

1. வெறிவிரவு கூவிளநற் றொங்கலானை
வீரட்டத் தானைவெள் ளேற்றினானைப்
பொறியரவி னானைப்புள் ளூர்தியானைப்
பொன்னிறத்தி னானைப் புகழ்தக்கானை
அறிதற்கரியசீ ரம்மான் றன்னை
யதியரைய மங்கை யமர்ந்தான் றன்னை
எறிகெடிலத் தானையிறை வன்றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

[வெறி = வாசனை. கூவிளம் = வில்வம். தொங்கல் = மாலை
பொறி = புள்ளி.

2. வெள்ளிக் குன்றன்ன விடையான் றன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் றன்னைப்
புள்ளிவரி நாகம் பூண்டான் றன்னைப்
பொன் பிதிர்ந்த தன்ன சடையான்றன்னை
வள்ளிவளைத் தோண் முதல்வன் றன்னை
வாரா வுலகருள வல்லான் றன்னை
எள்கவிடு பிச்சையேற் பான்றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

[வெள்ளிவளை = ஆபரணம், கங்கணம்.]

3. முந்தி யுலகம் படைத்தான் றன்னை
மூவா முதலாய மூர்த்தி தன்னைச்
சந்தவெண் டிங்களணிந் தான்றன்னைத்
தவநெறிகள் சாதிக்க வல்லான் றன்னைச்

சிந்தையிற் றீர்வினையைத் தேனைப்பாலைச்
செழுங்கெடில வீரட்ட மேவினானை
எந்தை பெருமானை யீசன் றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

4. மந்திரமு மறைப்பொருளு மானான் றன்னை
மதியமு ஞாயிறுங் காற்றும் தீயும்
அந்தரமு மலைகடலு மானான் றன்னை
யதியரைய மங்கை யமர்ந்தான் றன்னைக்
கந்தருவஞ் செய்திருவர் கழல்கை கூப்பிக்
கடிமலர்கள் பலதூவிக் காலைமாலை
இந்திரனும் வானவரும் தொழச் செல்வானை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

5. ஒருபிறப்பி லரனடியை யுணர்ந்துங் காணா
ருயர்கதிக்கு வழிதேடிப் போகமாட்டார்
வருபிறப் பொன்றுணராது மாசு பூசி
வழிகாணா தவர்போல்வார் மனத்தனாகி
அருபிறப்பை யறுப்பிக்க மதிகை யூரா
னம்மான் றனடியிணையே யணைந்து வாழா
திருபிறப்பும் வெறுவியரா யிருந்தார் சொற்கேட்
டேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

6. ஆறேற்க வல்லசடை யான்றன்னை
யஞ்சனம்போலு மிடற்றான் றன்னைக்
கூறேற்கக் கூறமர வல்லான் றன்னை
கோல்வளைக்கை மாதராள் பாகன்றன்னை

நீறேற்கப் பூசு மகலத்தானை
நின்மலன் றன்னை நிமலன் றன்னை
ஏறேற்க வேறுமா வல்லான் றன்னை
யேழையே னன்பண் டிகழ்ந்தவாறே.

[யஞ்சனம்=மை.]

7. குண்டாக்க னாயுழன்று கையி லுண்டு
குவிமுலையார் தம்முன்னே நாணமின்றி
உண்டியுகந் தமணே நின்றார் சொற்கேட்
டுடனாகி யழிதந்தே னுணர்வொன் றின்றி
வண்டுலவு கொன்றையங் கண்ணியானை
வானவர்க ளேத்தப் படுவான் றன்னை
எண்டிசைக்கு மூர்த்தியாய் நின்றான் றன்னை
யேழையே னன்பண் டிகழ்ந்தவாறே.

8. உறிமுடித்த குண்டிகை தங் கையிற் றூக்கி
யூத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக் கனாய்க்
கறிவிரவு நெய்சோறு கையி லுண்டு
கண்டார்க்குப் பொல்லாத காட்சி யானேன்
மறிதிரை நீர்ப் பவ்வநஞ் சுண்டான் றன்னை
மறித்தொருகால் வல்வினையே னினைக்க மாட்டேன்
எறிகெடில நாடார் பெருமான் றன்னை
யேழையே னன்பண் டிகழ்ந்தவாறே.

[பவ்வம்=கடல்.]

9. நிறைவார்ந்த நீர்மையாய் நின்றான் றன்னை
நெற்றிமேற் கண்ணொன் றுடையான் றன்னை
மறையானை மாசொன் றிலாதான் றன்னை
வானவர்மேன் மலரடியை வைத்தான் றன்னை

கறையானைக் காதார் குழையான் றன்னைக்
கட்டங்க மேந்திய கையினானை
இறையானை யெந்தை பெருமான் றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

10. தொல்லைவான் சூழ்வினைகள் சூழப்போந்து
தூற்றியே னாற்றியேன் சுடராய் நின்று
வல்லையே யிடர்தீர்த்திங் கடிமைகொண்ட
வானவர்க்குந் தானவர்க்கும் பெருமான் றன்னைக்
கொல்லைவாய்க் குருந்தொசித்துக் குழலூ தூதுங்
கோவலனு நான்முகனுங் கூடியெங்கும்
எல்லைகாண் பரியானை யெம்மான் றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

[குருந்து=ஓர் மரம். கோவலன்=கண்ணன்.]

11. முனைமறைக்கப் பட்டுநீ ராடாப் பெண்கண்
முறைமுறையா னந்தெய்வ மென்று தீண்டித்
தலைபறிக்குந் தன்மையர்க ளாகிநின்று
தவமே யென்றவஞ் செய்து தக்கதோரார்
மலைமறிக்கச் சென்ற விலங்கைக் கோனை
மதனழியச் செற்றசே வடியினானை
இலைமறித்த கொன்றையந் தாரான் றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்தவாறே.

XXVII. திருவதிகை வீரட்டானம் 14.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

அடையாளத் திருத்தாண்டகம்.

1. சந்திரனை மாகங்கை திரையான் மோதச்
சடாமகுடத் திருத்துமே சாமவேத
கந்தருவம் விரும்புமே கபாலமேந்து
கையனே மெய்யனே கனகமேனிப்
பந்தணவு மெல்விரலாள் பாகனுமே
பசுவேறும் பரமயோகி யாமே
ஐந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.

[கனகம்=பொன். பசு=ரிஷபம். மாசுணம்=பாம்பு.]

2. ஏறேறி யேழுலகு முழிதர்வானை
யிமையவர்க டொழுதேத்த விருக்கின்றானை
பாறேறு படுதலையிற் பலிகொள்வானை
படவரவந் தடமார்பிற் பயில்வித்தானை
நீறேறு செழும்பவளக் குன்றொப்பானை
நெற்றிமே லொற்றைக்கண் ணிறைவித்தானை
ஆறேறு சடைமுடிமேற் பிறைவைத்தானை
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.

[முழிதல்=திரிதல்.]

3. முண்டத்திற் பொலிந்திலங்கு மேனியானை
முதலாகி நடுவாகி முடிவானானை
கண்டத்தில் வெண்மருப்பின் காறையானை
கதநாகங் கொண்டாடுங் காட்சியானை

பிண்டத்தி னியற்கைக்கோர் பெற்றியானே
பெருநிலநீர் தீவளியா காசமாகி
அண்டத்துக் கப்பாலா யிப்பாலானே
யவனாகி லதிகை வீரட்டனாமே.
[காறை=மாலை. கதம்=கோபம்.]

4. செய்யனே கரியனே கண்டம் பைங்கண்
வெள்ளெயிற் றாடரவனே வினைகள் போக
வெய்யனே தண்கொன்றை மிலைத்த சென்னிச்
சடையனே விளங்கு மழுச் சூலமேந்தும்
கையனே காலங்கண் மூன்றானானே
கருப்புவிற் றனிக்கொடும்பூண் காமற் காய்ந்த
ஐயனே பருந்துயர்ந்த வானேற்றானே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.
[மிலைத்த=சேர்த்த.]

5. பாடுமே யொழியாமே நால்வேதமும்
படர்சடைமே லொளிதிகழ்ப் பனிவெண் டிங்கள்
சூடுமே யரைதிகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவா யுமையோர் பாகம்
கூடுமே குடமுழவம் வீணை தாளங்
குறுநடைய சிறுபூத முழக்க மாக்கூத்
தாடுமே யந்தடக்கை யனலேந் தும்மே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.
[திகழ=விளங்க. தொண்டை=ஓர் கனி]

6. ஒழித்திடுமே யுள்குவா ருள்ளத் துள்ள
வுறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால்
விழித்திடுமே காமனையும் பொடியாய் வீழ
வெள்ளப் புனற்கங்கை செஞ்சடைமேல்
இழித்திடுமே யேழுலகுந் தானாகும்மே
யியங்குந் திரிபுரங்க ளோரம் பினால்
அழித்திடுமே யாதிமா தவத்து ளானே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.

7. குழலோடு கொக்கரை கைத்தாள மொந்தை
குறட்பூத முன்பாடத் தானாடும்மே
கழலாடு திருவிரலாற் கரணஞ் செய்து
கனலின்கட் டிருவுருவந் தான் காட்டும்மே
எழிலாருந் தோள்வீசி நட மாடும்மே
யீமப் புறங்காட் டிலேமந் தோறும்
அழலாடு மேயட்ட மூர்த்தி யாமே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.

[கொக்கரை = சங்கு. ஏமம் = இரவு.]

8. மாலாகி மதமிக்க களிறு தன்னை
வதைசெய்து மற்றதனி னுரிவை கொண்டு
மேலாலுங் கீழாலுந் தோன்றா வண்ணம்
வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே
கோலர்லம் படவரை நட்டரவு சுற்றிக்
குரைகடலைத் திரையலறக் கடைந்து கொண்ட
ஆலால முண்டிருண்ட கண்டத் தானே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.

9. செம்பொனாற் செய்தழகு பெய்தாற் போலுஞ்
செஞ்சடை யெம் பெருமானே தெய்வ நாறும்
வம்பினாண் மலர்கூந்த லுமையாள் காதன்
மணவாளனே வலங்கை மழுவாளனே
நம்பனே நான்மறைக ளொழுகின் றானே
நடுங்காதார் புரமூன்று நடுங்கச் செற்ற
அம்பனே யண்டகோ சாத்துளானே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.
[அம்பனே = தாயே.]

10. எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்க
ளிளநிலாத் திகழ்கின்ற வளர்ச டையனே
கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி
கொங்கையிணை யமர்பொருது கோலங்கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூ லுண்டே
சாந்தமொடு சந்தனத்தி னளறு தங்கி
அழுந்தியசெந் திருவுருவில் வெண்ணீற் றானே
யவனாகி லதிகைவீ ரட்டனாமே.
[அளறு = கலவைச்சேறு.]

11. நெடியானு நான்முகனு நேடிக் காணா
நீண்டானே நேரொருவ ரில்லாதானே
கொடியேறு கோலமா மணிகண் டனே
கொல்வேங்கை யதளனே கோவணனே
பொடியேறு மேனியனே யையம் வேண்டிப்
புவலோகந் திரியுமே புரி நூலானே
அடியாரை யமருலக மாள்விக் கும்மே
யவனாகி லதிகை வீரட்டனாமே.
[ஐயம் = பிக்ஷை.]

XXVII. திருவதிகை வீரட்டானம் 15.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

போற்றித் திருத்தாண்டகம்

1. எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி!
 யெரிசுடராய் நின்ற விறைவா போற்றி!
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி!
 கொல்லுங் கூற்றொன் றை யுதைத்தாய் போற்றி!
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி!
 கற்றா ரிடும்பை களைவாய் போற்றி!
வில்லால் வியன ரணமெய்தாய் போற்றி!
 வீரட்டங் காதல் விமலா போற்றி!.

[வியன=வலிய, பெரிய.]

2. பாட்டுக்கு மாட்டுக்கும் பண்பா போற்றி!
 பல்லூழி யாய் படைத்தாய் போற்றி!
ஓட்டகத்தே யூணா வுகந்தாய் போற்றி!
 யுள்குவா ருள்ளத் துறைவாய் போற்றி!
காட்டகத்தே யாடன் மகிழ்ந்தாய் போற்றி!
 கார்மேக மன்ன மிடற்றாய் போற்றி!
ஆட்டுவதோர் நாக மசைத்தாய் போற்றி!
 யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி!.

3. முல்லையங் கண்ணி முடியாய் போற்றி!
 முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி!
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி!
 யேழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி!

சில்லைச் சிரைத்தலைபி லூனு போற்றி!
சென்றடைந்தார் தீவினைக டீர்ப்பாய் போற்றி!
தில்லை சிற்றம்பல மேயாய் போற்றி!
திருவீரட் டானத்தெஞ் செல்வா போறறி!.

[கண்ணி = மாலை.]

4. சாம்ப ரகலத் தணிந்தாய் போற்றி!
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி!
கூம்பித் தொழுவார் தங்குற் றேவலைக்
குறிக்கொண் டிருக்குங் குழகா போற்றி!
பாம்பும் மதியும் புனலும் தம்மிற்
பகை தீர்த்துடன் வைத்த பண்பாபோற்றி!
ஆம்பன் மலர்கொண் டணிந்தாய் போற்றி!
யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி!.

[குழகா = இளையனே. ஆம்பன் = ஓர் மலர்.]

5. நீறேறு நீல மிடற்றாய் போற்றி!
நிழறிகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி!
கூறேறுமை யொருபாற் கொண்டாய் போற்றி!
கோளரவ மாட்டுங் குழகா போற்றி!
ஆறேறு சென்னி யுடையாய் போற்றி!
யடியவர்கட் காரமுத மானாய் போற்றி!
ஏறேற வென்று முகப்பாய் போற்றி!
யிருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி!.

[கோள் = வலிய. ஆறு = சங்கை.]

6. பாடுவார் பாட லுகப்பாய் போற்றி!
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி!
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி!
வேழத்து ரிவெருவப் போர்த்தாய் போற்றி!
நாடுவார் நாடற் கரியாய் போற்றி!
நாக மரைக்கசைத்த நம்பா போற்றி!
ஆடுமா னஞ்சு முகப்பாய் போற்றி!
யலெகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி!.

[வெருவ = அஞ்ச. மானஞ்சு = பஞ்சகவ்வியம்.]

7. மண்டுளங்க வாடன் மகிழ்ந்தாய் போற்றி!
மால்கடலு மால்விசும்பு மானாய் போற்றி!
விண்டுளங்க மும்மதிலு மெய்தாய் போற்றி!
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி!
பண்டுளங்கப் பாடல் பயின்றாய் போற்றி!
பார்முழுது மாய பரமா போற்றி!
கண்டுளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி!
கார்கெடி லங்கொண்ட கபாலி போற்றி!.

[துளங்க = அசைய.]

8. வெஞ்சினவெள் ளேறூர்தி யுடையாய் போற்றி!
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி!
துஞ்சாப் பலிதேருந் தோன்றால் போற்றி!
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி!
நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றி!
நான்மறையோ டாறங்க மானாய் போற்றி!
அஞ்சொலாள் பாக மமர்ந்தாய் போற்றி!
யலெகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி!.

9\. சிந்தையாய் நின்ற சிவனே போற்றி !
சீபர்ப் பதஞ்சிந்தை செய்தாய் போற்றி !
புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி !
புண்ணியனே போற்றி புனிதா போற்றி !
சந்தியாய் நின்ற சதுரா போற்றி !
தத்துவனே போற்றி யென்றாதாய் போற்றி !
அந்தியாய் நின்ற அரனே போற்றி !
யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி !.

[சீபர்ப்பதம்=ஓர் தலம்.]

10\. முக்கணா போற்றி முதல்வா போற்றி !
முருகவே டன்னைப் பயந்தாய் போற்றி !
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி யென்றாதாய் போற்றி !
தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்பத் !
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி !
எக்கண்ணுங் கண்ணிலே னெந்தாய் போற்றி !
யெறிகெடில வீரட்டத் தீசா போற்றி !.

XXVII. திருவதிகை வீரட்டானம் 16.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவடித் திருத்தாண்டகம்

1. அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
யருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணா மடி
பரவுவார் பாவம் பறிக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
திரைவிரவி தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

[அரவணையான் = திருமால். சரவணத்தான் = முருகன்.]

2. கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தா ராழாமைக் காக்கும் மடி
படுமுழவம் பாணி பயிற்றும் மடி
பதைத் தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும் மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தா னடி
நிறை கெடில வீரட்ட நீங்காவடி.

[ஆழாமை = வருந்தாமை.]

3. வைதெழுவார் காமம் பொய் போகாவடி
வஞ்சவலைப் பாடொன் றில்லா வடி
கைதொழுது நாமேத்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி

நெய்தொழுது நாமேத்தி யாட்டும் மடி
நீள் விசும்பை யூடறுத்து நின்றவடி
தெய்வப் புனற்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

4. அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
யழகெழுத லாகா வருட் சேவடி
சுரும் பித்தவண் டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித் தர்கூடிப் பிதற்றும் மடி
பிழைத்தார் பிழைப்பரிய வல்ல வடி
திருந்து நீர்த்தென் கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

5. ஒருகாலத் தொன்றாகி நின்ற வடி
யூழிதோ றூழி யுயர்ந்த வடி
பொருகழலும் பல்சிலம்பும் மார்க்கும் மடி
புகழ்வார் புகழ் தகைய வல்லவடி
இருநிலத்தா ரின்புற்றங் கேத்தும் மடி
யின்புற்றா ரிட்டபூ வேறும் மடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

6. திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ் தகைய வல்லவடி

உருவிரண்டு மொன்றோ டொன்றொவ் வாவடி
யுருவென் றுணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தென் செல்வன் னடி.

7. உரைமாலை யெல்லா முடைய வடி
யுரையா லுணரப் படாத வடி
வரைமாதை வாடாமை வைக்கும் மடி
வானவர்க டாம்வணங்கி வாழ்த்தும் மடி
அரைமாத் திரையி லடங்கும் மடி
யகல மளக்கிற்பா ரில்லாவடி
கரைமாங் கலிக்கெடில நாடன் னடி
கமழ்வீரட் டானக் கபாலி யடி.

[வரைமாது=பார்வதி.]

8. நறுமலராய் நாறு மலர்ச் சேவடி
நடிவா யுலகு நாடாய வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற வடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்த வடி
மறுமதியை மாசு கழுவும் மடி
மந்திரமுந் தந்திரமு மாய வடி
செறிகெடில நாடார் பெருமா னடி
திருவீரட் டானத்தென் செல்வன் னடி.

9. அணியனவுஞ் சேயனவு மல்லா வடி
யடியார்கட் காரமுத மாய வடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல வடி
பற்றற்றார் பற்றும் பவள வடி

மணியடி பொன்னடி மாண்பா மடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல வடி
தணிபாடு தண்கெடில நாடன் னடி
தகைசார் வீரட்டத் தலைவன் னடி.

[அணியன = சமீபமான.]

10. அந்தா மரைப்போ தலர்ந்த வடி
யரக்கனையு மாற்ற லழித்த வடி
முந்தாகி முன்னே முளைத்த வடி
முழங்கழலாய் நீண்டவெம் மூர்த்தி யடி
பந்தாடு மெல்விரலாள் பாகன் னடி
பவளத் தடவரையே போல்வா னடி
வெந்தார் சுடலை நீறாடும் மடி
வீரட்டங் காதல் விமலன் னடி.

XXVII. திருவதிகை வீரட்டானம் 17.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

காப்புத் திருத்தாண்டகம்

1. செல்வப் புனற்கெடில வீரட்ட முஞ்
   சிற்றேமமும் பெருந்தண் குற்றாலமும்
   தில்லைச்சிற் றம்பலமுந் தென்கூ டலுந்
   தென்னானைக் காவுஞ் சிராப் பள்ளியும்
   நல்லூருந் தேவன் குடி மருகலு
   நல்லவர்க டொழுதேத்து நாரை யூரும்
   கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக்
   கட்டங்கத் தோடுறைவார் காப்புக்களே.

2. தீர்த்தப் புனற்கெடில வீரட்டமுந்
   திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
   ஆர்த்தருவி வீழ்சுனை நீரண்ணாமலை
   யறையணி நல்லூரு மரநெறியும்
   ஏத்துமின்க ணீரேத்த நின்ற வீச
   னிடைமரு தின்னம்ப ரேகம்பமும்
   கார்த் தயங்கு சோலைக் கயிலாயமுங்
   கண்ணுதலான் றன்னுடைய காப்புக்களே.

   [ஆர்த்து=சப்தித்து.]

3. சிறையார் புனற்கெடில வீரட்டமுந்
   திருப்பா திரிப்புலியூர் திருவா மாத்தூர்
   துறையார் வனமுனிக ளேத்த நின்ற
   சோற்றுத் துறைதுருத்தி நெய்த்தானமும்

அறையார் புனலொழுகு காவிரிசூ
ழையாற் றமுதன் பழன நல்ல
கறையார் பொழில் புடைசூழ் கானப்பேருங்
கழுக்குன்றுந் தம்முடைய காப்புக்களே.

[சிறை=மடை.]

4. திரையார் புனற்கெடில வீரட்டமுந்
திருவாரூர் தேவூர் திருநெல் லிக்கா
உரையார் தொழநின்ற வொற்றியூரு
மோத்தூரு மாற்பேறு மாந்துறையும்
வரையா ரருவிசூழ் மாநதியு
மாகாளங் கேதார மாமேருவும்
கரையார் புனலொழுகு காவிரிசூழ்
கடம்பந் துறையுறைவார் காப்புக்களே.

[திரை=அலை.]

5. செழுநீர்ப் புனற்கெடில வீரட்டமுந்
திரிபுராந்தகந் தென்னார் தேவீச்சரம்
கொழுநீர் புடைசுழிக்குங் கோட்டுக் காவுங்
குடமூக்குங் கோகரணங் கோலக்காவும்
பழிநீர்மை யில்லாப் பனங் காட்டூரும்
பனையூர் பயற்றூர் பராய்த் துறையும்
கழுநீர் மதுவிரியுங் காளிங்கமுங்
கணபதீச் சரத்தார்தங் காப்புக்களே.

6. தெய்வப் புனற்கெடில வீரட்டமுஞ்
செழுந்தண் பிடவூருஞ் சென்றுநின்று
பவ்வந் திரியும் பருப்பதமும்
பறியலூர் வீரட்டம் பாவநாசம்

மவ்வந் திரையு மணி முத்தமு
மறைக்காடும் வாய்மூர் வலஞ்சுழியும்
கவ்வை வரிவண்டு பண்ணே பாடுங்
கழிப்பாலை தம்முடைய காப்புக்களே.

[கவ்வை=ஒலி.]

7. தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமுஞ்
சீர்காழி வல்லந் திருவேட்டியும்
உண்ணீரா ரேடகமு மூறலம்ப
ருறையூர் நறையூ ரரண நல்லூர்
விண்ணோர் விடையான் விளமர் வெண்ணி
மீயச்சூர் வீழி மிழலை மிக்க
கண்ணார் நுதலார் கரபு ரமுங்
காபாலியா ரவர்தங் காப்புக்களே.

௮. தெள்ளும் புனற்கெடில வீரட்டமுந்
திண்டீச் சரமுந் திருப்புகலூர்
எள்ளும் படையா னிடைத் தானமு
மேயீச்சுரமு நல்லேமங் கூடல்
கொள்ளு மிலயத் தார்கோடிக் காவுங்
குரங்கணின் முட்டமுங் குறும்பலாவும்
கள்ளருந்தத் தெள்ளியா ருள்கி யேத்துங்
காரோணந் தம்முடைய காப்புக்களே.

9. சீரார் புனற் கெடில வீரட்டமுந்
திருக்காட்டுப் பள்ளி திருவெண் காடும்
பாரார் பரவுஞ் சீர்ப்பைஞ் ஞீலியும்
பந்தணை நல்லூரும் பாசூர் நல்ல

நீரார்நிறை வயல்சூழ் நின்றி யூரு
நெடுங்களமு நெல்வெண்ணெய் நெல்வாயிலும்
காரார் கமழ்கொன்றைத் தாரார்க் கென்றுங்
கடவூரில் வீரட்டங் காப்புக்களே.

10. சிந்தும் புனற்கெடில வீரட்டமுந்
திருவாஞ்சியமுந் திருநள்ளாறும்
அந்தண் பொழில்புடை சூழயோகந்தியு
மாக்கூரு மாவூருமான் பட்டியும்
எந்தம்பெருமாற் கிடமாவது
விடைச்சுரமு மெந்தை தலை சங்காடுப்
கந்தங்கமழுங் கரவீரமுங்
கடம்பூர்க் கரக்கோயில் காப்புக்களே

[கந்தம் = வாசனை.]

11. தேனார் புனற்கெடில வீரட்டமுந்
திருச்செம்பொன் பள்ளி திருப்பூவணமும்
வானோர்வணங்கு மணஞ்சேரியு
மதிலுஞ்சை மாகாளம் வாரணாசி
ஏனோர்களேத்தும் வெகுளீச்சர
மிலங்கார் பருப் பதத்தோடேனார் சோலைக்
கானார்மயிலார் கருமாரியுங்
கறைமிடற்றார் தம்முடைய காப்புக்களே.

12. திருநீர்ப் புனற்கெடில வீரட்டமுந்
திருவளப்பூர் தெற்கேறு சித்தவடம்
வருநீர் வளம்பெருகு மாகிருபமு
மயிலாப்பின் மன்னினர் மன்னியேத்தும்
பெருநீர் வளர்சடையான் பேணிநின்ற
பிரமபுரஞ் சுழியல் பெண்ணாகடம்
கருநீல வண்டரற்றுங் காளத்தியுங்
கயிலா யந்தம்முடைய காப்புக்களே.

XXVII. திருவதிகை வீரட்டானம் 18.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. தம்மானை யறியாத சாதியாருளரே சடைமேற் கொள்
பிறையானை விடை மேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டிலாட லுடையானை
விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல் வைத்திடு
மென்னுமாசையால் வாழ்கின்றவறிவிலாநாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன்போ லியானே.

[தம்மானை = தம் தலைவனை. கைம்மா = யானை.]

2. முன்னே யெம்பெருமானை மறந்தென்கொன் மறவா
தொழிந்தென்கொன் மறவாத சிந்தையால் வாழ்
[வேன்
பொன்னே நன்மணியே வெண்முத்தே செம்பவளக்
குன்றமே யீசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னே யென்னத்தாவென் றமரா லமரப்
படுவானை யதிகைமா நகருள் வாழ்பவனை
என்னேயென் னெறிகெடில வடவீரட்டானத் துறை
வானை யிறைபோது மிகழ்வன்போ லியானே.

[அத்தா = தந்தையே.]

3. விரும்பினேற் கெனதுள்ளம் விடகிலா விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர் நின்
[றேத்துங்

கரும்பேயென் கட்டியென் னுள்ளத்தா லுள்கிக்
காதல்சேர் மாதராள் கங்கையா ணங்கை
வரும்புன லுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவுமுடன் றுயிலவைத் தருளு மெந்தை
இரும்புனல் வந்தெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன் போலி
[யானே.

[துயிலவைத்த=தூங்க (தங்க) வைத்த, இரும்=மிக்க.]

4. நாற்றுனத் தொருவனை நாயனுயபரனை நள்ளாற்று
நம்பியை வெள்ளாற்று விதியைக் காற்றனைத்
தீயானைக் கடலானை மலையின் றலையானைக்
கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள ஆற்றனைப்
பிறையானை யம்மானை யெம்மான் றம்மானை
யாவர்க்கு மறிவரிய செங்கண் ஏற்றனை
யெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன் போலியானே.

5. சேந்தர் தாய்மலை மங்கைதிருநிறமும் பரிவு
முடையானை யதிகை மாநகருள் வாழ்பவனைக்
கூந்தருழ் புனன்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக்
[குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்து நீரெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன் போலியானே.

[மலையாரம்=சந்தனம், இறைபோது=சிறிதுபோது.]

6. மைம்மான மணி நீலகண்டத் தெம்பெருமான்
வல்லேனக் கொம்பணிந்த மாதவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்புந்
தடுமாறுஞ் சடையானைத் தாழ்வரைக்கைவென்ற
வெம்மான மதகரியினுரியானை வேத
விதியானை வெண்ணீறு சண்ணித்தமேனி
எம்மானை யெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன் போலியானே.

[ஏனம்=பன்றி. உரியான்=தோலுடையான்.]

7. வெய்தாய வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு
மிகவிரங்கியருள் புரிந்து வீடு பேறாக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்
தெண்டோ ளெம்பெருமானை பெண்மாகமொரு
[பால்
செய்தானைச் செக்கர்வானொளியானைத் தீவா
யரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை யெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன்போ லியானே.

[மைஞ்ஞவிலும்=மைநிறம்மேய.]

8. பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன்முடிமேல்
தென்னானை குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வா னந்தி

அன்னானை யமரர்கடம் பெருமானைக் கருமானி
னுரியானை யதிகைமாநகருள் வாழ்பவனை
என்னானை யெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன்போ லியானே.

[ஊர்தி = வாகனம்.]

9. திருந்தாத வாளவுணர் புரமூன்றும் வேவச்
சிலைவளைவித் தொருகணையாற் றொழில்பூண்ட
[சிவனைக்
கருந்தாள மதக்களிற்றி னுரியானை பெரிய
கண்மூன்று முடையானைக் கருதாத வரக்கன்
பெருந்தோள்க ணாலைந்து மீரைந்து முடியு
முடையானைப் பேயுருவமூன்றுமுற மலைமேல்
இருந்தானை யெறிகெடில வடவீரட்டானத் துறைவானை
யிறைபோது மிகழ்வன்போ லியானே.

[நாலைந்து = இருபது. ஈரைந்து = பத்து.]

10. என்பினையே கலனாக வணிந்தானை யெங்க
ளெருதேறும் பெருமானை யிசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில் சூழ்வயனாவலூர்க்கோன்
வன்றொண்ட னாரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தர்
பெருமானை யதிகைமா நகருள் வாழ்பவனை
என்பொன்னை யெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியா
[னே.

XXVIII. திருத்துறையூர்

சுந்திரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. மலையா ரருவித் திரண்மா மணியுந்திக்
குலையாரக்கொணர்ந் தெற்றியோர் பெண்ணை வடபால்
கலையா ரல்குற் கன்னியரா டுந்துறையூர்த்
தலைவா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

2. மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

3. கந்தங் கமழ்கா ரகில்சந் தனமுந்திச்
செந்தண் புனல்வந் திழிபெண்ணை வடபால்
மந்தி பலமா நடமா டுந்துறையூர்
எந்தா யுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

4. அரும்பார்ந் தனமல் லிகைசண் பகஞ்சாடிச்
சுரும்பார்க் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கரும்பார் மொழிக்கன் னியராடுந் துறையூர்
விரும்பா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

5. பாடார்ந் தனமாவும் பலாக்களுஞ் சாடி
நாடார வந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
மாடார்ந்தனமா ளிகைசூழுந் துறையூர்
வேடா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

6. மட்டார் மலர்க்கொன் றையும் வன்னி யுஞ்சாடி
மொட்டாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கோட்டாட் டொடுபாட் டொலியோவாத் துறையூர்ச்
சிட்டா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

7. மாதார் மயிற்பீ லியும்வெண் ணுரையுந்தித்
தாதாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
போதார்ந் தனபொய் கைகள்சூழுந் துறையூர்
நாதா வுனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே.

8. கொய்யா மலர்க்கோங் கொடுவேங் கையுஞ்சாடிச்
செய்யாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
மையார் தடங்கண் ணியராடுந் துறையூர்
ஐயா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

9. விண்ணார்ந் தனமேக ங்கணின் றுபொழிய
மண்ணார்க் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பண்ணார் மொழிப்பா வையராடுந் துறையூர்
அண்ணா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

10. மாவாய்ப் பிளந்தா னு மலர்மிசை யானும்
ஆவா வவர்தேடித் திரிந்தல மந்தார்
பூவார்ந் தனபொய் கைகள்சூழுந் துறையூர்த்
தேவா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

11. செய்யார் கமலம் மலர்நாவ லூர்மன்னன்
கையாற் றொழுதேத்தப் படுந்துறை யூர்மேல்
பொய்யாத் தமிழூர னுரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்க டவநெறி தானே.

XXIX திருமாணிகுழி

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

1. பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு
பங்கர்புன றங்கு சடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர்ம கிழ்ந்துறைவிடம்
கன்னியிள வாளை குதி கொள்ளவிள
வள்ளைபட ரள்ளல் வயல்வாய்
மன்னியிள மேதிகள்ப டிந்துமனை
சேருதவி மாணிகுழியே.

2. சோதிமிகு நீறதுமெய் பூசியொரு
தோலுடைபு னைந்துதெருவே
மாதர்மனை தோறுமிசை பாடிவசி
பேசுமரனார் மகிழ்விடம்
தாதுமலி தாமரைம ணங்கமழ
வண்டுமுர றண்பழன மிக்
கோதமலி வேலைபுடை சூழுலகி
னீடுதவி மாணிகுழியே.

3. அம்பனைய கண்ணுமை மடந்தையவ
ளஞ்சிவெரு வச்சினமுடைக்
கம்பமத யானையுரி செய்தவர
னார்கருதி மேயவிடமாம்

வம்புமலி சோலைபுடை சூழுமணி
மாடமது நீடி*ய ழகா
உம்பரவர் கோனகர மென்னமிக
மன்னுதவி மாணிகுழியே.

(பா—ம்: மதிநீடி.)

4. நித்தநிய மத்தொழில னாகிநெடு
மால்குறள னாகிமிகவும்
சித்தமதொ ருக்கிவழி பாடுசெய
நின்றசிவ லோகனிடமாம்
கொத்தலர்ம லர்ப்பொழிலி னீடுகுல
மஞ்ஞைநட மாடலதுகண்
டொத்தவரி வண்டுகளு லாவியிசை
பாடுதவி மாணிகுழியே.

5. மாசின்மதி சூடுசடை மாமுடியர்
வல்லசுரர் தொன்னகரமுன்
நாசமது செய்துநல வானவர்க
ளுக்கருள்செய் நம்பனிடமாம்
வாசமலி மென்குழன்ம டந்தையர்கண்
மாளிகையின் மன்னியழகார்
ஊசன்மிசை யேறியினி தாகவிசை
பாடுதவி மாணிகுழியே.

6. மந்தமலர் கொண்டுவழி பாடுசெயு
மாணியுயிர் வவ்வ மனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை
செய்தமணி கண்டனிடமாம்

சந்திரனொடு காரகில்சு மந்துதட
மாமலர்கள் கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்து வயல் பாயுமணு
மாருதவி மாணிகுழியே.

7. எண்பெரிய வானவர்க ணின்று துதி
செய்யவிறை யேகருணையாய்
உண்பரிய நஞ்சதனை யுண்டுலக
முய்யவரு ளுத்தமனிடம்
பண்பயிலும் வண்டுபல கெண்டிமது
வுண்டுநிறை பைம்பொழிலின்வாய்
ஒண்பலவி னின்கனிசொ ரிந்துமண
நாறுதவி மாணிகுழியே.

8. எண்ணமது வின்றியெழி லார்கைலை
மாமலையெ டுத்த திறலார்
திண்ணியவ ரக்கனைநெ ரித்தருள்பு
ரிந்தசிவ லோகனிடமாம்
பண்ணமரு மென்மொழியி னார்பணைமு
லைப்பவள வாயழ கதார்
ஒண்ணுதன்ம டந்தையர்கு டைந்துபுன
லாடுதவி மாணிகுழியே.

9. நெடுமைய னோடுதிரு மாலுமுண
ராவகைநி மிர்ந்து முடிமேல்
ஏடுலவு திங்கண்மத மத்தமித
ழிச்சடையெம் மீசனிடமாம்

மாடுலவு மல்லிகைகு ருந்துகொடி
மாதவிசெ ருந்தி குரவின்
ஊடுலவு புன்னைவிரை தாதுமலி
சேருதவி மாணிகுழியே.

10. மொட்டையம ணார்முது தேரர்மதி
யில்லிகண்மு யன்றனபடும்
முட்டைகண்மொ ழிந்தமொழி கொண்டருள்செய்
யாதமுதல் வன்றனிடமாம்
மட்டைமலி தாழையிள நீர்முதிய
வாழையில்வி ழுந்தவ தரில்
ஒட்டமலி பூகநிரை தாறுதிர
வேறுதவி மாணிகுழியே.

11. உந்திவரு தண்கெடில மோடுபுனல்
சூழுதவி மாணிகுழிமேல்
அந்திமதி சூடியவெம் மானையடி
சேருமணி காழிநகரான்
சந்தநிறை தண்டமிழ்தெ ரிந்துணரு
ஞானசம் பந்தனதுசொல்
முந்தியிசை செய்துமொழி வார்களுடை
யார்கணெடு வானநிலனே.

XXX. திருச்சோபுரம்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

1. வெங்கணானை யீருரிவை போர்த்து விளங்கு மொழி
மங்கைபாகம் வைத்துகந்த மாண்பதுவென்
[னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக் கடிகமழுங் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுர மேயவனே.

2. விடையமர்ந்து வெண்மழுவொன் றேந்திவிரிந் திலங்கு
சடையொடுங்கத் தண்புனலைத் தாங்கிய தென்னை
[கொலாம்
கடையுயர்ந்த மும்மதிலுங் காய்ந்தனலு ளழுந்தத்
தொடைநெகிழ்ந்த வெஞ்சிலையாய் சோபுரமேயவனே.

3. தீயராய வல்லரக்கர் செந்தழலுள் ளழுந்தச்
சாயவெய்து வானவரைத் தாங்கியதென் னைகொலாம்
பாயும் வெள்ளை யேற்றையேறிப் பாய் புலித்தோ
[லுடுத்த
தூயவெள்ளை நீற்றினானே சோபுரமேயவனே.

4. பல்லிலோடு கையிலேந்திப் பல்கடையும் பலிதேர்ந்
தல்லல் வாழ்க்கை மேலதான வாதரவென்
[னைகொலாம்
வில்லைவென்ற நுண்புருவ வேனெடுங்கண் ணியொடும்
தொல்லையூழி யாகிநின்றாய் சோபுரமேயவனே.

5. நாற்றமிக்க கொன்றைதுன்று செஞ்சடைமேன்மதியம்
ஏற்றமாக வைத்துகந்த காரணமென்னைகொலாம்
ஊற்றமிக்க காலன்றன்னை யொல்க வுதைத்தருளித்
தோற்றமீறு மாகிநின்றாய் சோபுரமேயவனே.

6. கொன்னவின்ற மூவிலை வேற் கூர்மழுவாட் படையன்
பொன்னை வென்ற கொன்றைமாலை சூடும்பொற்
[பென்னைகொலாம்
அன்னமன்ன மென்னடையாள் பாகமமர்ந் தரைசேர்
துன்னவண்ண வாடையினாய் சோபுரமே யவனே.

7. குற்றமின்மை யுண்மை நீயென் றுன்னடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான காரணமென்னைகொலாம்
வற்றலாமை வாளரவம் பூண்டயன் வெண் டலையில்
துற்றலான கொள்கையானே சோபுர மேயவனே.

8. விலங்கலொன்று வெஞ்சிலையாக் கொண்டுவிற லரக்கர்
குலங்கள்வாழு மூரெரித்த கொள்கையிதென்
[னைகொலாம்
இலங்கை மன்னு வாளவுணர் கோனையெழில் விரலால்
துலங்கவூன்றி வைத்து கந்தாய் சோபுரமே யவனே.

9. விடங்கொளுக மால்வரையைச் சுற்றிவிரி திரைநீர்
கடைந்த நஞ்சை யுண்டுகந்த காரணமென்னைகொலாம்
இடந்து மண்ணை யுண்டமாலு மின்மலர்மே லயனும்
தொடர்ந்துமுன்னங் காணமாட்டாச் சோபுரமே
[யவனே.

10. புத்தரோடு புன்சமணர் பொய்யுரையே யுரைத்துப்
பித்தராகக் கண்டுகந்த பெற்றிமையென் னைகொலாம்
மத்தயானை யீருரிவை போர்த்துவளர் சடைமேல்
துத்திநாகஞ் சூடினானே சோபுரமே யவனே.

11. சோலைமிக்க தண்வயல்சூழ் சோபுரமே யவனைச்
சீலமிக்க தொல்புகழார் சிரபுரக்கோ னலத்தான்
ஞாலமிக்க தண்டமிழான் ஞானசம்பந்தன் சொன்ன
கோலமிக்க மாலைவல்லார் கூடுவர் வானுலகே.

XXXI. திருத்தினை நகர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. நீறு தாங்கிய திருநுத லானை
 நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
 குற்றமில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய வழகனை யமரர்க்
 கரிய சோதியை வரிவரா லுகளுஞ்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
 சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே.

2. பிணிகொளாக் கைபிறப் பிறப்பென்னு மிதனை
 நீக்கி யீசன் றிருவடி யிணைக்காட்
டுணியவேண்டிடிற் சொல்லுவன் கேணீ
 யஞ்ச னெஞ்சமே வஞ்சர்வாழ் மதின்மூன்
றணிகொள் வெஞ்சிலை யாலுகச் சீறு
 மையன் வையகம் பரவிநின் றேத்துந்
திணியும் வார்பொழிற் றிருத்தினை நகருட்
 சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

3. வடிகொள் கண்ணிணை மடந்தையர் தம்பால்
 மயல துற்று வஞ்சனைக்கிட மாகி
முடியு மாகரு தேலெரு தேறு
 மூர்த்தி யைமுத லாயபி ரானை

அடிக ளென்றடி யார்தொழு தேத்து
மப்ப னொப்பிலா முலையுமை கோனைச்
செடிகொள் கான்மலி திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

4. பாவ மேபுரிந் தகலிடந் தன்னிற்
பலப கர்ந்தல மந்துயிர் வாழ்க்கைக்
காவ வென்றுழந் தயர்ந்துவீ ழாதே
யண்ண றன்றிற மறிவினாற் கருதி
மாவி னீருரி யுடை புனைந்தானை
மணியை மைந்தனை வானவர்க் கமுதைத்
தேவ தேவனைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

5. ஒன்ற லாவுயிர் வாழ்க்கையை நினைந்திட்
டுடற ளர்ந்தரு மாநிதி யியற்றி
என்றும் வாழலா மெமக்கெனப் பேசு
மிதுவும் பொய்யென வேநினை யுளமே
குன்று லாவிய புயமுடை யானைக்
கூத்தனைக் குலாவிக் குவலயத்தோர்
சென்றெலாம்பயி றிருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

6. வேந்த ராயுல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தவிவ் வுடலிது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருழந் திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே

பாந்த ளங்கையி லாட்டு கந்தானைப்
பாம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

7. தன்னிலாசறு சித்தமு மின்றித்
தவமுயன்றவ மாயின பேசிப்
பின்னலார்சடை கட்டியென் பணிந்தாற்
பெரிது நீந்துவ தரிதது நிற்க
முன்னெலாமுழு முதலென்று வானோர்
மூர்த்தியாகிய முதலவன் றன்னைச்
செந்நெலார் வயற்றிருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

8. பரிந்தசுற்றமு மற்றுவன் றுணையும்
பலருங்கண் டழுதெழு வுயிருடலைப்
பிரிந்துபோமிது நிச்சயமறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங்கண்ணி பங்கனை யுயிரைக்
காலகா லனைக்கட வுளைவிரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

9. நடையெலாம்பல நிகழ்ந்துரைப் பதன்மு
னன்மை யொன்றிலாத் தேரர்புன் சமணுஞ்
சமய மாகிய தவத்தினா ரவத்தத்
தன்மை விட்டொழி நன்மையை வேண்டில்

உமையொர் கூறனை யேறுகந்தானை
யும்ப ராதியை யெம்பெருமானைச்
சிமய மார்பொழிற் றிருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென் றடை மனனே.

10. நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து
நீக்க லாமென்று மனத்தினைத் தெருட்டிச்
சேடுலாம் பொழிற் றிருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைத் திருவடி பிணைதாள்
நாடெ லாய புகழ் நாவலூ ராளி
நம்பிவன் றொண்ட னூர னுரைத்த
பாடலாந் தமிழ் பத்திவை வல்லார்
முத்தியாவது பரகதிப் பயனே.

XXXII. திருப்பாதிரிப்புலியூர் 1.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்

1. முன்னநின்ற முடக்கான் முயற்கருள் செய்துநீள்
புன்னைநின்று கமழ் பாதிரிப் புலியூருளான்
தன்னைநின்று வணங்குந் தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணி யாக்கையைப் பெறுவார்களே.

2. கொள்ளிநக்க பகுவாய பேய்கள் குழைந்தாடவே
முள்ளிலவம் முதுகாட்டுறையும் முதல்வனிடம்
புள்ளினங்கள் பயிலும் பாதிரிப் புலியூர்தனை
உள்ளநம்மேல் வினையாயின வொழியுங்களே.

3. மருளினல்லார் வழிபாடு செய்யும் மழுவாளர்மேல்
பொருளினல்லார் பயில் பாதிரிப் புலியூருளான்
வெருளின்மானின் பிணை நோக்கல் செய்து வெறி
[செய்தபின்
அருளியாகத் திடைவைத் ததுவும் மழகாகவே.

4. போதினாலும் புகையாலுமுய்த்தே யடியார்கடாம்
போதினாலே வழிபாடு செய்யப் புலியூர் தனுள்
ஆதிநாலும் மவலம் மிலாதவடி கண்மறை
ஓதிநாளும் மிடும்பிச்சை யேற்றுண் டுணப்பாலதே.

5. ஆகநல்லா ரமுதாக்க வுண்டா னழலைந்தலை
நாகநல்லார் பரவந்நயந் தங்கரை யார்த்தவன்
போகநல்லார் பயிலும் பாதிரிப் புலியூர் தனுள்
பாகநல்லா ளொடுந் நின்ற வெம்பர மேட்டியே.

6. மதியமொய்த்த கதிர்போ லொளிம்மணற் கானல்
[வாய்ப்
புதிய முத்தந் திகழ் பாதிரிப் புலியூரெனும்
பதியில்வைக்கப் படுமெந்தை தன்பழந் தொண்டர்கள்
குதியுங் கொள்வர் விதியுஞ் செய்வர் குழகாகவே.

7. கொங்கரவப் படுவண்டறைகுளிர் கானல்வாய்ச்
சங்கரவப் பறையின் னொலியவை சார்ந்தெழப்
பொங்கரவம் முயர் பாதிரிப் புலியூர் தனுள்
அங்கரவம் மரையில் அசைத்தானை யடைமினே.

8. வீக்கமெழும் மிலங்கைக் கிறை விலங்கல்லிடை
ஊக்கமொழிந் தலறவ் விரலாலிறை யூன்றினான்
பூக்கமழும் புனற் பாதிரிப் புலியூர்தனை
நோக்கமெலிந் தணுகா வினை நுணுகுங்களே.

9. அன்னந்தாவும் அணியார் பொழின் மணியார் புன்னை
பொன்னந்தாது சொரி பாதிரிப் புலியூர்தனுள்
முன்னந்தாவி யடிமூன் றளந்தவன் னான்முகன்
தன்னந் தாளுற் றுணராத தோர் தவநீதியே.

10. உரிந்தகூறை யுருவத் தொடுதெருவத் திடைத்
திரிந்து தின்னுஞ் சிறுநோன் பரும்பெருந் தேரரும்
எரிந்து சொன்னவ் வுரைகொள் ளாதேயெடுத் [தேத்துமின்
பரிந்தவெண்ணீற் றண்ணல் பாதிரிப் புலியூரையே.

11. அந்தணல்லா ரகன் காழியுண் ஞானசம்
பந்தனல்லார் பயில் பாதிரிப் புலியூர் தனுள்
சந்தமாலைத் தமிழ்பத்தி வைதரிக் தார்கண்மேல்
வந்து தீயவ் வடையாமை யால்வினை மாயுமே.

XXXII. திருப்பாதிரிப்புலியூர் 2.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவிருத்தம்

1. ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் [றோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க்கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடியோங்- [களுக்கே.

[தோன்றாத்துணையான் = இவ்வூர் இறைவன் பெயர்]

2. பற்றாய் நினைந்திடப் போதுநெஞ்சே யிந்தப் [பாரைமுற்றும்
சுற்றாயலை கடன் மூடினுங் கண்டேன் புகனமக்கு
உற்றா னுமையவட்கன்பன் றிருப்பா திரிப்புலியூர்
முற்றாமுளை மதிக்கண்ணியி னான்றன மொய்கழலே.

3. விடையான் விரும்பியென் னுள்ளத்திருந் தானினி [நமக்கிங்
கடையா வவல மருவினை சாரா நமனை யஞ்சோம்
புடையார் கமலத்தயன் போல்பவர் பாதிரிப்புலியூர்
உடையானடிய ரடியடியோங்கட் கரியதுண்டே.

4. மாயமெல்லாமுற்ற விட்டிருணீங்க மலைமகட்கே
நேயநிலாவ விருந்தானவன் றன்றிரு வடிக்கே
தேயமெல்லா நின்றிறைஞ்சுந் திருப்பாதிரிப்புலியூர்
மேயநல்லான் மலர்ப்பாதமென்சிந்தையு ணின்றனவே.

5. வைத்தபொரு ணமக்காமென் று சொல்லிமனத்
[தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநம வென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதிபோல்வா ரவர்பாதிரிப் புலியூர்
அத்தனருள் பெறலாமோ வறிவிலாப் பேதை
[நெஞ்சே.

6. கருவாய்க்கிடந் துன்கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம்பயின்றே
[னுனதருளால்
திருவாய்ப்பொலியச் சிவாயநமவென் று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலி யூரானே.

7. எண்ணுதமர ரிரக்கப் பரவையு ணஞ்சையுண்டாய்
திண்ணாரசுரர் திரிபுரந் தீயெழச் செற்றவனே
பண்ணார்ந்தமைந்த பொருள்கள் பயில்பாதிரிப்
[புலியூர்க்
கண்ணார் நுதலாய்கழ னங்கருத்தி லுடையனவே.

8. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்
[மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டு மிவ்வையகத்தே
தொழுவார்க் கிரங்கியிருந் தருள்செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த
[தீவண்ணனே.

9. மண்பாதலம் புக்குமால் கடன்மூடிமற் றேழுலகும்
விண்பாறிசை கெட்டிருசுடர் வீழினுமஞ்ச னெஞ்சே
திண்பானமக் கொன்றுகண்டோந் திருப்பா
[திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக்கடவுட் சுடரான்கழ லிணையே.

10. திருந்தா வமணர்தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கே சரணம்புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா வரக்கனுட னெரித்தாய் பாதிரிப்புலியூர்
இருந்தாயடியே னினிப்பிறவாமல் வந்தேன்று
[கொள்ளே.

APPENDIX I.

XXVII. AT TIRU-ATHIGAI-VIRATTANAM 2.

THIRUNAVUKKARASU.

1. Thou dost not ward off from me this pain that tortures me like death; I know of no wickedness done to deserve this; night and day I cling inseparably to and worship Thy sacred feet; this pain never felt before, starts within my stomach and grips and twists and wrings my bowels. I can bear it no longer, oh Lord, who on the banks of the Gadila, abidest at Athigai Virattanam!

2. My mind, thoughts I have dedicated to Thee. I know of no time when I am not thinking of Thee: so vile a disease I have never known before, weakening me like poison, by gripping and twisting and wringing my bowels; why dost Thou not ward off such pain or cheer me with "Fear Not," oh Lord, who on the banks of the Gadila, abidest at Athigai Virattanam?

3. Thou hast the power to wipe off the sins of those who worship Thee! Thou bearest about Thee a skull as thy beggar's bowl! Thou wearest on Thy person the ashes of the cremated dead! Thou ridest on a bull

and wearest a garland of skulls, oh Lord, I have boldly declared myself Thy devotee. But this pain tortures me. Oh ward it off, Lord, who on the banks of the Gadila, abidest at Athigai Virattanam!

4. In the days of my ignorance when I was a Jain it was well the pain tortured me: but since then, I am Thy devotee! Ward off this torturing pain. Is it not the duty of those in whom others seek refuge, to ward off all harm, Oh Lord, who on the swan-trod banks of the Gadilam, abidest at Athigai-Virattanam?

5. For that I scorned protection, I was flung into deep waters, as if with a taunt "shift for yourself". Here I find no foot-hold and never was I taunted so: never suffered from pain that grips and twists and wrings, Oh Lord, who on the banks of the flood-ed, sounding Gadila, abidest at Athigai Virattanam!

6. To worship Thee with water, flower and incense, I have never forgotten; I have not forgotten to sing Thy praise in musical sweet Tamil; neither at good nor at evil times have I ever forgotten Thee: Thy name is

never absent from my tongue! Oh Thou begging with a skull for a bowl. ward off this fire that burns within! I faint Oh, Lord, who on the banks of the Gadila, abidest at Athigai Virattanam!

7. With none to advise or control, I grew conceited with domestic life and the joy of children; but since I left these to devote myself to Thee, the fire torments me, ward it off. I grow fearful and thin, with this pain that within my stomach digs and turns and pulls about, Oh Lord, who on the banks of the Gadila abidest at Athigai Virattanam!

8. I rejoiced in domestic life; I lived a guileless life; when I weary of it, who shall help me, save Thee oh Lord with the conch-ornament in Thy ears? Oh the pain, it surges, sweeps in swirls and tears off my life. Hence I have grown weak and weary, Oh, Lord, who on the banks of the Gadila, abidest at Athigai-Virattanam!

9. Golden-lustrous is Thy body; Thou wearest Thy matted locks and the lean crescent. Thou dost not ward off pain, care, disease. If this is what devotees

suffer, who will ever choose Thee as their Lord, O, Lord compassionate, who on the banks of the Gadila, abidest at Athigai-Virattanam ?

10. Thou hast clad Thyself in a skin torn and stript from an elephant; Thou dancest in the crematorium making that, the arena of Thy skill; Thou didst crush under the huge Kailas mountain the boastful giant Ravana; Thou hast forgotten to do such good now! I sweat and roll and fall and rise with pain; Thou dost not ward it off, O, Lord, who on the banks of the full-flowing Gadila, abidest at Athigai Virattanam !

VAISHNAVITE HYMNS

பிரபந்தம்

தென்னார்க்காடு

விஷ்ணு க்ஷேத்திரங்கள்

சீராருந் தில்லைசேர் நல் வயிந்திரமே
ஏராருங் கோவலூர் என்னுமிவை—பாராரும்
தென்னார்க்காட் டுள்மிளிரும் செப்பஞ்சே ராழ்வார்கள்
சொன்மாரி பெற்றபதி சொல்.

நாதமுநி யாளவந்தார் நண்ணியமன் னார்குடியே
தீதில் சுயம்புத் திருபுட்டம்—கோதிலார்
மங்களா சாசனஞ்சேர் மாட்சி யுளதென்றே
இங்குளார் கொள்வர் இனிது.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

குலசேகரப் பெருமாள்

அருளிச்செய்த

பெருமாள் திருமொழி.

கல்யாணி ராகம் - ஆதிதாளம்.

1. அங்கணெடு மதிள்புடைசூ ழயோத்தியென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னை
செங்கணெடுங் கருமுகிலை யிராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் தன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணும்நாளே.

2. வந்தெதிர்ந்த தாடகைத னுரத்தைக்கீறி
வருகுருதி பொழிதர வன் கணையொன்றேவி
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து
வல்லரக்க ருயிருண்ட மைந்தன் காண்மின்
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
அந்தணர்க ளொருமூவாயிரவ ரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான் தானே.

HYMN BY

KULASEKARA PERUMAL

1. Oh, when shall I behold in Chidambaram in the Hall of Loveliness till my eyes are satisfied with the sight, Him, Sri Rama the saviour of the Gods, born the light of the Solar Race—of the Sun that illumines all the world—in Ayodya, that lovely city fenced round with high walls reaching up to the skies; the Hero, tall of stature, lotus-eyed, dark as the rain-cloud, that peerless Lord of Ours!

2. In Chitrakudam, in cool grove-surrounded Chidambaram, where amid tender honey-coloured leaves the laughing flowers bloom, behold the youngster Him who, seated on his throne of precious stones, propitiated by three thousand Brahmins, rose up in fury and with a peerless arrow tore open the body of opposing *Thatakai*, till the blood flowed like a mountain rivulet, Him who protected the sacrificial fire, of the Veda-knowing Visvamitra and who shed the lives of the fierce giant!

3. செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக்காகிச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றிகொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் தன்னை
தெவ்வரஞ்சு நெடும்புரிசை யுயர்ந்தபாங்கர்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை யிராமன் தன்னை
இறைஞ்சுவா ரிணையடியே யிறைஞ்சினேனே.

4. தொத்தலர்பூஞ் சுரிகுழற்கை கேசிசொல்லால்
தொன்னகரந் துறந்து துறைக், கங்கைதன்னை
பத்திபுடைக் குகன்கடத்த வனம்போய்ப்புக்குப்
பரதனுக்குப் பாதுகமும் அரசுமீந்து
சித்திரகூடத் திருந்தான், தன்னையின்று
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
எத்தனையும் கண்குளிரக் காணப்பெற்ற
இருநிலத்தார்க் கிமையவர்நே ரொவ்வார்தாமே.

5. வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக்கொன்று
வண்டமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கைநீக்கிக்
கரனோடு தூடணன் றன்னுயிரை வாங்கி
சிலைவணக்கி மான்மறிய வெய்தான் தன்னை
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி யேத்தவல்லார்
திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே.

3. I worship the feet of them that worship Sri Rama whose large arms bear the cruel bow, Him who bent and broke the bow of angry Siva, to win her whose dark eyes radiant with lotus lines stretched to the ears, Him who defeated Parasurama, the Hero that defeated the enemies of His Kinsmen and who is visible in Chitrakudam in Chidambaram with its high and terrific fortifications.

4. Even the celestials are not the equals of the mortals who this day have seen to satisfaction in Chitrakudam in Chidambaram, Him who quitting Ayodya at the instance of Kaikesi whose curled locks bear bunches of opening blossoms, and crossing the Ganges with the help of the devoted Guha, went into the forest and relinquished unto Bharatha the Lordship of Ayodhya.

5. This world is blessed because it has inhabiting it, those who are able to bow their heads and fold their arms in worship of Him at Chitrakudam in Chidambaram, who killed Virata with valiant mountain-like conquering shoulders, who taking from sage Agasthia the establisher of Tamil the bent bow marked with lines, cut off the nose of Surpanaka with eyes like a deer, who killed Kara and Dhusha and with His bow struck dead Maricha who assumed the form of a stage.

6. தனமருவு வைதேவி பிரியலுற்றுத்
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத் தேற்றி
வனமருவு கவியரசன் காதல் கொண்டு
வாலியைக்கொன் றிலங்கைநக ரரக்கர் கோமான்
சினமடங்க மாருதியால் சுடுவித்தானை
தில்லைநகர் திருச்சித்திர கூடந்தன்னுள்
இனிதமர்ந்த வம்மானை யிராமன் தன்னை
யேத்துவார் ரிணையடியே யேத்தினேனே.

7. குரைகடலை யடலம்பால் மறுகவெய்து
குலைகட்டி மறுகரையை யதனாலேறி
எரிநெடுவே லரக்கரொடு மிலங்கைவேந்தன்
இன்னுயிர் கொண் டவன்தம்பிக் கரசுமீந்து
திருமகளோ டினிதமர்ந்த செல்வன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
அரசமர்ந்தான் அடிசூடு மரசையல்லால்
அரசாக வெண்ணேன்மற் றரசுதானே.

8. அம்பொனெடு மணிமாட வயோத்தி யெய்தி
அரசெய்தி அகத்தியன்வாய்த் தான்முன்
[கொன்றன்
தன்பெருந்தொல் கதைகேட்டு மிதிலைச் செல்வி
உலகுய்யத் திருவயிறு வாய்த்தமக்கள்
செம்பவளத் திரள்வாய்த்தன் சரிதைகேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
எம்பெருமான் தன்சரிதை செவியால் கண்ணால்
பருகுவோம் இன்னமுதம் மதியோ மொன்றே.

6. I praise the feet of them that praise Sri Rama seated benignantly at Chitrakudam in Chidambaram, Him who wearied with separation from Sita raised up to salvation Jatayu and out of friendship for Sugreva killed Vali and finally set fire through Hanuman to the city of Lanka.

7. I hold not ought as lordship save that which bows before the feet of that benignant Lord who at Chitrakudam in Chidambaram abides with Lakshmi having confounded the sounding seas with his arrow and having crossed to the other shore over the bridge laid athwart, slew the king of Lanka and his valiant nobles, bearers of gleaming spears and gave unto his brother Vibishana, the lordship of Lanka.

8. We hold the nectar of the celestials cheap who with eyes and ears have fed on the nectar of the Lord's story, His who abides at Chitrakudam in Chidambaram, who returning to Ayodya and being crowned there, spent a season of restfulness at the asram of Agastya and from the mouths of his own sons Lava and Kusa born of the Lady of Mithila for the salvation of the world, heard recapitulate the old old story of His victory over Ravana.

9. செறிதவச்சம் புகன்றன்னைச் சென்று கொன்று
செழுமறையோ னுயிர்மீட்டுத் தவத்தோனீந்த
நிறைமணிப்பூ ணணியுங்கொண் டிலவணன்றன்னைத்
தம்பியால் வானேற்றி முனிவன் வேண்ட
திறல்விளங்கு மிலக்குமனைப் பிரிந்தான் றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
உறைவானை மறவாத வுள்ளந் தன்னை
யுடையோம்மற் றுறுதுயர மடையோமின்றே.

10. அன்றுசரா சரங்களைவை குந்தத்தேற்றி
அடலரவப் பகையேறி யசுரர்தம்மை
வென்று இலங்கு மணிநெடுந்தோள் நான்கும் [தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம்மேவி
சென்றினிது வீற்றிருந்த வம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
என்றும் நின்ற னவனிவனென் றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ வெப்பொழுதும் தொண்டீர் [நீரே.

9. We never shall suffer from sorrow, who ever bear in mind the Lord, who abides at Chitrakudam in Chidambaram, who having sought out and killed Jambuka raised to life the chanter of the Vedas and bestowing the radiant garland of rubies on Elavanasura caused him, to be sent to heaven by his brother Sathrugna and who finally at the request of the sage parted from his brother Lakshmana.

10. Oh ye devotees, praise Him every day as abiding permanently at Chitrakudam in Chidambaram, Him who gave salvation to all things movable and immovable who mounting on Garuda the enemy of the snakes, went forth and conquered His enemies and who with His four radiant, shoulders is greeted by all the celestials.

11. தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான் றன்னை
எல்லையில்சீர்த் தயரதன்றன் மகனாய்த்தோன்றிற்
றதுமுதலாத் தன்னுலகம் புக்கதீறா
கொல்லியலும் படைத்தானைக் கொற்றவொள்வாள்
கோழியர்கோன் குடைக்குலசேகரன் சொற்
[செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும்வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணுவாரே.

---

11. I, Kulasekhara, king of Woraiyur, bearer of the radiant Victorious sword and master of the slaying hosts of arms have in good Tamil in a garland of ten stanzas sung from His birth as a son of Dasaratha of boundless fame to His disappearance into His own world as Light! Sung the Lord who abides with valiant Hanuman at His side in Chitrakudam in Chidambaram. Those who are competent to understand these shall attain to salvation at the feet of prosperity-bestowing Sri Narayana.

I. பெரியதிருமொழி 1.

(திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்தது)

சங்காபரணம் ராகம் - அடதாளம்.

1. ஊன்வாட உண்ணாதுயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப் புலனைந்து நொந்து
தான்வாடவாடத் தவஞ்செய்ய வேண்டா
தமதாவிமையோ ருலகாளகிற்பீர்
கானுட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்
தேனுடமாடக் கொடியாடு தில்லைத்
திருச்சித்திர கூடஞ்சென்று சேர்மின்களே.

2. காயோடு நீடுகனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா
திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர்
வாயோது வேதம் மலிகின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்திர கூடஞ்சென்று சேர்மின்களே.

3. வெம்புஞ்சினத்துப் புனக்கேழ லொன்றாய்
விரிநீர் முதுவெள்ளம் உள்புக்கழுந்த
வம்புண் பொழில்சூ ழுலகன்றெடுத்தான்
அடிப்போது அணைவான் விருப்போ டிருப்பீர்
பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து
படை மன்னவன் பல்லவர்கோன் பணிந்த
செம்பொன்மணி மாடங்கள் சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திர கூடஞ்சென்று சேர்மின்களே.

4. அருமா நிலம் அன்றளப்பான் குறளாய்
அவுணன் பெருவேள்வியிற் சென்றிரந்த
பெருமான் திருநாமம் பிதற்றிநுந்தம்
பிறவித்துயர் நீங்குதும் என்னகிற்பீர்
கருமாகடலுள் கிடந்தானுவந்து
கவைநா வரவின் அணைப்பள்ளியின் மேல்
திருமால் திருமங்கை யொடாடுதில்லைத்
திருச்சித்திரகூடஞ் சென்று சேர்மின்களே.

5. கோமங்க வங்கக் கடல்வைய உய்யக்
குலமன்னரங்கம் மழுவில்துணிய
தாமங்கு அமருட் படைதொட்ட வென்றித்
தவமாமுனியைத் தமக்காக்ககிற்பீர்
பூமங்கைதங்கிப் புலமங்கைமன்னிப்
புகழ்மங்கை யெங்குந் திகழப் புகழ்சேர்
சேமங்கொள் பைம்பூம் பொழில்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திர கூடஞ்சென்று சேர்மின்களே.

6. செய்வாயமலம்பு துரந்துமுன்னீர்
துணியப் பணிகொண்டு அணியார்ந்து
இலங்கு மையார் மணிவண்ணனை யெண்ணி நுந்தம்
மனத்தே யிருத்தும்படி வாழவல்லீர்
அவ்வாய் இளமங்கையர்பேசவுந் தான்
அருமா மறை அந்தணர் சிந்தைபுக
செவ்வாய்க் கிளிநான்மறை பாடுதில்லைத்
திருச்சித்திரகூடஞ் சென்று சேர்மின்களே.

7. மௌவற் குழலாய்ச்சி மென்தோள் நயந்து
மகரஞ்சுழலச் சுழல்நீர்பயந்த
தெய்வத் திருமாமலர் மங்கைதங்கு திருமார்பனைச்
சிந்தையுள் வைத்துமென்பீர்
கௌவைக் களிற்றின் மறுப்பும் பொறுப்பில்
கமழ்சந்து முந்தி நிவாவலங்கொள்
தெய்வப் புனல் சூழ்ந்த அழகாய தில்லைத்
திருச்சித்திர கூடஞ்சென்று சேர்மின்களே.

8. மாவாயினங்கம் மதியாதுகீறி
மழைமாமுது குன்றெடுத்து ஆயர்தங்கள்
கோவாய் நிரைமேய்த்து உலகுண்ட
மாயன் குரைமாகழல் கூடுங் குறிப்புடையீர்
மூவாயிரம் நான்மறையாளர் நாளும் முறைபால்
[வணங்க
அணங்காய சோதி
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்திர
கூடஞ்சென்று சேர்மின்களே.

9. செருநீலவேற்கண் மடவார்திறத்துச்
சினத்தோடு நின்று மனத்தால் வளர்க்கும்
அருநீலபாவம் அகலப்புகழ்சேர்
அமரர்க்கும் எய்தாத அண்டத்திருப்பீர்
பெருநீர் நிவாவுந்தி முத்தம்கொணர்ந்து
எங்கும் வித்தும் வயலுள் கயல்பாய்ந்து உகள
திருநீலம் நின்று திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திர கூடம் சென்று சேர்மின்களே.

10 சீரார் பொழில் சூழ்ந்து அழகாய தில்லைத்
திருச்சித்திர கூடத்துறை செங்கண்மாலுக்கு
ஆராதவுள்ளத் தவர்கேட்டுவப்ப
அலைநீருலகுக்கு அருளே புரியும்
காரார் புயற்கைக் கலிகன்றி குன்றா வொலிமாலை
யோரொன்பதோ டொன்றும் வல்லார்
பாரார் உலகம் அளந்தான் அடிக்கீழ்ப்
பலகாலம் நிற்கும்படி வாழ்வர் தாமே.

I. பெரியதிருமொழி 2.

மோகன ராகம் - ஆதிதாளம்.

1. வாடமருதிடை போகி மல்லரைக் கொன் றொக்கலித்
[திட்டு
ஆடல்நன் மாவுடைத்து ஆயராநிரைக் கன்றிடர்
தீர்ப்பான்
கூடிய மாமழை காத்த கூத்தனென வருகின்றான்
சேடுயர் பூம்பொழில் தில்லைச் சித்திர
[கூடத்துள்ளானே.

2. பேய்மகள் கொங்கை நஞ்சுண்ட பிள்ளைபரிசிது
[வென்றால்
மாநிலமாமகள் மாதர்கேள்வ னிவனென்றும்வண்டுண்
பூமகள்நாயக னென்றும் புலங்கெழு கோவியர்பாடி
தேமலர்தூவ வருவான் சித்திரகூடத்துள்ளானே.

3. பண்டிவன் வெண்ணெயுண்டான் என்றாய்ச்சியர்
[கூடியிழிப்ப
எண்டிசை யோரும்வணங்க இணைமருதூடு நடந்திட்டு
அண்டரும் வானத்தவரும் ஆயிரநாமங்களோடு
திண்டிறல் பாடவருவான் சித்திரகூடத் துள்ளானே.

4. வளைக்கை நெடுங்கண் மடவார் ஆய்ச்சியர் அஞ்சி
[யழைப்ப
தளைத்தவிழ் தாமரைப்பொய்கைத் தண்டடம்புக்கு
[அண்டர்காண

முளைத்த வெயிற்றழல் நாகத்துச்சியில் நின்று
[அதுவாட
திளைத்தமர் செய்து வருவான் சித்திரகூடத்
[துள்ளானே.

5. பருவக் கருமுகிலொத்து முத்துடை மாகடலொத்து
அருவித்திரன் திகழ்கின்ற வாயிரம்பொன்
[மலையொத்து
உருவக்கருங்குழல் ஆய்ச்சி திறத்தின மால்விடை
[செற்று
தெருவில் திளைத்து வருவான் சித்திர கூடத்
[துள்ளானே.

6. எய்யச்சிதைந்த திலங்கை மலங்க வருமழை காப்பான்
உய்யப் பருவரை தாங்கி யாநிரை காத்தா னென்
[றேத்தி
வையத் தெவரும் வணங்க அணங்கெழுமாமலை
[போலே
தெய்வப்புள் ளேறிவருவான் சித்திரகூடத்
[துள்ளானே.

7. ஆவரிவைசெய் தறிவார் அஞ்சனமாமலை போலே
மேவுசினத்தடல் வேழம் வீழமுனிந்து அழகாய
காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதிவருவான்
தேவர் வணங்கு தண்தில்லைச் சித்திரகூடத்
[துள்ளானே.

8. பொங்கியமரில் ஒருகால் பொன்பெயரோனை வெருவ
அங்கவனாகம் அளைந்திட் டாயிரந்தோ ளெழுந்தாட
பைங்கணி ரண்டெரிகான்ற நீண்டவெயிற்றொடு
[பேழ்வாய்
சிங்கவுருவின் வருவான் சித்திரகூடத்துள்ளானே.

9. கருமுகில் போல்வதோர் மேனி கையனவாழியும்
[சங்கும்
பெருவிறல் வானவர்சூழ ஏழுலகுந் தொழுதேத்த
ஒருமகளாயர் மடந்தை யொருத்தி நிலமகள் மற்றைத்
திருமகளோடும் வருவான் சித்திரகூடத் துள்ளானே.

10. தேனமர் பூம்பொழில் தில்லைச் சித்திரகூட மமர்ந்த
வானவர் தங்கள்பிரானை மங்கையர்கோன் மருவார்
ஊனமர் வேற்கலிகன்றி யொண்டமிழ் ஒன்பதோ
[டொன்றும்
தானிவை கற்று வல்லார் மேல் சாரா தீவினை தானே.

II. திருவயிந்திரபுரம்

செஞ்சுருட்டி ராகம் - ஆதிதாளம்

1. இருந்தண் மாநிலம் ஏனமதாய் வளை மருப்பினி
[லகத்தொடுக்கி
கருந்தண் மாகடற் கண்டுயின் றவனிடம் கமல நன்
[மலர்த் தேறல்
அருந்தி இன்னிசை முரன்றெழு மளிகுலம் பொதுளி
[யம் பொழி லூடே
செருந்தி நாண்மலர் சென்றணைந் துழிதரு திருவயிந்
[திரபுரமே.

2. மின்னுமாழியங் கையவன் செய்யவ ளுறை திரு
[மார்பன்
பன்னு நான்மறைப் பல்பொருளாகிய பரனிடம்
[வரைச் சாரல்
பின்னு மாதவிப் பந்தலில் பெடைவரப் பிணியவிழ்
[கமலத்து
தென்ன வென்று வண்டின்னிசை முரல்தரு திருவயிந்
[திரபுரமே.

3. வையமேழு முண்டாலிலை வைகியமாயன் அடியவர்க்கு
மெய்யனாகிய தெய்வநாயகனிடம் மெய்தகு வரைச்
[சாரல்
மொய்கொள் மாதவி சண்பக முயங்கிய முல்லையங்
[கொடியாட
செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு திருவயிந்
[திரபுரமே.

4. மாறுகொண்டுடன் றெதிர்ந்தவல் லவுணன் றன்
[மார்பகம் இருபிளவா
கூறு கொண்டவன் குலமகற் கின்னருள் கொடுத்த
[தவனிடம் மிடைந்து
சாறுகொண்டமென் கரும்பிளங் கழைதகை விசும்புற
[மணி நீழல்
சேறுகொண்டதன் பழனமதெழில் திகழ் தரு
[திருவயிந்திரபுரமே.

5. ஆங்குமாவலி வேள்வியி லிரந்து சென்றகலிட
[மளந்து ஆயர்
பூங் கொடிக்கின விடைபொரு தவனிடம் பொன்மலர்
[திகழ் வேங்கை
கோங்கு செண்பகக் கொம்பினில் குதிகொடு குரக்
[கினம் இரைத் தோடி
தேன்கலந்த தண் பலங்கனி நுகர்தரு திருவயிந்
[திரபுரமே.

6. கூனுலாவிய மடந்தைதன் கொடுஞ்சொலின் திறத்து
[இளங்கொடியோடும்
கானுலாவிய கருமுகில் திருநிறத் தவனிடம் கவி
[னுகும்
வானுலாவிய மதி தவழ் மால்வரை மாமதிள்
[புடைசூழ
தேனுலாவிய செழும்பொழில் தழுவிய திருவயிந்
[திரபுரமே.

7. மின்னில் நுண்ணிடை மடக்கொடி காரணம் விலங்
[கலின் மிசை யிலங்கை
மன்னன் நீண்முடி பொடிசெய்த மைந்தன திட
[மணிவரை நீழல்
அன்ன மாமலர் அரவிந்தத் தமளியில் பெடை
[யொடும் இனி தமர
செந்நெலார் கவரிக்குலை வீசு தண் திருவயிந் திரபுரமே.

8. விரைகமழ்ந்த மென்கருங்குழல் காரணம் வில்லிறுத்து
[அடல் மழைக்கு
நிரை கலங்கிட வரைகுடை யெடுத்தவன் நிலவிய
[விடம் தடமார்
வரைவளந் திகழ் மதகரி மருப்பொடு மலைவள
[ரகிலுந்தி
திரை கொணர்ந்தணை செழுநதி வயல்புகு
[திரு வயிந்திரபுரமே.

9. வேல்கொள் கைத்தலத்தரசர்வெம் போரினில்
[விசயனுக்காய் மணித் தேர்க்
கோல்கொள் கைத்தலத் தெந்தை பெம்மானிடம்
[குலவு தண்வரைச்சாரல்
கால்கொள் கண்கொடிக் கையெழுக் கமுகிளம்
[பாளைகள் கமழ்சாரல்
சேல்கள் பாய்தரு செழுநதி வயல்புகு திருவயிந்திர
[புரமே.

10. மூவராகிய வொருவனை மூவுலகுண் டுமிழ்ந் தளந்தானை
தேவர் தானவர் சென்று சென் றிறைஞ்சத்தண்
[திருவயிந்திர புரத்து
மேவு சோதியை வேல்வல வன்கலிகன்றி விரித்
[துரைத்த
பாவு தண்தமிழ் பத்திவை பாடிடப் பாவங்கள்
[பயிலாவே.

III. திருக்கோவலூர்

ஆரபி ராகம் - ஆதிதாளம்

1. மஞ்சாடு வரையேழும் கடல்களேழும் வானகமும்
மண்ணகமும் மற்றுமெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த வீசன் தன்னை
துஞ்சாநீர் வளம் சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூய நான்மறையாளர் சோமுச் செய்ய
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

2. கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தந் தூபம்
தீபங் கொண்டமரர் தொழ
பணங்கொள் பாம்பில் சந்தணிமென் முலைமலரான்
தாணி மங்கை தாமிருவர் அடிவருடும்
[தன்மையானை,
வந்தனை செய்து இசையே ழாறங்கம் ஐந்து
வளர் வேள்வி நான்மறைகள் மூன்றுதீயும்
சிந்தனை செய்திருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

3. கொழுந்தலருமலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக்
கோள் முதலை வாளெயிற்றுக் கொண்டற் கெள்கி
அழுந்திய மாகளிற்றினுக்கு அன்றாழியேந்தியந்தரமே
வரத்தோன்றி யருள்செய்தானை

எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில்காட்ட இரும்புன்னை
முத்தரும்பிச் செம்பொன் காட்ட
செழுந்தடநீர்க் கமலந்தீ விகைபோற்காட்டுந்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

4. தாங்கரும்போர் மாலிபடப் பறவையூர்ந்து தரா
தலத்தோர் குறைமுடித்த தன்மையானை
ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும்
அடியவர்கட்காரமுத மானான் தன்னை
கோங்கரும்பு சுரபுன்னை குரவார்சோலைக் குழாவரிவண்
டிசைபாடும் பாடல்கேட்டு
தீங்கரும்பு கண்வளரும் கழனிசூழ்ந்த திருக்கோவ
லூரதனுள் கண்டேன் நானே.

5. கறைவளர்வேற் கரன்முதலாக் கவந்தன் வாலி
கணையொன்றினால் மடிய
இலங்கை தன்னுள் பிறையெயிற்று வாளரக்கர்
சேனையெல்லாம் பெருந்தகையோ
டுடன் துணித்த பெம்மான் தன்னை
மறைவளரப் புகழ்வளர மாடந்தோறும் மண்டப
மொண்டொளி அனைத்தும் வாரமோத
சிறையணைந்த பொழிலணைந்த தென்றல் வீசும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

6. உறியார்ந்த நறுவெண்ணெ யொளியாற் சென்றங்
குண்டானைக் கண்டாய்ச்சி யுரலோடார்க்க
தறியார்ந்த கருங்களிறே போல்நின்று தடங்கண்கள்
பனிமல்குந் தன்மையானை

வெறியார்ந்த மலர்மகள் நாமங்கையோடு வியன்கலை
யெண்தோளினுள் விளங்கு.
செல்வச் செறியார்ந்த மணிமாடந் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

7. இருங்கைம்மா கரிமுனிந்து பரியைக் கீறி இனவிடை
கள் ஏழடர்த்து மருதஞ் சாய்த்து
வருஞ்சகடம் இறவுதைத்து மல்லையட்டு வஞ்சஞ்
செய் கஞ்சனுக்கு நஞ்சானை
கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளங்காட்ட
செருந்தி மிக மொட்டலர்த்துந் தேன் கொள் சோலைத்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

8. பாரேறு பெரும்பாரம் தீரப்பண்டு பாரதத்துத்
தூதியங்கி பார்த்தன் செல்வத்
தேரேறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை செருக்
களத்துத் திறலழியச் செற்றான் தன்னை
போரேறொன் றுடையானு மளகைக் கோனும்
புரந்தரனும் நான்முகனும் பொருந்து மூர்போல்
சீரேறுமறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூ
ரதனுள் கண்டேன் நானே.

9. தூவடிவில் பார்மகள் பூமங்கையோடு சுடராழி
சங்கிருபால் பொலிந்து தோன்ற
காவடிவில் கற்பகமே போலநின்று கலந்தவர்கட்கு
அருள் புரியும் கருத்தினானை

சேவடி கை திருவாய்கண் சிவந்த ஆடை செம்பொன்
செய் திருவுருவ மானான் தன்னை
தீவடிவில் சிவனயனே போல்வார்மன்னு திருக்கோவ
லூரதனுள் கண்டேன் நானே.

10. வாரணங்கொள் இடர்கடிந்தமாலை நீலமரகதத்தை
மழைமுகிலே போல்வான்றன்னை
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவ
லூரதனுள் கண்டேனென்று
வாரணங்கு முலைமடவார் மங்கை வேந்தன் வாட்கலிய
னொலியைந்தும் ஐந்தும் வல்லார்
காரணங்களா லுலகம் கலந்தங்கேத்தக் கரந்தெங்கும்
பரந்தானைக் காண்பார்தாமே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

IV. ஸ்ரீ முஷ்ணம்

ஸ்ரீ பூவராகரைப் பற்றிய ஸ்தோத்திரங்கள்

1. மோக்க முடன் முத்தொழிற்கு மூவாத வொரு
[தனியே மூலமாயை
தாக்கவற விளைஞான சத்துவ நற்குணநிதியே
[சதாவினோதம்
போக்கலறப் பார்ப்பானே பொறிபுலன்கள் மேயானே
[புவிவான் சூழ
நீக்கமற நிறைவானே நினைவனைத்தும் புரிவானே
[நிமலத்தேவே.

2. யோனிலிங்க விந்துபந்த பாசமிலா தெழுங்கோல
[வுருவேயோக
ரானியற வளப்பூமே லத்தாணி யமர்கருணை மையே
[நாயேன்
பனியமாங் கடல்ஞாலம் படும்படர்வெம் பழங்கணறப்
[பார்த்திப்பாரை,
தானியதி னிலையாற்றறந்து புரந்தகுனோ டந்தண்டாக்
[கோவே.

3. அவனி யெம்மம்மைக் கருள்புரி முட்டத்தமல
[பல்லாண்டு நின்னகன்ற
புவனியிற் பொலிந்த நித்தியமான பூந்தடமினிது
[பல்லாண்டு

சிவனினும் விரிஞ்சியினும் இருந்தோங்குந் திருமகள
[மூக பல்லாண்டு
பவனனி யுடைய கரவராமெமையும் பரிந்தருணிற்குப்
[பல்லாண்டே.

4. பூமிவராக புனித பல்லாண்டு பொலிந்திடு நீலவராகச்
சாமி பல்லாண்டு சவியாசப் பேர்தருக்குப் பல்லாண்
[டடரிமைய
வாமியாகிடுவராக பல்லாண்டு வனசையோடநந்தக்
[கொத்தவரு
நேமமோ புனிதைம் படையுடன் விளங்கு நித்தனே
[யுனக்குப் பல்லாண்டே.

5. வெண்ணிறச் சோதியாகு சுவேத வீர வராக
[பல்லாண்டு
நண்ணிடு வேத நாதவராக நாரண நினக்குப்
[பல்லாண்டு
பண்ணுறுஞான வொளிப்பொரு ளுருவாம் பரம
[வராகப் பல்லாண்டு
தண்ணுறு மாயிரத் தெண்மா தீர்த்தத் தடத்துடன்
[நினக்குப் பல்லாண்டே.

6. அத்தனே யென நின்னருட்குண கணத்தாழ்வார்
[களாரியற்குப் பல்லாண்டு
நத்தனே யாழிநாதனே யெனவுண்ணிணையு நாவலர்க்
குப் பல்லாண்டு

சுத்தனே கருணைக்கண்ணனே யென்னுன் காற்றொழு
[மவர்க்குப் பல்லாண்டு
நித்தநின் றொழும்பினிலே யுறுமடியார் யாரு நீடூழி
[பல்லாண்டே.

7. போற்றியோ நமவராக நின்றாட்குப் போற்றியோ
[நம வராசாநுகட்குப்
போற்றியோ நமவராக நின்பொற்றாசசை தொடை
[கடியிடைகளுக்குப்
போற்றியோ நமவராகனே பகுதிமருவுள புனித
[மார்பினுக்குப்
போற்றியோ நமவராக நின்னகிலம் பொருந்து
[பூண்சால பண்டினுக்கு.

8. போற்றியோ நமவராகனே புருடத்துவமணி பொலி
[நினக்குப்
போற்றியோ நமவராகனே யருட்டாய் பொலிந்தருள்
[புரிநிறத்தினுக்கு,
போற்றியோ நமவராகனே அயனைப்பூத்த பொற்று
[மரைப்பூக்குப்
போற்றியோ நமவராகனின் புயங் கை முகங்கண்வாய்
[செவி முடிப்பூக்கு.

9. போற்றி யென்பூத் தோன்றப்பனே யடியேன்
[பொற்றொடிமய லினியாப்புண்டு
ஏற்றனே யெண்ணு வசத்தியனுகி யீனவைம்புல
[மெனுங்கள்ளைத்

தோற்ற மற்றுண்டன்னவர் முனங்கடையனுகி,
[வாசித்தவிஞ்ஞைசகளை
மாற்றி யன்னவர் காற்கடையினில் வீழ்ந்து வருந்தி
[னன் றிருந்திலேன் வரதா.

10. பூவெடுத் தமைத்தளித்த பூவராகன் வாழியே
பூப்பிராட்டியாருக்கு நான்கு பொருளுரைத்தான்
[வாழியே
காவெடுத்த வரசு துளவு கண்ணிலிட்டான் வாழியே,
கரிசி ரெண்டு புரிகுவாரெண யாவுமீய்வான் வாழியே,
பாவெடுத்தவம்புயத்து வல்லியாரும் வாழியே
பாழியிற் றெண்டாற்றி வாழும் பகவர் நாளும்
[வாழியே
கோவெடுத்த பேர்க்கிரண்டு புயங்கொடுத்தான்
[வாழியே
கொற்றமாஞ் சீமுட்டம் வாழும் கோலநாதன்
[வாழியே.

65900

N 37

Printed at the Pearl Press, 19, Davidson Street, Madras.